PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISVANATHA CHETTIAR
PAGANERI.

# சகுந்தலா நாடகம்

# SAKUNTALAM


By

Vidwan A. K. Athithar,

*Proficient in Oriental Learning,*

**Madras Christian College School, G. T., Madras.**



*Copies can be had from*

VIDWA PEEDAM,

90, BARBERS BRIDGE,

MYLAPORE, MADRAS.


*Rights Reserved.*] 1938 [*Price Re.* ***1-4-0.***

READ & Co.,
TRIPLICANE,
MADRAS.

# முகவுரை

1937 ஜனவரி மாதம் 17-ந் தேதி மாலையில் சென்னை ராயல் தியேற்றருக்கு நாடகம் பார்க்கச் சென்றிருந்தேன். ஸ்ரீ ஸ்தானம்—நரசிம்ம ராவ் ஒப்பு உயர்வு அற்ற நிலையில் சகுந்தலா வேடந் தாங்கி நடித்தது தமிழ் நாடக மேடையைப் பற்றி எண்ணி என் நெஞ்சு கவலச் செய்தது. அந்நேரத்தில் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த ஸ்ரீ பாலக்காடு T. S. பரமேஸ்வர ஐயர் ஞாபகம் என் மனத்தில் உதித்தது.

அமைவுடைய நிலையான நாடக சபை நிறுவி, நாடகக் கலையை உரிய முறையில் ஓம்பிவந்தவர் ஸ்ரீ பரமேஸ்வர ஐயரே. அவருக்குப் பின் அமைவு என்பது அழிந்தது; நாடக சபை என்பது காட்சி மண்டபம், சங்கீதக் கச்சேரி, விகடக் கூட்டம், போட்டிப் பரண் என்று கூறத்தக்க நிலையில் மாறிவிட்டது. இவற்றைக் கண்ணுற்ற அறிஞர் அதனை வெறுத்துவந்தனர். ஆயினும், பெருமை சால் M. G. நடராஜ பிள்ளை, K S. அநந்தநாராயண அய்யர், P. சம்பந்த முதலியார், K. P. கேசவன், P. சாரதாம்பாள் போன்ற வல்லுநர் சிலரின் திறமையால் நாடகக் கலை அழியாது ஆங்காங்குத் தளிர்காட்டி நின்றது.

பிற பாஷைகளின் மோகத்தில் ஆழ்ந்த தமிழ் நாட்டார் தமிழ் நூல்களைப் படிப்பதில்லையே! கம்பர் தந்த இராமாயணம், கலித்தொகை இந்த இரண்டையும் கற்று அங்குக் கூறப்படும் செயல்களை உன்னுவார்களாயின், நாடகம் தானே வளர்ந்துவிடும். நடை, உடை, ஊண், உறவுமுறைமட்டு மன்றி, விளையாட்டும் அந்நிய மயமாகித் தோன்றும் இக்காலத்தில் தமிழ்க் கலையைப்பற்றிக் கூறிப் பயனென்?

ஸ்ரீ ஸ்தானம்—நரசிம்ம ராவ் நடிக்க, அதைக் கண்டு ஆநந்தித்த என் மனம் மிக்க மெய்ப்பாடு அமைந்த இக்கதை

யைத் தமிழில் வெளிப்படுத்தவேண்டும் என்று உன்னிற்று. நாடகக் கலை தமிழில் வளராமல் மங்குவதற்குக் காரணம் போதிய அளவில் ரஸமான சிறுசிறு நாடக நூல்கள் இல்லாமையுமாகும் என்று எண்ணி அக்குறையைக் களைவான் இதை வெளியிடலானேன்.

இம் மொழிபெயர்ப்புத் தொண்டில் எனக்கு மிக்க உதவி புரிந்தவர் எம் கலாசாலைத் தெலுங்கு ஆசிரியரும், வடமொழி வல்லுநரும், கவிபூஷணருமான அஷ்டாவதானம் D. வேங்கடசாமி குப்தா அவர்கள். கவிபூஷணர் குணபூஷணருமாதலின் யான் எவ்வாறு அவரை மறக்க முடியும்!

சென்னைத் திருவல்லிக்கேணி ரீட் அண்டு கம்பெனியார் மிகத் திருத்தமாகச் சிறுகால அளவையுள் இந்நூலை அச்சிட்டு உதவினார்கள். அவர்கட்கும் என் நன்றி உரியதாகுக.

இது நாடக நூலாதலின், வாசிக்கும் அன்பர்கள் அந்தந்தப் பாத்திரமாகத் தம்மைப் பாவித்து குரல் மாற்றி வாசிப்பார்களாக. சிற்றெழுத்தில் தோன்றுவனவற்றை இசைத் திறம் படைத்தோர் பாடுக, மற்றோர் பேசுக. எவ்வாற்றினும் உணர்ச்சியுடன் தெளிவாகக் கருத்தை வெளிப்படுத்துவோமாயின், கேட்டிருப்போருக்கு நாம் மிகவும் பயன்பட்டவராவோம் என்பதில்ஐயமில்லை. உரிய உருவம், உரிய சொன்முறை, உரிய மெய்ப்பாடு, உரிய துணைக்காட்சி கொண்டு, உலகியலைத் திறம்படக் காட்டி, உள்ளார் மனத்தை ஒளி பெறச் செய்வதே நாடகம் என்பதை மறவாது அன்பர்கள் இந்நூலைப் பயன்படுத்துவார்களாக.

பொருளீட்டும் துறையில் இதைப் பயன்படுத்த எண்ணுவோர் எம்மைக் கேட்டுச் செய்க.

நூற்பயன்.

விற்பனப் புலவன்
அற்புதக் காதை
கற்பவர் தம்மைச்
சற்குண ராக்கும்.

# கதையின் முக்கிய உறுப்புக்கள்

1. துஷ்யந்தன்—*கதைத் தலைவன்*
2. சகுந்தலா—*தலைவி*
3. அநசூயா } —*தோழியர்*
4. பிரியம்வதா }
5. கௌதமி—*தலைவிக்குத் தாய்*
6. காசிபர்—*தலைவிக்குத் தந்தை*
7. பரதன்—*அரச புத்திரன்*
8. சாரதி
9. விதூஷகன்
10. சாருங்கவன் } —*ரிஷி குமரர்*
11. நாரதன் }
12. கஞ்சுகி
13. பிரதிகாரி
14. புரோகிதர்
15, 16. போலீஸார்
17. ஏட்டு
18. பரதவன்
19. ஸானுமதி

தவமாதர், தவசீடர், காவலர், தோழியர், பிறர்.

*சூத்திரதாரி, நடி, பிரதிகை, மதுரிகை, ஸதுரிகை, யவனமாது, மாதவி, மரீசி, அதிதி, ரைவதகன், சேனாதிபதி,—இப்பாகங்கள் மேடை வசதிக்காக ஒதுக்கப்பெறுகின்றன.*

உ

சிவமயம்

MAHAMAHOPADHYAYA
DAKSHINATYA KALANIDHI
**DR. V. SWAMINATHAIYAR,**
MADRAS.

'TYAGARAJA VILAS'
TIRUVETTEESWARANPET,
TRIPLICANE,
*23rd December 1938.*

சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதராகிய சிரஞ்சீவி வித்துவான் அ. குமரகுருபர ஆதித்தர் எழுதிய 'சகுந்தலா நாடகம்' என்னும் புஸ்தகத்திற் சில பகுதிகளைப் படித்துப் பார்த்தேன். இது பெரும்பாலும் வட மொழியிலுள்ள சாகுந்தலத்தைப் பின்பற்றி எழுதப்பட்டதென்று தெரிகின்றது.

இந்தக் காலத்துக்கேற்ற எளிய நடையில் இவர் இதனை எழுதியிருக்கின்றார். தமிழில் பல வகையான நூல்கள் வெளிவரவேண்டுமென்னும் விருப்பம் இக்காலத்தில் மிகுதியாக இருக்கிறது. அவற்றிலும் வசனநடை நூல்களை மக்கள் அதிகமாக விரும்புகிறார்கள். கதைகள் நாடகங்கள் என்பவை அவற்றுள்ளும் சிறப்பாகப் படிக்கப் பெறுகின்றன. இதனை உணர்ந்தே இந் நாடகத்தை இவர் எழுதி நன்றாக அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கிறாரென்று நினைக்கிறேன். இவருடைய தமிழன்பும் நன்முயற்சியும் பாராட்டற்குரியன. தமிழ் நாட்டினர் இப் புத்தகத்தை வாங்கிப் படித்து இவருக்கு ஊக்கமளிப்பார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,

**வே. சாமிநாதையர்.**

# சகுந்தலா நாடகம்

சென்னைக் கிறிஸ்தியன் காலெஜ் ஹைஸ்கூல் தமிழாசிரியர்

வித்வான் அ. கு. ஆதித்தர்

எழுதியது.

# சகுந்தலா நாடகம்

## கடவுள் வாழ்த்து

* ஆதி ஸ்ருஷ்டி நீரால், அவிப் பலி ஏற்றிடும் எரியால்,
அவிதந்திடும் யமனால், கால வரம்பார் இரு சுடரால்,
ஓதும் ஒலி வெளியால், யாவும் உதிக்கும் மணல் மாதால்,
உயிர்தந்தரு காக்கும் முறை உயர்வாகிய வளியால்,
பேத அஷ்ட மூர்த்திவடி வானபெரு மானை
பிரியா தெந்த நாளும்பதம் பணிவோம் ஜெயம் பெறுவோம்
மேதை காளிதாஸர் மிக மெய்ப்பாடுறு சரித
மேடைத்தானம் தந்தார்கண்டு தந்தோம் தமிழ் வளர்க.

---

* 'பித்தா பிறைசூடி'—என்ற மெட்டு.

# முன்னுரை

சூஸ்திரதாரி. அம்மணி, அலங்காரமெல்லாம் ஆய் விட்டதோ இல்லையோ? ஆய்விட்டால், சற்றே இப்படி வருகிறதுதானே.

நடி. ஸ்வாமி, இதோ அடியாள்.

சூஸ். அம்மணீ, படித்தவர்களாக நிறைந்துள்ள பெரும் சபை இது. இவர்கள் முன்னிலையில் இன்று சகுந்தலா நாடகம் நடிக்க ஏற்பாடாகியிருக்கிறது. இதுவோ காளிதாஸ மஹாகவி எழுதிய திவ்ய சரிதமாகும். ஆதலின் ஒவ்வொரு நடிகரும் திறம்பட நடிக்கவேண்டும்.

நடி. தங்களுடைய திறமையான கண்காணிப்பில் ஏது குறை தோன்றமுடியும்!

சூஸ். சரி. நான் உண்மையை உன்னிடம் சொல்கிறேன் கேள். கற்றவர்களெல்லாம் ஒப்புக்கொண்டாலன்றி, நான் முற்றும் வெற்றிபெற்றதாகக் கருதமாட்டேன். முற்றும் தெளியக் கற்றாலும், மாந்தர் இருதயம் சஞ்சலத்தை ஒழித்த பாடில்லையே.

நடி. ஸ்வாமி! அவ்வாறாயின் ஆகவேண்டியதென்ன என்று சொல்லியருளுங்கள்.

சூஸ். இதுவோ நல்ல வசந்தகால ஆரம்பம். மனத்துக்கு ரம்மியமாயிருக்கும். குளிர்ந்த நீரோடையில் போய் ஒரு குதி குதித்து ஒரு மூழ்கு மூழ்கலாம். பாதிரிமரத்துப் பூவாசனை காற்றில் கலந்து ஜம் என்று வரும். திவ்யமான நிழலில் உட்கார்ந்ததும் உறக்கத்துக்கு வழிகாட்டும். கடைசி

வரைக்கும் சகல சுகமுந் தந்து இன்பமாய் விளங்கும் இந்த நேரத்தில் உன்னை நான் வேறு என்ன கேட்கப்போகிறேன். நான் வேண்டுகிறதெல்லாம், இதோ வந்திருக்கிறவர்களுடைய இரண்டு காதுகளும் கேட்டுக் குளிரத்தக்க திவ்யமான ஒரு பாட்டுத்தான்.

நடி. அப்படியே செய்கிறேன்.

* விரியும் புதுநாள் மலர்மேல்
அரிய நறுந்தேனை யுண்ண
கரியவண்டு மேலேநின்று களியாடும்
இரு செவியில் ஏறியுள்ள
சிரீஷ மலர் மேவி, நல்ல
மெல்லியர்தம் கண்கள் நீண்டு உறவாடும்.

சூஸ். நிரம்ப அருமை. திவ்யமாயிருந்தது உன் கீதம். எல்லாரும் அப்படி.........லயப்பட்டுச் சித்திரம் மாதிரி இருந்துவிட்டார்கள். சரி. இப்போது இவர்கள் கண்டு மகிழ என்ன கதை நாம் நடத்தலாம்.

நடி. தாங்களே நவீன சகுந்தலா நாடகம் நடத்த வேண்டும் என்று சொன்னீர்களே.

சூஸ். இல்லை, துஷ்யந்த மஹாராஜன் மான் ஓட்டத்தில் லயித்து நின்றதுபோல, யானும் உன் பாட்டைக் கேட்டுச் சொக்கிப்போய்க் கதையை மறந்துவிட்டேன்.

(மறைதல்)

---

* 'சரணகமலாலயத்தை'—என்ற மெட்டு.

# காட்சி 1

[மான் ஒன்றைத் துரத்தி வில்லேந்தி அரசனும் சாரதியும் வருதல்]

சாரதி. வாழி, மன்னவா, வில்லேந்தி மானை நோக்கி நிற்கும் தங்களின் இந்நிலை, பிநாகம் ஏந்திய சாக்ஷாத் சிவ பெருமானையே என் கண்முன்னால் காட்டுகின்றது.

அரசன். சாரதி, இம்மான் நம்மை வெகுதூரம் அலைய வைத்துவிட்டது. இப்பொழுதும்,

*அம்பு தன்மேல் விழுமென்று அஞ்சி மருண்டு வாய்வைத்த*
*பைம்புல் விழவே விரைந்தோடும் பயத்தால் மீண்டும் நமைப் பார்க்கும்*
*இந்த மானின் சிறுகழுத்து என்னே அழகு! பின்பார்த்து*
*அந்தரத்தே நிற்பதைப்போல் அதன்கால் துள்ளிக் குதிப்பதைப்பார்.*

என்ன, நாம் இவ்வளவு நெருங்கி வந்தும், இதற்குள் அது மறைந்துவிட்டதே.

சார. மன்னவா, இந்த இடம் மேடு பள்ளமாயிருக்கிறது. ஆதலின் கடிவாளத்தை வீசிவிடாமல் சிறிதே இறக்கிப் பிடித்திருக்கிறேன். அதனால் மான் கொஞ்சம் எட்டச் சென்றிருக்கிறது. இதோ—சம தரை வந்துவிட்டது. அதி சீக்கிரமாக மானைக் காணலாம்.

அர. ஓஹோ, அவ்வாறாயின் கடிவாளத்தை விட்டுப் பிடி.

சார. அரசே, ஆக்ஞை! இதோ பாருங்கள் மானோடு இகலுவதுபோன்று நம் குதிரை ஓடுகிற ஓட்டத்தைப் பாருங்கள். முன்னங்கால்களை எட்டிப் போடுகிறது. நெற்றிச்சுட்டி ஆடாமல் அசையாமல் நேரே!! காதுகளும் நேரே நிமிர!! அது கால்பட்டு எழுந்த தூசியும் அதன்மேல் ஒட்டாதபடி, என்ன வேகம்!

துஷ்யந்தன். ஆஹா, நம் குதிரைகள் அருணனுடைய குதிரைகளேயும் வென்றுவிட்டன !

அணுவாய்த்தோன்றின கணத்தில் தூணாய்த்தோன்றும்
இரண்டாய் நிற்பவை உருவில் ஏகமாகும்
வளைந்தவையும் வேகத்தால் நேராய்த்தோன்றும்
வாய்ந்த எல்லாம் பரிவிரைவால் என்சமீபம் :
இருந்தாலும் அவை க்ஷணமும் நிலேத்தற்கில்லே
இப்புரவி போம்வேகப் போக்கென் சொல்வேன் !
அதோ ! மான் விழுந்தது. பார் !

(உட்புறம்) அரசே ! மான் ஆச்ரமத்திற்குரியது. அதைக் கொல்லாதே, மானைக் கொல்லாதே.

சார. மன்னவா, நின்கணை செல்லும் மார்க்கத்தில் சாதுக்கள் சிலர் தோன்றுகின்றனர்.

துஷ். சரி. குதிரையை நிறுத்து (திகைப்புடன்).

(சாது ஒருவர் இரு சிஷ்யர்களுடன் வரல்.)

சாது. அரசே ! (கை மேலெடுத்து) இம்மான் ஆச்ரமத்தி லுள்ளது. இதைக் கொல்லவேண்டா, கொல்லவேண்டா.

"மலர்ப்பொதியில் தழற்பொறியை வைத்தாற்போல மான் கோமள மேனியிலோ அம்பு பாய்தல்—இடிதருவிச்சென்ருற் போல் செலும் உன்அம்பு இலக்குவைப்ப திச்சிறு மான்மீதோ மன்ன !—அரசர்கையில் ஆயுதங்கள் தாங்கிநிற்றல் ஆபத்திலுற்ருர்க்கு அரணே செய்ய—ஆதலினுல் சிறுமானுக் கபயமீந்து, ஐய, ஏற்றிய கணையைத் தூணி சேர்ப்பாய்."

துஷ். அப்படியே செய்கிறேன்.

சாது. புரு வம்ஸ தீபமே, உன் பெருமைக்குத் தக்கதே புரிந்தாய்.

பார்த்திப, நீயே பாக்கியசாலி
எல்லாச் சம்பத்து மினிது படைத்து

மண்முழுதாளும் மன்னன் ஒருவனைப்
புதல்வனாய்ப்பெற்றுப் புகழுற வாழி !

சாது. (கைஉயர்த்தி) உண்மையாகவே நீ இப்பூமி முழுதும் பரிபாலிக்கும் ஒரு புதல்வனைப் பெறுவாய்.

அர. (வணங்கி) பெரியவர்கள் ஆசீர்வாதம்போல் நடக்கட்டும்.

சாது. அரசே, நாங்கள் சமித்துக்கள் சேர்க்கவேண்டிப் புறப்பட்டோம். இதோ சமீபத்தில் மாலினி ஆற்றங்கரையில் கண்வ மா்முனிவருடைய ஆச்ரமம் இருக்கிறது. இப்பொழுது சாவகாசமாயிருப்பின், ஆங்குச் சென்று அதிதி பூஜைபெறுக. வந்த விருந்தினரை அவர்கள், தகுதியறிந்து நன்கு உபசரிப்பார்கள். மேலும்,

வில்நாண் தழும்பேறிய நின்புஜ
வீரக்காவல் ஆட்சியும் பெரிதே
இன்னபேருண்மை, நோன்புகளாற்றி
இருடிகள் வாழும் மகிழ்வினால் அறிதி.

அர. ஆச்ரமத்து மஹரிஷி இப்பொழுதெங்கிருக்கிறார் ?

சாது. அவர் வந்த அதிதிகளை நன்கு உபசரிக்குமாறு, தம் மகள் சகுந்தலையிடம் சொல்லிவிட்டு, இப்பொழுதுதான் அவளின் கிரக சாந்திக்காகச் சோமதீர்த்தம் செல்கிறார்.

அர. நல்லது நான் அவளைக் கண்டு செல்கிறேன். கண்வ மாரிஷி வந்தபோது, நான் அவர்மீது கொண்டுள்ள பக்தி விநயத்தை அவள் எடுத்துச் சொல்வாள், அல்லவா !

சாது. சரி. நாங்கள் விடைபெறுகின்றோம். (மறைதல்).

அர. சாரதி, குதிரையைத் தட்டு. விரைந்து சென்று, ஆச்ரம தரிசனம் செய்து என் வாழ்வு புனிதமாகட்டும்.

சார. மன்னவா, நின் ஆணைப்படியே. (தேரை ஓட்டு கிருன்).

துஷ். இது தபோவனம் என்பது சொல்லாமலே தெரி கிறது. என்ன, சாரதி!

சார. எப்படி!

துஷ். இதோ பார்.

கிளிவாழும் பொந்தின் நீவார நெற்கள் சிந்திக்கிடப்பதையும் இங்கே—புங்கம் பழம் தல்லி அம்மிக் கற்கள்பல பொன்னிற மாக மின்னுவதையும்—அச்சம் சிறிதின்றித் தேரோசையைக் காதில் அடவிமான் வாங்கி நிற்பதையும்—அணிந்த மரவுரி நனைந்து வழி எலாம் நீர் சொட்டி ஈரமாயிருப்பதையும் காண்டி.

சார. அதெல்லாம் நிரம்ப சரி.

துஷ். (சற்று முன்வந்து) இதோ பார்.

செழுமா வேர்களில் ஊற்றுநீர் அலை,
செந்தளிர் மேலெலாம் ஆகுதி நெய்ப்புகை,
சூழ எங்கணும் குசப்புல் நாற்று இலை,
சுற்றிமேய்ந்துலாம் பயமிலாமான்தொகை.

சாரதி, தபோவனவாசிகட்கு நம்மால் எவ்வித இடை யூறும் இருக்கக்கூடாது. தேரை நிறுத்து. நான் இங்கேயே இறங்கிவிடுகின்றேன்.

சார. இதோ நிறுத்திவிட்டேன். மன்னவா, இறங்கலாம்.

துஷ். (சற்று நடந்து சுற்றுறப் பார்த்து) சரி. இத் தபோ வனத்துட்சென்று கவனிப்போம். (பிரவேசித்து நற்சகுனம் கண்டவன்போல்).

சாந்த மயமாய்த் திகழுமிந்தத்
தபோவனத்தின் அருகில்வர

நேர்ந்ததிஷ்ட சித்தி எனத்
துடிப்பதேனோ வலதுபுஜம்
ஆய்ந்த பொருளாய் அடைவதற்கு
யாது உண்டு இவ்வனத்தில்?
ஆமாம்! கொடுக்கும் தெய்வம் எங்கே
இருந்தாலும் கொண்டே கொடுக்கும்!

(திரைக்குள்) அடியே, இந்த வழியாய் வாருங்கள்.

துஷ். அந்த மரச் செறிவிற்கருகில் யாரோ பேசும் சத்தம் கேட்கிறதே. அங்குச் சென்று பார்க்கின்றேன். (சென்று கவனித்து) ஆஹா! ஆச்ரமத்திலுள்ள சில கன்னியர்கள் தங்கள் குடங்களை எடுத்து இளஞ்செடிகளுக்குத் தண்ணீர் வார்க்க வருகிறார்கள். (உற்றுப் பார்த்த வண்ணமாய்) ஆ! என்ன அழகான பெண்கள் !!

* வனமேவு தவநெறி மாதர் இவர்க்கரண்
மனைமாதர் ஈளும்நிகர்ஆகார்—மஞ்சு
நனைக்கும் குறிஞ்சிவளம் பெறுமோ மனைக்குள்வளர்
செடியும் பைங் கொடியும்.

சரி, நாம் அந்த மரநிழலில் போய் இருப்போம். (அவர்களையே பார்த்து நிற்கிறான், சகுந்தலாவும் தோழியர் இருவரும் வருகிறார்கள்).

சகுந்தலா. அடியே, இங்கே வாருங்கள், இப்படி.

அநசூயா. அடியே, அப்பா கண்வருக்கு உன்னைவிட இந்த ஆச்ரமச் செடிகளிடத்தில்தான் நிரம்பப் பிரியம். மல்லிகை மலர்போல இருக்கிற உன்னை இந்தப் பாத்திகளுக்குத் தண்ணீர்விடச் சொல்லியிருக்கிறாரே, பார்த்தையா.

---

* 'புள்ளிக்கலாபமயில்'—என்ற மெட்டு.

சகு. அப்பா சொன்னதால்தான் நான் செய்கிறேனா! இத்தனை செடியும் எனக்கு உடன்பிறந்தவர்கள்போலில்லையா! (ஜலம் வார்க்கிறாள்).

துஷ். இதுவோ கண்ணுவருடைய புதல்வி. இத்தகைய ஒரு பெண்ணை ஆச்ரம நெறிக்குள்ளாக்கிவைப்பது கண்ணுவ மஹரிஷிக்குத் தகாது.

கன்னியின் அழகைக் கருதாது தவ
சந்நியாசி யாக்கிய முனிவன்
நீலோற்பலத்தால் சமித்தும் அறுப்பான்
நோவதற்கின்றி நுவல என் உண்டு!

நல்லது. நான் இங்கு மறைந்திருந்து இவளை இன்னும் கவனிக்கின்றேன். (மரத்தடியில் மறைகின்றான்).

சகு. அநசூயா, பிரியம்வதை கொஞ்சமும் கவனியாமல் இந்தக் கச்சை அழுந்தக் கட்டிவிட்டாள். அதைக் கொஞ்சம் தளர்த்திவிடு.

அந. சரி. (தளர்த்துகிறாள்).

பிரியம்வதா. (சிரித்து) நேரத்துக்கு நேரம் தனத்தை வீறுகொள்ளச் செய்கிறது உன் யௌவனம். அதை நொந்து கொள்ளடி. என்னை ஏனடி நோகிறது!!

துஷ்யந்தன் :

* விருந்த புச்சம்மீது புறவிதழ் நின்று
விரிமொக்கை மூடுதல்போல்—ஒரு
கட்டமைந்துமேல் கச்சு நீண்டுகன்னி
இருந்தனம் மூடக்கண்டேன்

வனப்பேஉருவாய் இலங்குமிக்கோமளம்
வற்கலை கட்டலாமோ—கட்டும்
வற்கலையும் ஒளிர் பொற்கல னற்கவின்
இலை என்று சொல்லலாமோ.

---

* 'ஆறுமுகவடிவேலவனே'—என்ற மெட்டு.

பாசஞ்சூழப் படர்ந்திருத்தல் பதுமமலருக் கழகுசெய்யும்
மேகஞ்சூழக் கருத்திருத்தல் முழுமதிக் கதிகம் அழகூட்டும்
ஆகஞ்சூழ்ந்த மாவுரியும் அதிக அழகே செய்கிறது
தேகம் அழகாய் அமைந்துவிட்டால், தரித்ததெல்லாம் அழகாமே.

சகு. (முன் சுட்டி) தென்றல் காற்றில் இத் தேமா மரத் தளிர்கள் அசைவது என்னை விரல்காட்டி அழைப்பதுபோல் தோன்றுகிறது. முதல்முதல் நான் அதற்கு நீர் வார்க்கிறேன்.

பிரி. சகுந்தலா, அங்கே, அதன் பக்கத்திலேயே, ஒரு-ஒரு நாழிகை நில்லு.

சகு. ஏனடி ?

பிரி. இல்லை, அந்தத் தேமாமரப் பக்கத்தில் நீ நிற்கிறது கொழுவும் வல்லியும் கூடிநிற்பதுபோல இருக்கிறது.

சகு. ஆமாம், 'பிரியம்வதா' என்கிறது உனக்குத்தான் பொருந்தும்.

துஷ். பிரியம்வதா பிரியமானதை மட்டுமோ பேசுகிறாள், எது யதார்த்தமோ அதையுந்தான் கூறுகிறாள்.

இதழோ இளந்தளிர்
கரமோ பூங்கொம்பு
உடலோ மலர்க்கோமளம்
மடவாள் வடிவம் வனப்பின் உருவம்.

அந. ஏடி, சகுந்தலா, நீ 'வனஜோதி' என்று பேர் வைத்தாயே ஒரு மல்லிகைக் கொடி. அது அந்த மாமரத்தைத் தழுவி மணந்து நிற்பதைப் பார்த்தையா? அதை இப்போது மறந்து விட்டாயா ?

சகு. என்னடீ, என்னை மறக்கிறதுதான் அதை மறக்கிறது. (அருகு சென்று பார்த்து) இந்த வசந்த காலத்தில் அவைகளுக்குள் சேர்க்கை ஏற்பட்டுள்ளதைக் கவனித்தாயா ?

வனஜோதி நன்ருய்ப் பூத்து ஒரு வல்லியின் யௌவனத்தைக் காட்டுகிறது. மாங்கன்றும் நன்ருய்த் தளிர்த்து அதை அனுபவிக்கப் பொருத்தமாயிருக்கிறது. (பார்த்து நிற்கிருள்).

பிரி. அநசூயா, சகுந்தலா ஏன் அந்த வனஜோதியை ஏன் இவ்வளவு கூர்ந்து கவனிக்கிருள், தெரியுமா?

அந. எனக்குத் தெரிகிறதில்லை. நீதான் சொல்கிறது தானே.

பிரி. 'அந்த வனஜோதி தனக்குப் பொருத்தமான ஒரு கொழுவைச் சேர்ந்துகொண்டதில்லையோ; அப்படி நானும் ஒரு கொழுநனை எப்போ சேருவேன்!' என்றுதான்.

சகு. ஆம், அடீ, உன் ஆசையை என்மேலே வைத்துச் சொல்கிறையா. சரிதான். (நீர் வார்த்தல்).

துஷ். துறவறத்தில் வாழும் கண்வ மாரிஷிக்கன்றி, இல்லறத்தார் வீட்டில் இம்மங்கை பிறந்திருக்கலாமோ!

ஏது செய்வதென் றிடர்ப்படுங் காலத்து
ஓது தூயவர் உள்ளத் துதிப்பது
நீதியாகும். என்நெஞ்சம் நிறையும்இம்
மாதை மணக்குவன் மன்னர் குலத்தியான்.

சரி. இன்னும் இவளைப்பற்றிய வரலாறுகளைக் கவனிக்கின்றேன்.

சகு. (அஞ்சி) சீ! நீர்வார்த்ததில் கலந்து நவமல்லிகை வண்டு முகத்தில் வீழ்கிறதே. (உபத்திரவ நடிப்பு).

துஷ்யந்தன்:

வெறுத்து வண்டை நோக்குவதும் எனக்கு மிகவே விருப்பூட்டும்
வெருண்டு வண்டு முதல் வந்த திசையை நோக்கித்தான் நிற்பாள்
மருண்ட கண்ணும் இமைநொடிப்பும் விரகமறியா இளவனப்பும்
திரண்டு பாதநாட்டியம்பயின்று தெளியநின்ருற் போலொக்கும்.

வண்டே நீயே பாக்கியசாலி,

மருண்ட விழிகள் மேல்வீழ்ந்து மகிழ்ந்து பல்கால் தொடுகின்றாய்
பறந்து சென்று காதிலந்த ரங்கம் பேசி நிற்கின்றாய்
வரைந்தும் விடாது அவரிதழ்த்தேன் பானம் பருகி விடுகின்றாய்
பிறந்த ஊர்பேர் குலங்கேட்டு ஒன்று மின்றித் தவிக்கின்றேன்.

சகு. சீ, இந்த வண்டு என்ன உபத்திரவம் பண்ணு கிறது! அடீ, இதைத் துரத்துங்களடீ! என் கஷ்டத்தை நிவர்த்தி செய்தால் ஆகாதா?

இருவரும். (சிரித்து) நாங்கள் எப்படி உன் கஷ்டத்தை நிவர்த்தி செய்யமுடியும்? தவசிகள் நோன்புகளை ஆதரித்துக் காவல் புரிகிறாரே துஷ்யந்த மஹாராஜா, அவரிடத்திலே சொல்லு உன் கஷ்டத்தை எல்லாம்.

துஷ். இதுதான் சமயம். அவர்கள்முன் போய் நின்றிடு கிறேன். போகலாமா? ஆமாம், அதற்கென்ன? (இப்படிப் பேசி யோசிக்கிறான்) சரி, நான் யார் என்று தெரிந்துகொள்வார் களே! சரிசரி அதற்கு இவ்வாறு சொல்லிக்கொள்கிறேன்.

சகு. ஐயோ! இது ஓயா உபத்திரவமாயிருக்கிறதே! வேறு எங்கேயாவது போவோம்! (விலகிச் சென்று சுற்றிப் பார்த்து) இங்கேயும் வருகிறதே!!

துஷ். (அவள் அருகில் வந்து) ஆச்ரம வாச தவமாதர் களுக்கு இங்கே இடர் விளைவிக்கும் துஷ்டன் யார்?

(அரசனைக் கண்டு அஞ்சுகின்றனர்)

அந. ஐயனே, இங்கே ஒருவருடைய இடரும் இல்லை. எங்கள் சிநேகித இவள் (குறிப்பிட்டு) ஒரு வண்டைக் கண்டு பயந்துவிட்டாள். வேறொன்றும் இல்லை.

துஷ். (சகுந்தலையை நோக்கி) அம்மணீ, உம் தவமுறை சிறப்பாக நடைபெறுகின்றதா? (சகுந்தலை நாணித் தலை குனிந்து கைபிணைத்து நிற்கிறாள்).

அந. தங்களைப் போன்ற பெரியார்கள் வரவெல்லாம் எங்களுக்குக் கிடைக்கும்போது, சிறப்புக்கு என்ன குறை? ஐயா, வாருங்கள். சகுந்தலா, பர்ணசாலைக்குச் சென்று கொஞ்சம் பழமும் நீரும் கொண்டு வா. இது (குடநீர்) காலுக்கு (கழுவ உதவட்டும்).

துஷ். நீங்கள் அன்போடு இவ்வளவு சொன்னதே எனக்கு எல்லா உபசாரமும் நடந்ததுபோல்தான்.

பிரி. ஐயா, தாங்கள் நிரம்ப ஆயாசமாயிருக்கிறதுபோல் தெரிகிறது. சிறிது நேரம் அந்த ஏழிலைப்பாலை மரத்தடியிலிருக்கும் திண்ணையிலிருந்து இளைப்பாறுங்கள்.

துஷ். நீங்களும் நிரம்ப வேலைசெய்து பசித்துக் களைத்திருக்கிறீர்களே.

அந. அடி, சகுந்தலா, வந்த விருந்தை நாம் எப்படியும் உபசரிக்கவேண்டாமா? வா, நாமும் அவர் பக்கமே உட்காருவோம். (யாவரும் உட்கார்தல்).

சகு. (ஒருவகைத் திகிலுற்றுத் தனக்குத்தான்) இவரைப் பார்த்த நேரத்திலிருந்து என் புத்தி சபலமடைகிறது. தபோவனத்துக்குத் தகாத விரக எண்ணமெல்லாம் மனத்தில் முளைக்கின்றன.

துஷ். (மூவரையும் பார்த்து) நீங்கள் மூவரும் அன்பிலும், அழகிலும், வயதிலும் ஒத்திருப்பது எனக்கு மிக்க சந்தோஷம்.

பிரி. அநசூயா, நல்ல கெம்பீர புருஷர், நல்ல அருமையாய்ப் பேசுகிறார். இராஜ அம்ஸம் எல்லாம் அவரிடத்தில் அமைந்திருக்கிறது, இவர் யாரோ?

அந. பிரியம்வதா, எனக்கும் அதை அறியத்தான் ஆசை. ஏன், நானே கேட்கிறேன். உம். ஐயா, தாங்கள்

ரொம்ப அருமையாகப் பேசுகிறதிலிருந்து, எங்களுக்கு உங்கள் மேல் ஒரு விஸ்வாஸம் உதிக்கிறது. எந்த ராஜரிஷி வம்சம் தங்களைப் பிள்ளையாகப் பெற்றுப் புனிதமடைந்தது? இப்பொழுது தாங்கள் இங்கு வந்த பிரிவாற்றுமைக்கு வருந்துகிற மக்கள் எத்தேசத்தவர்? என்ன நோக்கங்கொண்டு இவ்விள மேனி இவ்வனத்துக்கு வரும் சிரமத்தை எடுத்துக் கொண்டதோ, இதையெல்லாம் அறிய ஆசையாயிருக்கிறோம்.

சகு. (நெஞ்சே நீ பரபரக்காதே. உனக்கு வேண்டியதைத்தான் அநசூயா கேட்கிறாளே!)

துஷ். (நான் என்ன பேர் சொல்கிறது. சரி, இப்படிச் சொல்கிறேன்). அம்மணீ, தவசிகள் நோன்புகளைக் காக்க வேண்டி புரு வம்சச் சக்கரவர்த்தியால் நியமிக்கப்பட்டவன் யான். இப்பொழுதும் தவசிகளின் நித்திய நியமங்கள் இடையூறின்றி நடக்கின்றனவா என்று அறிந்து போகவே இங்கு வந்தேன்.

அந. நாங்கள், தவசிகள் எல்லாருமே, நல்ல காவல் பெற்றோம். ஒரு குறைவுமில்லை. (சகுந்தலா நாணுகின்றாள்).

பிரி. (காதலர் இருவரையும் கவனித்து) ஆமாம், சகுந்தலா, அப்பாமட்டும் இன்றைக்கு இங்கே இருந்தால்!

சகு. (கோபம்) அப்பா இருந்தால் என்னடீ நடக்கும்?

அந. அவர் இருந்தால், வந்திருக்கிற பெரிய மனுஷனை உயிருக்கு உயிராயிருப்பதைக் கொடுத்து உபசரிப்பாரடி.

சகு. என்னடி, மனத்திலே என்னமோ வைத்துக் கொண்டு என்னமோ பேசுகிறீர்களே. நீங்கள் இரண்டு பேர் பேசுகிறதும் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கிறதில்லை.

துஷ். உங்களோடிருக்கும் அந்த அம்மணி யார்? அதையும் நான் அறிந்துகொள்ளலாமோ?

பிரி. நன்ருய் அறிந்துகொள்ளலாம். எல்லாம் நம் நன்மைக்காகத்தான் நடக்கும். காசிப ரிஷி கன்னி இவள்.

துஷ். காசிப மஹா ரிஷி நித்ய பிரமசாரி ஆயிற்றே. இவர் அவருடைய புத்திரி என்ருல் அதென்ன ?

அந. ஐயா, கொஞ்சம் கேளுங்கள், இராஜ ரிஷி கௌசிகர் இருக்கிருரோ இல்லையோ; அவரால்தானே கௌசிக கோத்திரம் வந்தது.

துஷ். ஆமாம், அது யாரும் அறிந்த விஷயம்.

அந. அவர் எங்கள் சிநேகத்தின் தந்தையார்; அவர் இவளைக் கைவிட்டார். அதிலிருந்து, கண்வ மாரிஷி எடுத்து வளர்த்துவருகிருர்.

துஷ். அவர் கைவிட்டாரா! அதென்ன ஒன்றும் புரிகிறதில்லையே! அந்த விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாய்ச் சொல்லுங்கள். யாமும் தெரிந்துகொள்ளட்டும்.

அந. உங்களுக்குப் பிரியமாஞல் சொல்கிறேன். ராஜ ரிஷி கௌசிகர் ஒரு காலத்தில் கடுந்தவத்தில் நிலைத்திருந்தார். ஏது காரணமோ, தேவர்கள் எல்லாம் சேர்ந்து தவ நியமத்துக்கு இடையூறு செய்ய நினைத்து மேனகையை அவரிடம் அனுப்பிஞர்கள்.

துஷ். தேவர்களுக்குத்தான் பிறர் வாழப் பொறுக்காதே! சரி, பிறகு......

அந. அவள் வந்தது வஸந்த காலம். கௌசிகர் அந்தத் தையலைப் பார்த்தார். நல்ல மையல்தரும் அழகு. பிறகு...... (நாணத்தால் நிறுத்தல்).

துஷ். பிறகு நடப்பதுதான் தெரிந்த விஷயமே! அப்படியாஞல் இம்மங்கை அப்ஸர குமரியோ ?

அந. ஆமாம், அப்படித்தான்.

துஷ. இது முற்றும் பொருத்தமானது.

மாந்தரில் இத்துணை வனப்புதிப்ப தில்லை
மண்ணின்மிசை மின்னலுண் டாவது மில்லை.

(சகுந்தலை தலைகுனிந்து நிற்கிறாள்)

துஷ். (தனக்குள்) ஓ, நம் எண்ணமும் ஈடேறும் போலத் தெரிகிறது. ஆனால் அந்தத் தோழிமார் இருவரும் 'பொருத்தமான கொழுநன்' கிடைத்தால் என்று பகடி பண்ணினதை நினைத்தால், அது மனத்தில் கொஞ்சம் கலக்கத்தைத் தருகிறது.

பிரி. (சகுந்தலையைப் பார்த்துக்கொண்டு அரசனிடம்) தாங்கள் இன்னும் ஏதோ கேட்க விரும்புகிறவர் போலத் தெரிகிறதே. (சகுந்தலா அவளை விரலால் குத்திக் கடிதல்).

துஷ். எனக்கு எப்போதும் நல்லவர்களைப்பற்றி அறிய நிரம்ப ஆவல்......அதைக் குறிப்பாய்க் கண்டுகொண்டீர்களே. இன்னும் சில விஷயம் கேட்கலாம் என்றும் ஆசை.

பிரி. கேளுங்கள், அதைப்பற்றி ஒன்றுமில்லை. எப்போது, எல்லாம் விட்டு, சந்நியாசியாக வாழ்வு நடத்துகிறோமோ, அப்போது அங்கே மூடி வைக்கிறதற்கு ஒன்றுமில்லை.

துஷ். உங்கள் சிநேகிதியைப்பற்றித்தான் அறிய ஆவல்.

வைகாந ஸவிரதம் ஆச்சிரம வாழ்வு விவாஹம் வரைக்குமோ
வாழ்நாளெல் லாம் இள மான்தோழமையால் இங்கு வளமாகுமோ.

பிரி. பெண்பிறவி வைதீக தர்மங்களை நடத்தவும் பிறர் ஆதரவில் இருக்கவேண்டியதுதானே. தக்க வரன் பார்த்து மண முடிப்பதாகத்தான் அவள் தந்தையாருக்கு நோக்கம்.

துஷ். (தனக்குள்) அப்படியானால் அதிகக் கஷ்டம் ஒன்றுமில்லை.

ஐயமகன்றது நெஞ்சே நீ ஆசை உறலாம்
வெய்ய நெருப்பென நினைத்தது, விரும்பி
மெய்குளிர அணிய நாகமணியா யிற்றன்றே.

சகு. (கோபித்தவள் போல்) அநசூயா, நான் போகிறேன்.

அந. ஏனோ?

சகு. பிரியம்வதை பகடி பண்ணுகிறாள் என்று கௌதமியம்மாளிடம் சொல்கிறதற்கு.

அந. பெரியவர்கள் விருந்தாக வந்திருக்கிறபோது, சும்மா நினைத்தபடியெல்லாம் அப்பால் போய்விடுகிறது ஆச்சிரம வாசிகளுக்கு அழகல்லடீ. (சகுந்தலா புறப்பட எழுதல்).

துஷ். (தனக்குள்: என்ன புறப்பட்டுவிட்டாள்! தடுத்துப் பிடிக்க எண்ணித் தன்னை அடக்கி அமர்தல்) மனத்திலே காமவிரகம் உண்டாகிவிட்டால், எண்ணமும் செய்கையும் இயைந்து நடப்பதில்லை. இதோ என்னையே பார்க்கிறதுதானே.

தொடர் கால் எழுந்தாலும்
தொன்மை முறைமை தடுத்ததுவே
உடலே இங்கு இருந்தாலும்
உள்ளம் சென்று மீண்டிட்டதே.

பிரி. (சகுந்தலாவை நிறுத்தி) அடீ, நீ இப்படிப் போகிறது முறையல்ல.

சகு. (கோபித்து) ஏனும்?

பிரி. நீ இன்னும் எனக்காக இரண்டு செடிக்கு நீர் வார்க்கவேண்டிய குறை இருக்கிறது தெரியுமா! வா இங்கே, குறையைச் செய்து முடித்துவிட்டு அப்புறம் போ.

துஷ். அம்மா, அந்த அம்மணி நிரம்பக் களைப்பாயிருப்பதாய்த் தெரிகிறது.

* நீர்க்குடம் தூக்கிக் கரங்களும் சிவந்தன
புஜங்களும் தளர்ந்தனவே—பிறை
நெற்றியிலே சிறு வெற்றிடமும் இன்றி
வேர்வையும் அரும்பியதே
வேர்வை இறங்கி முகத்தொடு கன்னம்
வார்ந்து வழிகின்றதே—காதில்
வைத்த சிரீஷ மலரதனாலே
வலையுற்ற தாகிறதே
எய்த்த இளைப்பால் மேலுயிர்ப் பெழலால்
இருதனம் அசைகிறதே—நீர்
எடுத்தெடுத்து விட்டு மிகக் களைத்திருப்பதாய்
எனக்குத் தெரிகிறதே
மொய்த்தகார்க் கூந்தற் கற்றை அவிழ்ந்து
சோர்ந்து விழுகின்றதே—ஒரு
கைக்கொண்டே அதனை அணைக்கிறாள் ஐயோஓ
களைப்பு மிகுதியாலே.

அம்மா, அவள் கொண்ட குறைக்கு நான் ஒரு ஈடுதருவல். அவள் சற்றே சும்மா இருக்கட்டும். (கணையாழி மோதிரத்தைக் கொடுக்க, பொறித்த பெயரை வாசித்து ஒருவரை ஒருவர் பார்த்தல்).

துஷ். ஒன்றும் வித்தியாசமாக நினைக்கவேண்டாம். இது அரசர் தந்த பரிசு.

பிரி. அப்படியானால் இது எப்போதும் உங்கள் விரலிலேயே இருக்கவேண்டும். நீங்கள் சொன்னீர்களே அந்தச் சொல்லுக்கே அவளைச் சும்மா இருக்கச் சொல்லுகிறோம். (சிரித்து) சகுந்தலா, துஷ்யந்த மஹாராஜாவுக்கு முன்னதாக

---

* 'மார்கழி மாதம்'—என்ற மெட்டு.

இந்தத் தயாள பிரபு உன்னை விடுவித்திருக்கிறார். இப்போது வேண்டுமானால் நீ போகலாம்.

சகு. (தனக்குள் : போகிறதாயிருந்தால் எனக்குத் தெரியாதா. உரக்க) போ, நில், இதெல்லாம் நீ சொல்லித்தான் நான் செய்கிறதாடீ !

துஷ். (சகுந்தலையைப் பார்த்து) ஆமா, நான் விரும்புகிற மாதிரி அவளும் என்னை விரும்புகிறாளா ? ஆ ! விரும்பாமலென்ன ?

பேச்சில்லை நேராக, ஆயினும் அவள்யான்
பேசில் கவனிப்பதுண்டு
நோக்கில்லை நேராக, ஆயினும் எனையன்றி
வேறொன்றை நோக்கவில்லை.

(திரைக்குள்) ஆவையும் ஆனியல் மானையும் அரண் சேர்மின். அரசர் வேட்டை மார்க்கமாய் அணித்துள்ளார்.

* மரக்கிளையீர மரவுரிகளில் குரகதத்துகள் புற்றீசல்போல் குவிந்துபடியுது—ரதத்தைக்கண்டு வெருண்டுயானை விக்னரூபமாய்வனத்துள் விரைந்துவருகுது—தந்தம்ஒன்றை மரத்திற்செலுத்தி முறித்துஅதனை வாரிஎடுத்து உந்திவருகுது—கொடிகள்சுற்றி யானைவரத்தை மானின்கூட்டம் கண்டுஉள்ளம் குலைந்துஓடுதே.

(யாவரும் திகைத்து நிற்கின்றனர்)

துஷ். சே, நம் பரிவாரத்தார் நம்மைத் தேடித் தபோவனத்தில் குழப்பம் உண்டாக்கிவிட்டனர். இனி அவர்களைப் போய்ப் பார்ப்போம்.

அந. ஐயா, இந்த யானையைப் பார்த்தால் எங்களுக்கெல்லாம் பொறி கலங்குகிறது. நாங்கள் எங்கள் ஆச்ரமத்துக்குச் செல்கிறோம். விடை தாருங்கள்.

---

* தனதனத்தன தனதனத்தன
தனதனத்தன தனதனத்தன தனனதனனா.

துஷ். அம்மணீ, சென்றுவாருங்கள். ஆச்ரமத்துக்கு எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் யானும் என்னால் இயன்ற வரையில் உதவிவருகிறேன்.

பிரி. நாங்கள் செய்த உபசாரம் நிரம்ப சிறிது. எங்களுக்கே திருப்தியில்லை. தங்களை நோக்கி இன்னொரு முறை வாருங்கள் என்னவும் வாய் கூசுகிறது.

துஷ். அப்படி ஒரு குறைவும் இல்லை. உங்களை எல்லாம் பார்த்தேனே, அதுவே எனக்குப் பெரிய உபசாரம் போல்தான்.

அந. சகுந்தலா, அம்மா தேடுவார்கள், நாம் சீக்கிரம் வீடுபோய்ச் சேர்வோம் வா.

சகு. ஆ! (காலில் தர்ப்பைக் கட்டை குத்திவிட்டது, முன் தானே மருதணி முள்ளில் மாட்டிக்கொண்டது). அநசூயா, வந்து கொஞ்சம் எடுத்து உதவு. (துஷ்யந்தனைத் திரும்பிப் பார்த்துச் செல்கிறாள்).

துஷ். நகரத்தில் போய் நமக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. நாமும் பரிவாரமும் இத் தபோவன அருகிலே தங்க ஏற்பாடு செய்யவேண்டும். சகுந்தலையை இனி மறக்கமுடியுமா!

கொம்பை முன்னே பிடித்திடினும்
எதிர்காற்றில் கொடிபின்னே நோக்குதல்போல்
வெம்புமுடல் முன்நடந்தும்
மனம் பின்னே இழுக்கிறதே விருப்பத்தாலே.

(திரை விழுகிறது)

# காட்சி 2

விதூஷகன். (பெருமூச்சுவிட்டு) சீ, சீ. எப்போ பார்த்தாலும் வேட்டை. அவரோடே அலேந்து என் ஆயுளும் குறுகிப்போயிற்று. 'இதோ மான், இதோ கரடி, அதோ புலி' என்று கத்தி, மத்தியான வெயிலிலுமா வழி நெடுக அலேகிறது? இல்லே, எங்காவது தங்குகிறதற்கு ஒரு நிழல் உண்டா, குடிக்கத் தண்ணீர் உண்டா? காட்டு மரத்து இலே எல்லாம் விழுந்து அழுகிக் கொதித்துக் கஷாயம்போல நீர் ஓடி வருகிறது; அதைத்தான் குடிக்கவேண்டும். ஒழுங்கான சாப்பாடுண்டா. இறைச்சியைக் கதிரில் குத்திச் சுட்டுத் தின்றுகொள்ளவேண்டியதுதான். இரவானல் படுத்தோம், தூங்கினேம் என்பதுண்டா, குதிரையிலே பாய்ந்து பாய்ந்து கை காற் பூட்டு எல்லாம் ஒரே உளேச்சல். பொழுது விடிய விடுகிறதில்லே. இந்தப் பலபட்டரைப் பயல்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து காட்டை வளேந்து ஒரே கூச்சல். பிறகு எங்கே தூங்குகிறது! இப்பொழுதாவது கொஞ்சம் நிம்மதியாய் இருக்கலாம் என்றால் அதற்கும் வழியில்லே; இருந்த புண்ணிலே ஒரு புற்று வளர்ந்த மாதிரி வந்திருக்கிறது: இப்போது, நேற்று வேட்டையில் நாங்கள் கொஞ்சம் பிந்தினது தான், மஹாராஜா ஒரு மானேத் துரத்தித் தபோவனத்துக்குள்ளே ஓடினர். என் கெட்ட காலம்! அந்தச் சாமியார் மகள் சகுந்தலா அவர் எதிரில் வந்தாள். ராஜாவுக்கு ஊர் நினேப்பே இல்லே. காலேயில் கண்ணே விழித்துப்பார்த்தால், அவர் அவளேயே நினேத்துக்கொண்டிருக்கிறர். இனி என்ன செய்கிறது! ஆமா, இப்போ அநுஷ்டானத்தை முடித்து விட்டுச் சும்மா இருப்பார். நான் போய்ப் பார்த்து வருகிறேன்.

(சுற்றுறப் பார்த்து) அடே, அடே, அதோ வருகிறாரே மஹாராஜர். கையில் வில் ஏந்தி, காட்டுப்பூமாலைகள் சூடி, சுற்றிவர யவனப் பெண்கள். சரி, நான் கை கால் வழங்காத மாதிரி நின்றுகொள்கிறேன். அப்படியாவது கொஞ்சம் அலுப்புத் தீரட்டும்.

(அரசர் படைகள் புடைசூழ வருகிறார்)

துஷ்யந்தன் :

நண்ணற்கு அரியஒரு நறுங்கனியே எனினும்
நடைநொடியை ஆய்ந்து, உளம் நண்ணும்என உன்னும்
எண்ணிஎன் வேட்கைகண்ட பலன் ஒன்றுமில்லை.
எண்ணஎண்ண இன்பம் ஜனிக்குதென் உளத்தே. (சிரிப்பு)

தம்மைப் போலவே பிறரும் இருப்பார் என நினைத்துக் காதல் நோயாளிகள் யாவரும் மூடராகின்றனர்.

அயல் நோக்கிய கண்ணாள்—மிக
அடக்கமாக நின்றாள்
தையல் அல்குல் தடனால்—ஒரு
மதகரி நடை நடந்தாள
'செய்யல்' எனவே தோழி—சொல்லச்
சலிப்பான பதில் தந்தாள்
ஐயோஓ ஈதெல்லாம்—எனக்
காகத்தானே. ஆமாம்.

ஆ, காதலே, நீ காண்பனவெல்லாம் உன்னைக் குறித்த தாய்க் கருதுகின்றாயே.

விதூ. (கைகால் உளைச்சல்) அரசே, எனக்குக் கைகால் வழங்காது. வாயால் மட்டும் வழுத்துகின்றேன், "மன்னா, நின்கொற்றம் பெருக."

துஷ். (சிரித்து) இந்த முடக்குவாதம் எப்போதிருந்து?

விதூ. கண்ணிலே கோலெடுத்துக் குத்திவிட்டு 'ஏன் அழுகிறாய்?' என்றும் கேட்கிறீர்!

துஷ். நீ சொல்கிறதொன்றும் எனக்குப் புரியுதில்லை.

விதூ. ஐயா, நாணல் கூனிப்போயிற்றானால், அது தானாக நேர்ந்ததா, தண்ணீர் வேகத்தினாலா?

துஷ். நீரின் வேகந்தான் நேரே நிற்கிறதை வளைத்து வைக்கிறது.

விதூ. என் முடக்குவாதத்திற்கும் நீர்தான் காரணம்.

துஷ். எப்படி, மாடவியா?

விதூ. நீர் இராஜாங்கத்தை மறந்தாயிற்று. முழு வேடனாக அலைகிறீர். இந்தக் கடுங்காட்டுக்குள்ளே வசிக்கிறீர். நான் சத்தியமாய்ச் சொல்கிறேன். உம்மோடலைந்து கைகால் ஒன்றும் இப்போ சுவாதீனத்தில் இல்லை. ஓடி ஆடி எலும்பெல்லாம் மூட்டுமூட்டாய் விரைத்துப்போயிற்று. இப்போ நான் வேண்டிக்கொள்கிறதெல்லாம் ஒன்றுதான்! இன்றைக்கு மட்டும் எனக்குத தயவுவைத்து ஓய்வு கொடுக்கவேண்டும்.

துஷ். (தனக்குள்) இவனும் இப்படிச் சொல்கிறான்: எனக்கும் வேட்டையில் பிரியம் செல்கிறதில்லை. எனக்கு இனி வேண்டியது சகுந்தலைதான். அவளோடு வாழ்ந்து, அவள்போல் பார்க்கும் இந்த மான் கூட்டத்தைக் கொல்ல, இனியும் என் கை வில் எடுக்குமா?

விதூ. (முகம் நோக்கி) அரசே, நானும் இந்தக் காட்டுக்குள் அழுதுகொண்டே கிடக்கிறேன். நீரும் ஏதோ நினைத்து முணுமுணுத்துக்கொண்டிருக்கிறீரே.

துஷ். வேறொன்றும் இல்லை. நீ நமக்கு நிரம்ப வேண்டியவன். உன் வார்த்தையை அலக்ஷ்யமாக்கிடக் கூடாது என்பதுதான்.

விதூ. மன்ன, நீடூழி வாழி. (புறப்பட ஆரம்பிக்கிறான்).

துஷ். நில். அப்பா, உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டியிருக்கிறது.

விதூ. சொல்லுங்கள். தங்கள் கட்டளையையே எதிர் பார்த்திருக்கிறேன்.

துஷ். நன்றாய்க் களைப்பாறிய பின்பு நீ எனக்கு இன்னொரு விஷயத்தில் உதவி செய்யவேண்டியிருக்கிறது. அதில், இப்படிக் களைப்பு ஒன்றும் உண்டாகாது.

விதூ. அதென்ன, பக்ஷணங்கள் தின்னுகிறதா! அதற்கென்றால் நான் ஆயத்தம்.

துஷ். இதோ சொல்கிறேன். யார் அங்கே?

(காவலன் வருகிறான்)

காவலன். அரசே, ஆக்ஞை (குனிந்து).

துஷ். ரைவதகா, எம் சேனாதிபதியை இட்டுவா.

காவ. அப்படியே. (போய்த் தளகர்த்தனுடன் வந்து) அரசர் அதோ உம் வரைவை நோக்கியவராக இருக்கிறார். அவசரக் கட்டளை. சென்று காண்பீர்.

சேனாதிபதி. (புறம் நின்று) வேட்டையாடுதல் ஒரு பாபகாரியம் என்பாராயினும், நம் அரசாங்கத்தில் அது நல்ல பலன் காட்டியுள்ளது. இத்திருப்புஜம் வில் நாண் தோய்ந்து தழும்பேறியுள்ளது. இத்திருமேனி வெயிலுக்கு அஞ்சுவதில்லை, வியர்வையைப் பொருட்படுத்துவதில்லை. உருவம் சிறிதேயாயினும் வேட்டையால் வந்த கெழுமிய தேகக்கட்டும், பலமும் அதனை மிளிரச்செய்து பெருங்களிற்றின் கம்பீரந் தருகின்றன. (அருகில் வந்து) மன்னவா, நின் கொற்றம்

சிறக்க! காடு கலைத்து எல்லாவற்றையும் உள் அமைத்தாய் விட்டது. அரசே, இப்போது புறப்படலாம்.

துஷ். தளபதி! மாடவியன் வேட்டையைப் பழிக்கின்றான். அதைக் கேட்டு யானும் ஊக்கமழிந்திருக்கின்றேன்.

சேனா. (தனக்குள் அயல்நோக்கி) நீ வேண்டாமென்று சாதி, நான் வேட்டை வேண்டுமென்று இழுத்துப்பார்க்கிறேன். (உரக்க) அரசே, அவன் மடையன், எதையும் உளறட்டும். வேட்டையாடினால் தேகத்திலுள்ள கொழுப்பு குறையும், இடுப்பு சிறுக்கும், வயிறு சிறுக்கும், உடம்பு இலகு கொடுக்கும். நெடுநேரம் உழைக்கலாம். மிருகங்களின் குணம் பயத்திலே, கோபத்திலே எப்படி எப்படி மாறுகிறது என்பதை அறியலாம். ஓட்டத்தில் குறி தவறுவல் அடிக்கிறது வில்லாளிகளுக்குப் பெரிய புகழ். இதற்கெல்லாம் தாங்களே உதாரணமாயிற்றே. இந்தத் தொழிலைப் பாவ காரியம் என்பது சுத்த தப்பு. இதைப் போல நல்ல நேரப் போக்கு வேறே என்ன இருக்கிறது!

விதூ. (கோபத்துடன்) மஹாராஜா இப்போது மஹாராஜாவுக்குரிய லக்ஷணத்தோடிருக்கிறார். நீ இப்படிக் காடு காடாய் அலை. கடைசியில் எங்காவது ஒரு கிழட்டுக் கரடி உன்னைப் பிடித்துத் தின்னட்டும்.

துஷ். தளபதி, நாம் இப்போது ஆச்ரமத்துக்கு அருகில் இருப்பதால், உன் வார்த்தைகளை அங்கீகரிப்பதற்கில்லை. இன்றைக்குக் காட்டெருமைகள் எல்லாம் நீரில் மூழ்கிக் கொம்புகளால் குத்திச் சேறு அளைந்து சுகம் அனுபவிக்கட்டும். மான் கூட்டங்கள் மரநிழலில் அசைபோடட்டும். குட்டைகளில் கிடக்கிற பன்றிக் கூட்டங்கள் தரையைக் கிளறிக் கோரைகளைத் தின்னட்டும். என் வில்லும் தன் நாண் எடுபட்டு ஒருநாள் இளைப்பாறட்டும்.

சேஞ. தங்கள் சித்தம் போல்.

துஷ். அவ்வாருயின், காடு கலக்கச் சென்றவர்களை எல்லாம் இங்குக் கூப்பிடு. பரிவாரத்தைத் தபோவனத்துக்கு இடையூறு உண்டாக்கா வண்ணம் இப்பால் அழை. தவசிகள் எல்லாம் குணம் என்னும் குன்றேறி நிற்பவர்களாவர். அவர்களிடமிருக்கும் மந்திராக்கினி சூரியகாந்தக்கல் போன்று குளிர்ந்து, பகைமை கண்டவிடத்து எரித்துவிடும்.

சேஞ. தங்கள் ஆக்ஞைப்படியே.

விதூ. ஏ, அயோக்யா, அப்பாலே போ. வேட்டை தள்ளுபடியாயிற்று! (தலைவன் போகிருன்).

துஷ். (பரிவாரத்தை நோக்கி) இன்று வேட்டையில்லை. போய்வாருங்கள். ரைவதிகா, நீயும் உன் காரியங்களைக் கவனி.

காவ. ஆக்ஞைப்படி.

விதூ. மஹாராஜா, ஒரு ஈகூட இல்லாமல் ஓட்டி விட்டீர்களே. சரி. இந்த இலைப் பந்தலடியிலே இருக்கிற ஆசனத்திலே போய் உட்காருவோம். எனக்கும் அது சௌகரியமாயிருக்கும்.

துஷ். சரி, நீ வழிகாட்டு.

விதூ. அரசே, வருக. வருக. (வழி நடந்து உட்கார்கின்றனர்).

துஷ். மாடவியா, பார்க்க அழகான ஒரு பொருளை நீ இன்னும் பார்க்கவில்லை. அதனல், கண்பெற்றும் அதன் பயனை நீ இன்னும் அடையாதவனே.

விதூ. எம்பெருமானே இதோ அழகு மயமாய் என் கண்களின் முன்னல் பார்க்கிறேனே.

துஷ். ஆமாம்! ஒவ்வொருவரும் தாம் தாம் அழகு என்று நினைக்கிறார்கள். நான் அழகு என்று சொல்கிறது அந்த ஆச்ரம அலங்காரம் இருக்கிறதே, சகுந்தலா, அவளைத்தான்!!

விதூ. (தனக்குள்) இவரை இதைப்பற்றிப் பேசவிடக் கூடாது. (உரக்க) அதென்ன! இன்றைக்குச் சாமியார் மகள்மீது சித்தம் பற்றிவிட்டது.

துஷ். மாடவியா, புரூ மரபில் தோன்றியவர் மாசு படும் காரியஞ் செய்யச் சிந்தையிலும் எண்ணார். உதிர்ந்த மல்லிகை மலரை அது எருக்கஞ் செடிமேலிருப்பினும் எடுத்து உபயோகிப்பார்கள். சகுந்தலையும் அப்ஸர மேனகைக்குப் பிறந்தவள். அவள் கைவிட்டுச் சென்றதால், கண்வர் எடுத்து வளர்த்துவருகிறார். மூன்றாம் பிறை தோன்றும் போது ஜனங்கள் ஒரே விழிப்பாய், இமை தட்டாமல், ஆகாயத்தைப் பார்த்த வண்ணமாய் நிற்கிறதன் நோக்கம் மாசு இன்மையே, அன்றோ!

விதூ. (சிரித்து) ஈச்சம்பழந் தின்று செழித்தவருக்குப் புளியம்பழத்தில் ஆசை. அப்படித்தான் அந்தப்புர ஆசை தீர்ந்து, சித்தம்.........

துஷ். நீ அவளைப் பாராததால், இப்படி எல்லாம் பேசுகிறாய்.

விதூ. ஆமா, அது சரிதான். தங்கள் பார்வையில் அழகாய்த் தோன்றுகிறதானால், அதில் ஏதோ விசேஷம் இருக்கத்தான் செய்யும்.

துஷ். நான் அதிகம் சொல்லுகிறதற்கில்லை. பிரமா முதலில் ஒரு உரு எழுதி, பிறகு உயிர் ஊட்டினானோ, அல்லது மானஸீகமாய் அழகெல்லாம் ஒன்றுசேர உன்னி

இவளுருவைச் செய்தானோ? பிரமாவின் ஆற்றலையும் இவள் அழகையும் ஒத்து அலசிப் பார்த்தால், இவள் அழகு பிரம சிருஷ்டியைக் கடந்து நிற்பதாகவே தெரிகிறது.

விதூ. இனி மற்றப் பெண்கள் அழகெல்லாம் மங்க வேண்டியதுதான்.

துஷ். நான் என் சொல்கிறேன் என்றால்,—அவள்,

மோவாத புட்பம், நகங்கிள்ளாத இளந்தளிர், முட்புரையுள்
மேவாத ரத்நம்சுவைத் தழியாத செந்தேன், முதுவினையும்
தாவாத தவத்துரு,இத் தையலையே தன்உருவில் தழுவு புண்யம்
சேர்வாரே சிறந்தவர்கள் அவர்யாரோ யானென்றும் அறிகிலேனே.

விதூ. சரி, அப்படியானால் அவள் அங்குள்ள புங்க நெய்ப் பிசுபிசுப்புச் சடையாண்டிகள் கைப்படுமுன்பே, தாங்கள் போய் அவளைக் கைவசமாக்குங்கள். இனிமேல் இதில் தாமதம் ஆகுமா!

துஷ். பாவம்! அந்தப் பெண்ணுக்கும் சுதந்தரம் கிடையாது. வளர்த்த கண்வ மாரிஷியும் இப்போது ஆச்ரமத்தில் இல்லை......

விதூ. சரி, அவள் தங்களைப் பார்த்த பார்வை எப்படியிருந்தது?

துஷ். தவசிகளுடைய பெண்களைச் சொல்லவேண்டுமா! பொதுவாக அவர்கள் நாணமுடையவர்கள். யான் நோக்கின் நிலம் நோக்கும்; நோக்கித் தானே ஓர் பொய் வழியில் மெல்ல நகும். வெறுப்பையும் விருப்பையும் அவள் காட்ட முடிகிறதா! நாணம் அவளை அடக்கி ஆள்கிறதே.

விதூ. சரிசரி, நீங்கள் பார்த்த பார்வையில் உங்கள் தொடைமேல் வந்து உட்கார்ந்திடவேணும்! இல்லையா?

துஷ். ஆனால் அவள் தோழிகளோடு புறப்பட்டபோது தான், என்னை விரும்புகிறாள் என்பது நன்றாய் வெளிப் பட்டது. அங்கும் நாணத்தை விட்டபாடில்லை. இரண்டடி எடுத்து வைத்தாள். காலில் தர்ப்பை குத்திவிட்டது என்று நின்றுகொண்டாள். வறிதே சேலை மருதணி முள்ளில் மாட்டிக்கொண்டது போலச் சொல்லி அதை எடுப்பது போல் என்னைத் திரும்பிப் பார்த்தாள்.

விதூ. தபோவனமெல்லாம் உத்யானவனமாக மாறிப் போயிற்று. சரி, இனிமேல் பிரயாணத்துக்கு மூட்டை முடிச்செல்லாம் கட்டுங்கள்.

துஷ். நண்பனே, இங்கிருக்கிற சாதுக்கள் சிலருக்கு நான் இனந்தெரியும். நான் இன்னொருமுறை அத்தபோ வனத்துள் செல்வதற்கு ஏதாவது ஒரு உபாயம் சொல்லு.

விதூ. இதற்கு என்ன உபாயம்! நீர் இராஜன் அல்லவோ!

துஷ். ஆம், அதனால் என்ன?

விதூ. தவசிகளும் தங்கள் விளைவில் ஆறில் ஒரு பாகம் நமக்கு இறை தரவேண்டுமென்று கேட்கத்தான்.

துஷ். விதூஷகா, நம் காவலில் அவர்கள் இருப்பது நமக்கு ஒரு பெரும் அதிர்ஷ்டமே. இலக்ஷம் பொன்னும் இவர்கள் தரும் இறைக்கு ஈடாகாது.

இல்லறத்தவர்கள் தந்திடும் இறையோ
என்றும் அழியும் இயல்பை உடைத்து.
துறவிகள் இவர்கள் தரும்பெரும் இறையோ
தவத்தொரு பகுதி; தொலையாததுவே.

(திரைக்குள்) ஆஹா! நம் காரியம் கைகூடிற்று.

துஷ். (கவனித்து) கம்பீரமும் அமைதியும் அமைந்த குரல். இது சாதுக்களதாகவே இருக்கலாம்.

(காவலன் பிரவேசம்)

காவ. கொற்றவா, வாழி, வெளி வாயிலில் ரிஷி குமாரர் இருவர் வந்திருக்கின்றனர்.

துஷ். தாமதமின்றி அவர்களை உள்ளே அழைத்து வா.

காவ. அப்படியே மஹாராஜ். (வெளிச்சென்று இரு ரிஷி குமாரருடன் வருதல்). ஸ்வாமிகளே, இப்படி வாருங்கள். (இருவரும் அரசனை நோக்குதல்)

முதல் சாது. இவர் தேக காந்தி என்னே! கொஞ்சமும் விகாரமின்றி, யாவர் விஶ்வாஸத்துக்கும் பாத்திரமாய்த் தோன்றுகிறார். ஆமாம், இது ராஜாக்களுக்குரியதுதான். ராஜாக்களும் ரிஷிகளும் சமம்! எப்படி? சாதுக்கள் ஆச்ரமத்தில் வாசஞ்செய்து அங்கு வந்த அதிதிகளை எல்லாம் உபசரிக்கிறார்கள். அரசனும் அரண்மனையில் வதிந்து அனைவரையும் காத்துவருகிறான். சாதுக்கள் தவத்தாலும் யோகத்தாலும் பெருமையடைகிறார்கள். அரசனும் குடியோம்புங் கருமத்தால் பெருமையடைகின்றான். மஹரிஷிகளின் திவ்ய நாமம் எங்கும் துதிக்கப்படுவது போலவே, பொறி, புலனை அடக்கிய அரசர்களின் திருநாமங்களும் கின்னரர், சாரணர் களாலும் பாடப்பெறுகின்றன. ஆச்ரமத்தில் இருப்பவர் ரிஷி. அரண்மனையிலிருப்பவர் ராஜரிஷி. இந்த இரண்டெழுத்து வித்தியாசந்தான்.

2-ம் சாது. இந்திரனுக்குத் தோழனான துஷ்யந்த மஹாராஜா என்பது இவர்தானா?

கௌதமர். ஆமாம், இனி நம் காரியத்தைப் பேசு.

2-ம் சாது. ஆஹா, திரண்டு நீண்ட புஜங்கள் எழுப் போல விளங்குகின்றன. ஆழி சூழ் உலக முழுவதையும் இவர் ஆளுகிறதில் ஒரு வியப்புமன்று. தைத்தியர்களை வதைத்தபோது கந்தர்வ ஸ்திரீகளால் இந்திரனுடைய வஜ்ரா யுதமும் துஷ்யந்த மன்னன் கை வில்லுமே பாடிக் கொண் டாடப்பெற்றன. அது தகும்!!

இருவரும். (அருகு வந்து) நின்கொற்றம் பெருகுக, மன்னவா.

துஷ். (எழுந்து) இருவருக்கும் நமஸ்காரம், வாருங்கள்.

இரு. மங்களமுண்டாகட்டும். (பழம் கொடுக்கின்றனர்).

துஷ். (ஏற்று வணங்கி) ஸ்வாமிகள் வேண்டியவற்றுக்குப் பணித்தருள வேண்டுகிறேன்.

இரு. ஆச்ரமவாசிகள், அரசர் அருகாமையில் வந்திருக் கிறார் என்றறிந்ததும் எங்களை அனுப்பி......

துஷ். அவர்கட்கு வேண்டுவ யாவை?

இரு. முனிபுங்கவர் வெளிச்சென்றிருக்கின்றார். இச் சமயம் அரக்கர் எங்கள் யாகங்களுக்கு இடையூறு செய்ய ஆரம்பிக்கின்றனர். ஆதலின் அரசர் சாரதியுடன் சில இராப்பொழுது எங்களுடன் வதிந்து ஆச்ரம நாயகமாக விளங்க வேண்டிக்கொள்கிறோம்.

துஷ். ரிஷிகளின் அநுக்ரஹம் பெற்ற பாக்யவானானேன்.

விதூ. (அரசரைப் பார்த்து) எண்ணம் போல, ஒரு எடுப்புக்கு இடம் கிடைத்துக்கொண்டது.

துஷ். ரைவதிகா, வில் அம்புடன் ரதத்தையும் கொண்டு வரும்படி நான் சொன்னதாகச் சாரதிக்கு அறிவி.

காவ. ஆக்ஞை, அரசே.

இரு. புரு வம்சத்தினர் எப்பொழுதும் தவசிகட்கு ஆபத்தில் அபயம் அளித்து ஆதரிப்பவர்கள். உன் முன்னோர் சென்ற வழியில் நடந்து நீயும் உன் பிற்காலத்துக்குப் பெருவாழ்வு தேடிக்கொண்டாய்.

துஷ். (வணங்கி) ஸ்வாமிகள் செல்லலாம். சிறிது நேரத்தில் யான் அங்கிருப்பேன்.

இரு. வாழி, மன்னவா. (சென்றனர்)

துஷ். மாடவியா, உனக்கு சகுந்தலையைப் பார்க்க ஆசையுண்டா?

விதூ. முன்னர் அது நிறைய இருந்தது, இப்போது அரக்கர்கள் பேரைக் கேட்கிறபோது ஒரு துளி ஆசைகூட இல்லை.

துஷ். நீ அஞ்சவேண்டா. நான் எப்பொழுதும் உன் பக்கத்திலே இருக்கின்றேன்.

விதூ. சரி, அப்படியானால், நான் ஏன் அரக்கருக்குப் பயப்படுகிறேன்!

(காவலன் வருகிறான்)

காவ. மன்னவா, கொற்றம் பெருகுக. சாரதி தயாராகித் தங்களின் திருவரவுக்குக் காத்திருக்கிறான். பட்டணத்திலிருந்து அம்மா அவர்களின் திருமுகம் ஒன்று கரபகன் கொண்டுவந்திருக்கிறான்.

துஷ். (உருக்கத்துடன்) என் தாயாரா அனுப்பியிருக்கிறார்கள்?

காவ. ஆம், அரசே.

துஷ். அவனை உள்ளே அழைத்து வா.

காவ. அப்படியே. (வெளிச்சென்று கரபகனுடன் வருகிறான்). அரசர் அதோ இருக்கிறார். அங்குச் சென்று காண்.

கரபகன். மன்னவா, கொற்றம் வாழ்க. இன்றைக்கு நாலாம் நாள். அம்மாவுக்குப் பாரண உபவாச முடிவு. அன்று மன்னர்பிரான் விஜயம் அங்கு இன்றியமையாதது.

துஷ். ஒருபுறம் சாதுக்களுக்கு என் கடமையைச் செய்ய வேண்டியவனாகவும், மறுபுறம் அம்மாள் கட்டளையை நிறைவேற்றவேண்டியவனாகவும் இருக்கின்றேன். இரண்டும் தள்ளமுடியாத காரியம். இந்த நெருக்கடியில் நான் யாது செய்கிறது ?

விதூ. இரண்டுக்கும் மத்தியில் திரிசங்கு போல நிற்கலாமே !

துஷ். எனக்கு ஒன்றும் புரிகிறதில்லை. நீ இப்பொழுது கேலி பண்ணுதல் தகாது. நான் கையாளவேண்டிய இரு காரியங்களும் மிகமிகப் பெரியவை. ஆற்றில் பிரவாகம் வரும்போது மத்தியிலுள்ள பாறைகளில் மோதி இரு பக்கமும் நீர் பிரிந்து போகிறதுபோல என் மனமும் இரண்டாய் நிற்கின்றது. விதூஷகா, அம்மாள் உன்னைப் பிள்ளை போலவே பாவிக்கிறார்கள். ஆதலின் நீ அங்குச் சென்று அம்மாளிடத்தில், நான் சாது சம்ரக்ஷணையில் ஈடுபட்டிருக்கும் நிலையை எடுத்துச் சொல்லு. அதோடு நான் செய்யவேண்டிய முறைமைகளையும் செய்து முடி.

விதூ. நான் அரக்கரைக் கண்டு பயப்படமாட்டேனே ?

துஷ். (சிரித்து) இந்த பிராமணனிடம் அரக்கர் என்ன செய்கிறது !

விதூ. சரி, அப்படியானால் நான் ராஜா தம்பி மாதிரிச் செல்லுகிறேன்.

துஷ். நமது பரிவாரங்களும் உன்னோடு வரட்டும். அதனால் தபோவனம் அமைதியாயிருக்கும்.

விதூ. அப்படியானால் நான்தான் யுவராஜன்.

துஷ். (தனக்குள்) இவன் சுத்த விளையாட்டுப் பிள்ளையாயிருக்கிறான். நான் இங்கிருக்கிற சீரை அந்தப்புரத்தில் போட்டுக் கெடுத்தாலும் கெடுத்திடுவான். அவனுக்கு இப்படிச் சொல்லிவைப்போம். (உரக்க) அன்ப, கண்வ மஹாரிஷியிடத்தில் கொண்டுள்ள பக்தியால்தான் தற்போது யான் ஆச்ரமத்துக்குப் போகின்றேன். மற்று அச்சகுந்தலையிடம் எனக்குக் கடுகளவு பிரியங்கூட கிடையாது. நாமாவது, இளமான்களோடு வாழ்ந்து காதல் இன்பம் அறியா அவளாவது! நான் வேடிக்கையாகப் பேசினதை நீ உண்மையாகக் கொள்ளாதே.

விதூ. சரி, சரி, அப்படியே.

(திரை விழுகிறது)

# காட்சி 3

சீடர். துஷ்யந்த மஹா ராஜன் மகத்துவத்தை என் சொல்ல! தபோவனத்துள் நுழைந்த மாத்திரத்தில், எல்லா இடையூறும் ஒழிந்தன. வில்லில் கணை பூட்டுவதற்கு என்ன அவசியம்! நாணை இழுத்துப்பார்க்கும் குணத்தொனி கேட்டு அரக்கர் யாவரும் அஞ்சி ஓடுகிறார்கள். சரி, தவசிகளுக்கு வேதி விரிப்புக்குத் தருப்பையைக் கொண்டுபோவோம். (சுற்றுற வந்து ஆகாயத்தைப் பார்த்து) ஹே, பிரியம்வதா, என்ன! வெட்டிவேர்க் குழம்பு, தாமரைக்கொடி இதெல்லாம் எதற்காக? (கவனிப்பது போல்) என்ன சொல்கிறாய்?—சகுந்தலாவுக்கு வெயில் தாங்க முடியுதில்லையாக்கும்?—இதெல்லாம் ஆயாசந் தீர்க்கவா? ஐயோ, நன்றாய்க் கவனியுங்கள்! கண்வ மா ரிஷிக்கு அவள்தான் உயிர் நாடி. நானும் கௌதமி அம்மாளிடம் கொஞ்சம் சாந்தீப ஜலம் கொடுத்து அனுப்புகிறேன். அதையும் அவளுக்குக் கொடு. (மறைகிறார்)

(அரசன் விரக நோயுற்று வருகிறான்)

துஷ்யந்தன். தவத்திற்குரிய ஆற்றலை நான் நன்கறிவேன். தையலுக்கிருக்கிற கட்டுப்பாட்டையும் நான் நன்கு அறிவேன். ஆயினும் அந்த ஆசையைமட்டும் என்னால் விட முடிகிறதில்லையே! (அமைதியற்றவனாய்)

மலர்க்கணை ஏந்திய மாரவேளே, உன்னையும் முழு மதியையும்—பலமென நம்பிய காதலர் எண்ணம் பாழ்படும் இது மிகத் திண்ணம்—உன்கணை புட்பம் மதிக்கதிர் தட்பம் என்றுரைப்பதெல்லாம் வெறும்பொய்யே—நிலாக்கதிர் நெருப்பு, உன் பூவும் வஜ்ராயுதம். நெஞ்சினில் இரக்கமே இலையே.

(விரக நோயால் நொந்து) மலரைக்கொண்டு அம்பினும் கூராய்த் தாக்கும் இவ்வித்தையை நீ எங்கிருந்து கற்ருய்!

கடலில் உதித்த வடவைக்கனல்போல், முக்
கண்ணனுர் நெருப்பைநீ கொண்டெரிப்பாய்!
அன்றே அரனுல் அநங்கன் ஆனநீ
இன்றும் எவ்வாறெரிக்க வந்தனையோ!

உள்ளத்தே ஓயா ஊறுசெய்யினும்
உனைநான் மேவுதல் மீனக்கொடியாய்,
மீன்கண் சகுந்தலா நிமித்தமாகவே!
மேல்நாள் பழகிய நேயமும் எண்ணலை!

ஆயிரம் விதமாய் மனத்திலெண்ணி
அநங்கா உன்னை வளர்த்து விட்டேன்!
பாய்த்தாய் அம்பை என்மார்பில்!
இதுவோ ஊட்டி வளர்த்தபலன்!

(நொந்து உலாவி) யாகசாலைக்கு வேண்டுவன செய்து முடித்து, அவர்களால் அனுப்பிவைக்கப்பெற்றேன். பசித்துக் களைத்திருக்கிற யான் எங்குப் போய் இளைப்பாறுவது? சகுந்தலையைப் பார்த்தால்தான் என் ஆயாசந் தீரும்; வேறு எதுவும் எனக்கு ஆதரவு தர முடியாது. (வெயிலைக் கவனித்து) பெரும்பாலும் இந்த மத்தியான வெயிலில் சகுந்தலாவும் அவள் சேடியரும் மாலினி ஆற்றங்கரையில் இருக்கலாம். அங்கேதான் செடிகொடிகள் அடர்ந்த பச்சை நிழலிடங்கள் இருக்கின்றன. அவ்விடமே போய்ப் பார்க்கின்றேன். (சுற்றி நடந்து பார்த்து) சரிசரி, அந்த அழகுக் குட்டி இந்தச் செடியோரப் பாதையாய் இப்போதுதான் சென்றிருக்கிருள். அவள் கிள்ளிய புஷ்பங்களின் அடிக்கிண்ணங்கள் இன்னும் மூடவில்லை. தளிர் கிள்ளிய இடத்திலிருந்து இன்னும் பால் வடிந்துகொண்டிருக்கிறது. (அவற்றைத்

தொட்டு மகிழ்ந்து நடந்து) ஆஹா, இந்த இடம் நல்ல காற்று வீசுகிறது. நிரம்ப மனோஹரமாயிருக்கிறது. மாலினி நதியின் குளிர்ச்சியும் தாமரை மலரின் வாசமும் அந்தக் காற்றில் கலந்திருப்பது மன்மதன் எரிக்கும் என் உடம்புக்கு, ஏதோ கொஞ்சம் நீர் வார்த்தாற் போல் இருக்கிறது. (நடந்து சுற்றுறப் பார்த்து) அநேகமாய்ச் சகுந்தலா இந்தப் பன்னகசாலையில்தான் இருக்கலாம்.

தட்டி வாசல்முன் தூயவெண் மணலில்
அவளடித் தடமே அணி நிரைகொள்ளும்
பிட்டங் கனத்துப் பின்னடி பதிந்து—. (தடம் தொடுகிறான்)

சரி, இந்த மரத்தடியில் மறைவாயிருந்து கவனிக்கிறேன். (சென்று மறைந்து).

ஆஹா! அதோ! என் ஆசைக் களஞ்சியம்
திண்ணையில் நன்மலர்ப் பாயலில் அமர்ந்துளாள்!
கண்மணிக்கு உதவியாய்ச் சேடியர் இருவர்!
கண்கள் பெற்றதன் பலனைக் கண்டேன் இன்றே, இதுபொழுதே.

அவர்கள் என்ன ரகசியம் பேசுகிறார்கள்? (கவனித்து நிற்கிறான்).

(சகுந்தலா வேதனைப்பட, இருவரும் வீசிவருதல்)

இரு. கண்ணே, சகுந்தலா, உனக்கு இந்தத் தாமரை இலையால் வீசுகிறது சுகமாயிருக்கிறதா?

சகு. என்ன, நீங்கள் வீசுகின்றீர்களா? (இரு தோழியரும் ஒருவரை ஒருவர் பார்த்துத் திகைக்கின்றனர்)

துஷ். ஐயோ, சகுந்தலா நிரம்ப அவஸ்தைப்படுகிறாள். சரி, இதன் காரணம் யாதோ! வெயிலின் வெக்கையோ, என் போன்று காம வேட்கையோ?

தனத்தில் வெட்டிவேர்க் குழம்பு,
கரத்தில் தாமரை நாளம்,

மனத்தில் உபாதை, என்றாலும்
மங்கை அழகு மிளிர்கிறதே!

வெக்கையும் வேட்கையும் எரிக்கும், என்னினும்
மிக்க வனப்பு வடிவில் திகழ்தலால்
ஒக்குமோ வேனில் வேதனை இவட்கே!

பிரி. அநசூயா, இராஜரிஷி ஒருவர் ஒரு நாள் வந்தாரே, அன்றையிலிருந்து சகுந்தலா ஒருமாதிரி இருக்கிறாள். அவரை நினைத்துத்தான் என்று எனக்குத் தோன்றுகிறது.

அந. அடீ, எனக்கும் இதே சந்தேகந்தான் இருக்கிறது. ஏன், நான் கேட்டிடுகிறேன்!

பிரி. சகுந்தலா, உன்னை ஒரு காரியம் கேட்கவேண்டியிருக்கிறது. நீ எப்போதும் நிரம்ப வருத்தமாயிருக்கிறாய்!

சகு. (படுக்கையிலிருந்து நிமிர்ந்து) என்ன காரியம் கேட்கப்போகிறாய்?

அந. சகுந்தலா, நமக்கெல்லாம் விரக நோய் என்றால் என்ன என்றே தெரியாது. இருந்தாலும் இதிகாஸம், புராணங்களில் காதலன் காதலி மெய்ப்பாடு சொல்லக் கேட்டிருக்கிறோம். உன்னைப் பார்த்தால் சரியாய் அதுபோல இருக்கிறது. உனக்கு இந்த வருத்தத்துக்குக் காரணம் என்ன சொல். நோய் மூலந் தெரிந்துதானே மருந்து தேட வேண்டும்!

துஷ். நான் நினைத்தபடிதான் அநசூயையும் சொல்கின்றாள். சரி, அவ்வாறாயின் என் தீர்மானமும், ஆசைபற்றி எழுந்ததல்ல. அது சரியே.

சகு. (தனக்குள்) அவர்மேல் வைத்த ஆசையை இவர்களிடந்தான் நான் எப்படி வெளியிடுவது!

பிரி. அநசூயா சொன்னதென்ன தவறு? நீ எல்லாம் மூடி மூடி வைக்கிறாய், உடம்பு நாளுக்கு நாள் தேய்ந்து போகிறது. தேக காந்தியைத் தவிர அங்கே வேறு ஒன்றும் இல்லையே!

துஷ்யந்தன்:

*முகமும் மாறிற்று கன்னமும் திரைந்தது*
*மார்பும் தனங்களும் வீறு அழிந்தன*
*இடையும்இற் றொடிந்தது தோளும் தளர்ந்தது*
*உடல்ஒளி மங்கிற்று காதல் உபாதையால்—ஆயினும்*
*அனற் காற்றடித்து இலைஎலாம் எரிந்து*
*வீழ்ந்தமா தவிபோல் விளங்குதே வனப்பே!*

சகு. (நாணி) யாரிடத்திலும் இதைச் சொல்லப்போகிற தில்லை; உங்கள் இரண்டு பேரிடத்திலும் சொல்லி, என் வீணாகக் கஷ்டப்பட வைக்கவேணும்!

இருவரும். அந்தக் கஷ்டந்தானடீ எங்களுக்கு வேண்டியது. நீ கட்டாயம் சொல்லியே தீரவேண்டும். கஷ்டத்தைச் சிநேகிதர்கள் பேருக்குக் கொஞ்சம், பகிர்ந்துகொண்டால் இலகுவாய்ப்போகிறது.

துஷ். இன்ப துன்பங்களில் சம பங்கு கொள்ளும் உத்தம தோழியர் இவர்கள். இவர்கள் கேட்கும் கேள்விக்குச் சகுந்தலை ஒளியாது, உள்ளதை எல்லாம் உரைத்திடுவாள். சரி! முன்னர் நிரம்பப் பிரியத்தோடு என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்தாள்; இப்போது என்ன சொல்லப்போகிறாளோ, தெரிகிறதில்லையே!

சகு. அடீ, இந்தத் தபோவனத்தைப் பரிபாலிக்கும் அந்த இராஜ ரிஷியைக் கண்டேனே, அன்றையிலிருந்து அவர்மேல் ஒரு பற்று ஏற்பட்டிருக்கிறது. அதனால் இவ்வளவு கஷ்டம். இந்த உடம்பும் இப்படி இளைத்துப்போகிறது.

துஷ். (மகிழ்ந்து) எதைக் கேட்டால் காது குளிருமோ, அதை இப்போது கேட்டாயிற்று.

கோடை எரித்துக் குளிர்மாரி தருவதுபோல்
மதனும் எரித்துப்பின் மருந்திட்டு ஆற்றுகின்றான்.

சகு. உங்களுக்கும் இது சரி எனத் தெரிந்தால், அந்த இராஜ ரிஷி அருளுக்கு நான் பாத்திரையாக ஒரு வழி செய்யுங்கள்! அப்படியில்லை, எள்ளும் நீரும் இறைத்து முடித்திடுங்கள்.

துஷ். ஒரே பேச்சு! கவலை எல்லாம் ஒழிந்தது!!

பிரி. அநசூயா, சகுந்தலா நிரம்பக் கஷ்டப்படுகிறாள். இன்னும் நாம் தாமதம் செய்யக்கூடாது. அவள் எண்ணிய வரன் புரூ வம்ச வழித் தோன்றல். நாமும் சேர்ந்து அவள் ஆசையைச் சீக்கிரம் பூர்த்தி செய்துவைக்கவேண்டியதுதான்.

அந. பிரியம், நீ சொல்கிறது நிரம்ப சரி. ஏடி, சகுந்தலா, நல்ல கண்ணிறைந்த மாப்பிள்ளை கண்டெடுத்தாய். ஆமாம்! மஹாநதி எல்லாம் சமுத்திரத்தில்தான் சங்கமம் ஆகும்!! வேறு எங்கு ஆகும்?

பிரி. ஏன்! மாதவிக்கொடி மாமரத்தைச் சேர்ந்துதான் படரும்!

துஷ். விசாக நக்ஷத்திரம் இளஞ்சந்திரனோடு இருப்பது ஏற்பட்டதுதானே!

அந. நம் சகுந்தலா ஆசையை நாம் சீக்கிரமாகப் பூர்த்தி செய்யவேண்டும். விஷயமும் ரகசியமாயிருக்கவேண்டும். அதற்கு வழி என்ன!

பிரி. இரகசியமாக இருக்கவேண்டும் என்கிறதனால்தான் ஆர அமர யோசிக்கவேண்டியிருக்கிறது. சீக்கிரம் என்பதை மட்டும் கவனித்தால் காரியம் இன்றைக்கே முடிந்துபோகுமே.

அந. ஏன் அப்படி!

பிரி. இவள்மீது கருணைக் கண் நோக்கிய அன்றையி லிருந்து, இவளை நினைத்தே அந்த இராஜ ரிஷியும் தூக்கமே இல்லாமல் இளைத்துப்போயிருக்கிறாராம்.

துஷ். ஆமாம். நான் நிரம்ப இளைத்துப்போனேன்.

ஒவ்வொருநாளும் உள்ளங்கொதித்து உறக்கமும்இன்றி
கைமேல்தலையாய்க் கவிழ்ந்துபடுத்துக் கண்ணீர்வடிய,
வாகுவலய வயிரநன்மணிகள் வனப்பெல்லாம்மங்கி
வில்நாண்தந்த வரையையும்கடந்து விழுந்திடும், அதனை
அடிக்கடிஎடுத்துத் தோளுடன்சேர்த்து அணைக்கவுமானேன்!

பிரி. சகுந்தலா அவருக்கு ஒரு காகிதம் எழுதட்டும். நான் அதைப் பூவில் மறைத்துவைத்து, 'கோயில் பிரசாதம்' என்று சொல்லி, இரகசியமாய் அவர் கையிலேயே சேர்த்திடுகிறேன்.

அந. ஆமாம், இதுதான் சரியான வழி. சகுந்தலா, செய்யலாமில்லையோ?

சகு. நீங்கள் சொல்கிறதற்குமேல், நான் என்ன சொல்கிறது!

பிரி. நல்ல மதுர வசனங்களில் அழகாக ஒன்று எழுது. அதில் உன் சரீர சுகாசுகத்தையும் குறிப்பிடு.

சகு. அடீ, கொஞ்சம் யோசிக்கவேண்டியிருக்கிறது. அவர் மறுத்துவிட்டால் என் கதி!

மறுத்திடுவான் என மயங்கினாய் அவனே
விருப்போ டுன்னருள் வேண்டி வந்துளான்
திருமகள் வரவின்றித் திகைப்பவர் தமைச்சேரத்
திருமகள் திகைத்திட அவசியம் உளதோ!

பிரி. நீ என் இப்படி உன்னைக் குறைத்துக்கொள்கிறாய்? உன் உத்தமகுணம் உனக்குத் தெரியாது. சரத்கால சந்திர

னுடைய வெளிச்சத்தை உலகம் முழுவதும் கண்டனுபவிக்கிறதுதான். அதை நாம் மூடிவைக்க முடியுமா?

சகு. (சிரித்து) சரி, நான் நீங்கள் சொல்கிறபடியே செய்கிறேன். (உட்கார்ந்து யோசிக்கிருள்)

துஷ். ஆஹா. இமைகொட்டாதிருந்து பார்க்க ஒரு நல்ல சந்தர்ப்பங் கிடைத்தது.

நெரித்தபுருவம் சொற்சேர்க்கை
நினைக்கும்நுட்ப மதிகாட்டும்
விரிந்தது முகவிலாசம்! என்மேல்
வைத்த விருப்பம் தெரிகிறதே!

சகு. அடீ, யோசனை செய்தாயிற்று. எழுதுவதற்கு இங்கே ஒன்றும் இல்லையே!

பிரி. இதோ தாமரை இலை. நிரம்ப மிருதுவாயிருக்கும் கிளி வயிறுபோல. உன் கை நகத்தைக்கொண்டு எழுது.

சகு. (எழுதுகிருள்) அடியே, கொஞ்சம் கவனித்து, சரிதானு என்று சொல்லுங்கள்.

இரு. சரி, கவனிக்கிறோம். வாசி.

சகுந்தலா :

அருளின் மன்னவ, திருவுள மறியேன்!
உருவும் உளமும் உனை நினைந்துருக,
இரவும் பகலும் மாரவேள் வந்து
இரக்கமே இன்றி ஒறுத்தற்கோ முறையோ!

துஷ். (விரைந்து அவள்முன் சென்று)

மெல்லியல்மாதே, மாரவேள் வந்து
ஒறுக்கின்ருன் உன்னை! என்னையோ எரிக்கின்ருன்!
கதிரவன் மதியின் ஒளியினைக் கெடுக்கும்
கமலநன் மலரினைத் தொடுவதும் உண்டோ!

இருவரும். (பரவசமாய்ப் பார்த்து) வாருங்கள், இப்போதுதான் உங்களைப்பற்றி நினைத்தோம். அதற்குள் வந்து விட்டீர்களே! (சகுந்தலா எழ முயலல்)

துஷ். போதும், போதும். ஏன் உடம்பை அலட்டிக் கொள்கிறது!

பூவினிற் படுத்துப் புரண்டு அழுந்தியும்,
தாமரை நாளம் கைம்மாற்றி வருந்தியும்
களைத்திருக்கின்றனை! நீ உபசாரம்
காட்டவும் வேண்டுமோ? அமர்க.

பிரி. ஐயா, உங்கள் இரண்டு பேர் விருப்பமும் வெளிப் படையாகத் தெரிந்த விஷயம். ஆனாலும் சகுந்தலாமீது நான் வைத்திருக்கிற ஒரு பிரியம்—தங்களிடத்தில் ஒரு வார்த்தை சொல்ல விருப்பம்.

துஷ். அம்மணி, அதற்கு ஒரு தடையும் கிடையாது. சொல்லவேண்டியதைக் காலாகாலத்தில் சொல்லிவைக்கா விட்டால், பின்னால் அதற்காக வருந்தவேண்டியிருக்கும்.

பிரி. தன் குடிஜனங்கள் வந்து குறைகளைக் கூறி முறையிடின், அவற்றை நீக்கியருளல் அரசர் தருமம் அல்லவா?

துஷ். ஆமாம், இவ்வளவுதானா?

பிரி. இல்லை. எங்கள் பிரிய சகுந்தலா தங்களை நினைத்து மனமுருகி மதனாக்கினியால் சுகங் கெட்டாள். அவளை ஏற்றுத் தேற்றி உயிர் வாழ வைப்பது தங்கள் பொறுப்பு.

துஷ். அம்மணி, நாம் இருவருமே அதைக் கவனிப் போம். இதுவும் என் பாக்கியமே!

சகு. (முகம் பார்த்து) பிரியம்வதா, அந்த ராஜ ரிஷி அந்தப்புர ஞாபகத்தில் இருக்கிறார். ஏன் நிரம்ப நேரம் காத்திருக்க வைக்கிறாய்?

துஷ். என் இதயவாஸியே, என் ஞாபகத்தில் உன்னை யன்றி வேறு யாருமிலர். மருட்டுங் கண்ணழகு படைத்த மாதே, இயல்பாகவே மதனால் அழிக்கப்பட்டிருக்கின்றேன்; நீயும் என்னைப் புறக்கணிப்பாயாயின் அறவே ஒழிந்தவனாவேன்.

அந. உலகத்திலே, ராஜாக்களுக்குக் காமக்கிழத்தியர் பலர் என்று சொல்கிறார்கள். என்னமோ, எங்கள் சகுந்தலாவை நினைத்து, அவள் இனத்தார் பின்னால் வருந்தாதபடி தாங்கள் நடந்துகொள்ளவேண்டும்.

துஷ். அதிகம் பேசி ஆகிறதென்ன! நான் சொல்கிறேன். புருவழித் தோன்றலுக்குக் காமக்கிழந்தியர் பலர் தாம். ஆயினும், பெருந்தேவியர் இருவர்தாம். ஒன்று கடலை மேகலையாக உடுத்த பூதேவி. அடுத்தது உங்கள் பிரிய சகுந்தலா தேவி.

இரு. ஐயா, இது போதும்.

பிரி. அநசூயா, அந்த மான்குட்டி தாயைத் தேடித் திகைக்கிறது பார். அதைக் கொண்டு தாயிடம் சேர்க்கலாம் வா. (புறப்படுதல்)

சகு. என்னடீ, ஒருத்தி இங்கே வாடீ, என்னிடம் யாரடி இருக்கிறது?

இரு. உலகத்தை ஆள்கிறவரே உன் பக்கத்தில் இருக்கிறார். (இருவரும் மறைகின்றனர்)

சகு. என்ன! இரண்டு பேரும் போய்விட்டார்களே!

துஷ். அதற்கென்ன, இதோ உன் காவலன் உன் அருகில் இருக்கின்றேன். கலங்க வேண்டா.

தையலே இந்தத் தாமரை இலையால்
மெல்லவே வீசி சிரமம் மாற்றவோ!

*பையவே மடிமேல் வைத்துக் கால்பிடித்துன்*
*பவழமென்மேனி சுகம்பெறச் செய்யவோ!*

சகு. பெரியவர்கள் இப்படி எல்லாம் சொல்லலாமா? ஐயோ, இந்தப் பாவம் எனக்கு வேண்டா. (எழுந்து புறப்படல்).

துஷ். ஏ, சுந்தரீ. வெயில் வெப்பம் இன்னும் தணியவில்லை.

*மார்பினில் சேர்ந்த தாமரை இலையையும்*
*மலர்ச் சேக்கையையும் நீத்து*
*நீற்றிடும் இந்த வெயிலில் நீ நடந்தால்*
*சகிக்குமோ நினது செம்மேனி!*

(வழிமறித்துத் திருப்புகிறான், கையால் அவள் ஆடையைப் பற்றல்).

சகு. ஏ, புருவழி ஏந்தல், வரம்பு இல்லையா? மதனன் உபாதைக்குள் இருப்பினும், நான் என் பிரியம் போல் ஒன்றும் செய்வதற்கில்லை.

துஷ். பேதாய், தந்தை யாது சொல்வரோ என அஞ்சுகின்றாய்போலும். அஞ்சவேண்டா. முனிபுங்கவர் கண்வ மாரிஷி அறநெறி, ஒழுக்க முறை நன்கு கற்றவர். இந்த விஷயத்தை அறியும்பொழுதும் உன்மீது அவர் ஒரு குற்றமும் கூறமாட்டார். கேள்:—

*காந்தர்வ முறையில் ராஜகன்னிகையர்*
*கணவரைத் தேருவர்; பின்பு*
*நேர்ந்ததை அறிந்து அவர்கள்தம் பெற்றோர்*
*நேயமே வளர்வழி நிற்பர்.*

சகு. என்னை விடுங்கள், நான் போய் என் தோழியரைக் கலந்துகொண்டு வருகிறேன்.

துஷ். நல்லது, விட்டிடுகிறேன்.

சகு. எப்போ ?

துஷ்யந்தன் :

* வாசமலர்த் தேனையுண்டு
வண்டு களிப்பதுபோல்
ஆசைமிக மீறுதடி—கிளியே
அதரபானம் நீ தருவாய்.

(தன் வாய்க்கு அவள் முகத்தை உயர்த்த, அவள் மறுப்பதாய் நடித்தல்)

(திரைக்குள்) பொழுது சாய்ந்துவிட்டது. சக்கரவாகப் பேடையே விடைபெறு.

சகு. (திகைத்து) பௌரவரே, கௌதமி அம்மா 'என் சுகம் எப்படி ?' என்று கேட்க வருகிறார்கள். தாங்கள் தயவு செய்து அந்த மரத்தண்டை மறைந்துகொள்ளுங்கள்.

துஷ். அப்படியே. (கௌதமி கையில் குடமேந்தி இரு தோழியருடன் வருகிறாள்).

சகு. அம்மா, இங்கே. இங்கே வாருங்கள்.

கௌதமி. (சகுந்தலையை நெருங்கி) கண்ணே, உடம்பு வலி எல்லாம் போய்விட்டதா ? சுகமாயிருக்கிறாயா ?

சகு. வலி ஒன்றும் இல்லை, அம்மா.

கௌ. இந்த சாந்தீப ஜலம் உபாதையை எல்லாம் நீக்கும். (தெளிக்கிறாள்) கண்ணே, இருட்டப்போகிறது, வா. வீடுபோய்ச் சேர்வோம். (புறப்படல்)

சகு. (தனக்குள்) நெஞ்சமே, நீ விரும்பியவர் வலிய வந்த போது நீ கோழை போல் நின்றாய். இப்போது அவர் பிரிந்து போனபின் வருந்திப் பயன் என்ன ! (சிறிது நடந்து நின்று

---

* 'கிளிக்கண்ணி'—மெட்டு.

உரக்க) பாசிலேப் பந்தலே, கவலே தீர்த்த கண்ணுளா, உம்மை மீண்டும் கூடிச் சுகிக்கவே பிரிகின்றேன். (சகுந்தலா வருந்தி நடந்து மறைதல்)

துஷ். (பழைய இடத்தில் வந்து பெருமூச்சுவிட்டு) கைக்கெட்டியது வாய்க்கெட்டுவதற்குள் எத்தனை விபத்துக் கள்!

நீண்டோ டியகண்ணும், துவரிதழ்முன்,
விரல்கொண்டு மடமொழியால் மறுத்ததுவும்,
தான்தோள்மேல் முகந்திருப்பி வாய்சாய்த்து
நாணுருவாய் நின்றதுவும், திருமுகத்தை
நான்தூக்கி அணைத்தேந்தி இருகரமும்
இருதயமும் பூரிக்கச் செவ்வாய் கொண்டே
தேன்மாந்தி நின்றதுவும் நினைத்துவிட்டால்
சிந்தையினிற் சந்தோஷம் இதின் வேறுண்டோ!

இனி யான் எங்குச் செல்வது? சரி, என் கண் இருந்து சென்ற இப்பந்தலடியிலே, நானும் சிறுபொழுது இருக் கின்றேன்.

என் கண் படுத்துப்புரண் டழுந்தியபூம் பள்ளியே!
என் உயிர் காகிதம் வரைந்தநற் றுமரை இலேயே!
கையினிற் கடகமாய் இருந்தநீர்த் தாமரை நாளமே! [யேனே!
கையறு நிலேயில், வெற்றுடம் பிவ்விடம், விலகவும் வகையறி

(திரைக்குப் பின்) அரசே, இதோ நாங்கள் சந்தியாவந் தனம் ஆரம்பித்ததும் ராக்ஷஸ சொரூபங்கள் மேகத்தைப் போல் இருண்டு தோன்றி எங்களை அச்சுறுத்துகிறுர்கள். யாகபீடம், யாக அக்கினியைச் சுற்றி வட்டமிடுகிறுர்கள்.

துஷ். (கவனித்து) இதோ வருகிறேன்.

(திரை விழுகிறது)

3967

# காட்சி 4

[பிரியம்வதாவும், அநசூயாவும் பூப் பறித்து வருகின்றனர்]

அநசூயா. பிரியம், சகுந்தலைக்குத் தக்க வரன் கிடைத்து அவர்கள் காந்தர்வ மணமும் செய்துகொண்டார்கள் என்பதை எண்ணினால் சந்தோஷமாயிருக்கிறது. இருந்தாலும், மனத்தில் ஏனோ, அது ஒரு நிம்மதியாயில்லை.

பிரியம்வதா. ஏன் அப்படி?

அந. யாகங்கள் செய்து முடித்து, முனிவர்கள் துஷ்யந்த மஹா ராஜனை அரண்மனைக்கு அனுப்பிவைத்துவிட்டார்கள். அந்தப்புரத்தைச் சேர்ந்த பிறகு, அரசர் இந்தப் புறத்தில் நடந்ததை எல்லாம் நினைப்பாரோ, மறந்திடுவாரோ!

பிரி. சீ, அப்படி எல்லாம் கலங்காதே. என்னடீ, மனுஷாளைப் பார்த்து மதிக்கவேண்டாமா? பெரிய மனுஷர் சொல் ஒன்று, செய்கை ஒன்றை வைத்துக்கொள்ளமாட்டார். அப்பா கண்வ ரிஷி காதுக்கு விஷயம் எட்டினால் என்ன சொல்வாரோ என்றுதான் என் கவலை எல்லாம்.

அந. நாம் நினைக்கிறபடிதான் அவரும் நினைப்பார்.

பிரி. எதனால், அப்படிச் சொல்கிறாய்?

அந. அவரே சகுந்தலாவுக்கு நல்ல வரன் பார்த்துக் கலியாணம் பண்ணிவைக்கவேண்டும் என்றிருந்தார். இப்போது தெய்வமே அதைச் செய்துவைத்திட்டது. முனிவருக்கு ஒரு சிரமமும் இல்லாமல் காரியம் நிறைவேறிவிட்டது! சரியோ, இல்லையோ?

பிரி. (கூடையைப் பார்த்து) இன்றைக்கு அர்ச்சனைக்கு இவ்வளவு பூப் போதாதா! போதும், போதும்.

அந. இன்றைக்கு சகுந்தலா தன் பாக்யாதிபதிக்குப் பூஜை செய்யவேண்டாமோ?

பிரி. ஆமாம், அது சரிதான்! (பூக் கொய்தல்) (திரைக்குள்) இங்கே இருக்கிறது யார்?

அந. (கவனித்து) யாரோ, அதிதிகளுடைய குரல் போல் கேட்கிறதே.

பிரி. ஆச்ரமத்தில்தானே; சகுந்தலா இருக்கிறாள்.

அந. அவள் உருவம் அங்கேதான், மனம்!

பிரி. சரி, இவ்வளவு பூப் போதும். போவோம். (புறப் படல்) (திரைக்குள்) அதிதியை அவமதித்த நீ அல்லற் படுவாய். உன்னை முன்பின் அறியாத ஒருவனை நீ நினைத்து, அருகில் வந்த தபோநிதி என்னை அலக்ஷ்யம் செய்தனை. உன்னை அவன் மறந்திடுக. குடியன் தான் சொன்னதென்ன என்று அறியாது மறந்து நிற்பது போல அவனும், யார் எத்துணை நினைப்பூட்டினும் நின்னை மறந்திடுவான்.

அந. ஐயோ, இப்படி எங்கு நேர்ந்திடுமோ என்றுதானே பயந்தேன்! தன்னை மறந்தவளாய், சகுந்தலா யாரோ ஒரு பெரிய அதிதிக்கு அபசாரம் செய்துவிட்டாளோ என்னமோ? (புறம் பார்த்து) ஐயோ, அதிதியுமில்லையே! துர்வாச முனிவர்! கோபத்தை மூக்கு முனையில் வைத்திருப் பவர் ஆயிற்றே! அவளைச் சபித்துவிட்டு நிரம்ப வேகமாய்ப் போகிறாரே, யார் போய் அவரை நிறுத்திச் சமாதானம் சொல்கிறது! அவரோ நெருப்பு மயம். பிரியம், ஓடிப்போய் அவர் காலில் விழுந்து சமாதானப்படுத்திக் கொண்டு வா; நானும் போய்ப் பாத பூஜைக்கு ஜலங்கொண்டு ஓடிவருகிறேன்.

பிரி. இதோ போகிறேன். (வெளிச் செல்கிறாள்)

அந. (நடந்து, கால் இடறி வீழ்ந்து) ஐயோ! பூவெல்லாம் சிந்திவிட்டதே! (ஒன்று சேர்க்கிறாள்)

பிரி. ஏடீ, இந்த முரண் பிடித்த மனிதரை யாராவது சமாதானப்படுத்த முடியுமா? அவரும் சகுந்தலை விஷயத்தில் கொஞ்சம் தயவு காட்டிவிட்டார்.

அந. அவரா? அப்பப்பா! இவ்வளவே பெரிய புண்ணியந்தான். சொல்லு, எப்படி?

பிரி. எவ்வளவோ மன்றாடினேன்; வர வழியில்லை. பிறகு, "ஸ்வாமீ, இந்த அனுக்ரஹமாவது செய்யுங்கள்" என்று கேட்டுக்கொண்டேன்.

அந. என்ன கேட்டாய் நீ?

பிரி. "மஹா ரிஷி, கண்வர் தங்களிடத்தில் கொண்டிருக்கும் பக்திக்காவது அவர் புத்திரி அறியாமையால் செய்த இந்த ஒரு குற்றத்தையும் மன்னித்தருளவேண்டும்" என்றேன்.

அந. பிறகு?

பிரி. "என் வார்த்தை பொய்க்காது, ஆனால் ஒன்று சொல்கிறேன். ஒரு கணையாழியைக் கண்டமாத்திரத்தில் அந்தச் சாபம் நிவர்த்தியாகும்" என்று சொல்லி வேகமாய்ப் போய்விட்டார்.

அந. ஏதோ கஷ்ட நிவர்த்திக்கு ஒரு வழி காட்டினாரே. துஷ்யந்த மஹா ராஜன் தன் ஞாபகமாய்ச் சகுந்தலா கையில் ஒரு கணையாழி இட்டுச் சென்றிருக்கிறார். அவள் அபாயத்துக்கெல்லாம் அதுதான் ஒரு உபாயமாய் இருக்கிறது.

பிரி. அடியே, வா. நாம் பூஜையை முதலில் முடித்திடுவோம். (நடக்கின்றனர்)

பிரி. (சுற்றுறப் பார்த்து) அநசூயா, அதோ பார், சகுந்தலையை. சித்திரப் பாவை போல இடது கைமேல் தலை சாய்த்துப் புருஷனை நினைத்துக்கொண்டு தன்னையே மறந் திருக்கிறாள். இவள் எப்படி ஒரு அந்நிய அதிதியைக் கவனிப் பாள்!

அந. இந்தத் தூர்வாசர் விஷயம் நம் இரண்டு பேருக்கும் மட்டும் தெரிந்ததாயிருக்கட்டும். சகுந்தலை இதைக் கேட்டால் துடித்திடுவாள்! சொல்லாதே.

பிரி. ஏடீ, மல்லிகைக் கொடிமேல் யாராவது கொதி நீரைத் தெளிப்பார்களா? (இருவரும் மறைதல்)

(சிஷ்யன் ஒருவன் தூக்கத்திலிருந்து எழுந்து) காசிப ரிஷிக்கு நாழிகை தெரியவேண்டுமாம். விடிய இன்னும் எத்தனை நாழிகை? (வானம் பார்த்துக் கீழேபார்த்து)

மேலைத்திசையில் குமுதநாயகன் மறைகின்றான்
கீழத்திசையில் கமலநாயகன் உதிக்கின்றான்
கோள்கள் இரண்டும் விழுவதும் எழுவதும் கண்டோர்
வாழ்வும் தாழ்வும் கலந்ததிவ் வுயிர்என உணர்வார்.

நாயகன் மறையக் குமுதமென் மலர்கள்
நலம்எல்லாம் இழந்துநிற் பதுபோல்
காதலர் பிரிந்த நாயகி மார்கள்
கவலுவர்; ஆற்றவும் அறியார்.

அந. (திரைக்கு வெளியில் வந்து)

ஏதோ லௌகீக ஞானமில்லை. இப்படி எல்லாம் நடக்கும் என்று தெரியாது. ஆனாலும், துஷ்ய மஹா ராஜா இப்படி முறை கெட்டு ஒரு பெண்ணோடு நடந்துகொள் கிறதா! அது அவருக்கு யோக்கியமல்ல.

சீடன். குருதேவரிடம் அக்னி ஹோத்ரத்துக்கு நேர மாய்விட்டது என்று சொல்லி வருகிறேன். (சென்று விடல்)

அந. விஷயம் எல்லாந் தெரிந்ததுதான். நான் என்ன செய்கிறது? என் சொந்தக் காரியத்தைக் கவனிக்கும்போதும் கை கால் நடுங்குகிறது. பொய்ச் சூள் உரைத்து மனுஷன் வஞ்சித்திட்டான். மன்மதன், பாவம்! பேதைப் பெண்ணை அவரிடம் கொண்டு தள்ளினான். சரி, அவன்தான் தன் காரியத்தைச் சாதித்துவிட்டதாகச் சந்தோஷமாக வாழட்டும்! ஒருக்கால், தூர்வாஸர் சாபந்தான் இப்படி ஆட்டிவைக்கிறதா! இல்லையானால் அந்த இராஜ ரிஷி என்னென்னமோ இல்லாத சத்தியம் எல்லாம் பண்ணிவிட்டு இவ்வளவு காலமாக ஒரு ஓலையும் அனுப்பாமலிருப்பாரா? சரி, நான் அந்தக் கணை யாழியை அங்கே அனுப்பிவைக்கிறேன். ஆச்ரமத்தில் இருக் கிற முனிவர்களில் யாரை அனுப்புவது? சகுந்தலா இது வரை செய்தது குற்றம் என்றுதான் இப்போது தெரிகிறது. கண்வர் ஸ்தலயாத்திரை போய் இப்பொழுதுதான் வந் திருக்கிறார். அவரிடத்தில் போய்ச் சகுந்தலா கலியாணம் பண்ணிக்கொண்டாள், கர்ப்பமாயிருக்கிறாள் என்று எப்படிச் சொல்கிறது? எப்படி எல்லாமோ நடந்துபோயிற்று, நாம் என்ன செய்கிறது!

பிரி. (பிரியம்வதா வருகிறாள் சந்தோஷமாக) அடியே, சகுந்தலா புக்ககம் புறப்படுகிறாள். பயணத்திற்கு வேண்டிய காரியங்களைக் கவனிக்கிறதற்கு விரைந்து வா.

அந. என்ன இவ்வளவு சீக்கிரமா!

பிரி. நேற்று நன்றாய்த் தூங்கினாளா என்று கேட்கிற தற்குச் சகுந்தலாவிடம் போயிருந்தேன்.

அந. உம், பிறகு?

பிரி. சகுந்தலா வெட்கப்பட்டு அதோமுகமாய் நின்றாள். கண்வர் என்ன செய்தார் தெரியுமா? அவளைத் தழுவி, " கண்

பார்க்க முடியாதபடி புகை நிறையவிருந்தும் ஆகுதி ஓமத்திலே விழுந்தது, நிரம்ப நல்ல காரியம்! உத்தம மாணுக்கனுக்கு ஓதிய வித்தை நீ. கண்ணே, உன்னைப்பற்றிய கவலை எல்லாம் நீங்கிற்று. இன்றைக்கே உன்னை மணந்த மஹா ராஜன் வீட்டுக்கு அனுப்பிவைக்கிறேன்" என்று சொல்கிறார்.

அந. ஆமா, காசிப ரிஷிக்கு இதையெல்லாம் சொன்னது யார்?

பிரி. யாருமில்லை, அக்னிஹோத்ரம் செய்யப் போனார். அங்கே அசரீரியே ஒரு பாட்டாகச் சொன்னது.

அந. ஆ! ஏது! அந்தப் பாட்டு எப்படி? சொல்.

பிரியம்வதா:

அந்தண வன்னிவரம் அங்கிகொள்ளல்போல் துஷ்
யந்தமன்னன் மெய்யுவந்து சேர்ந்த பெருநலத்தால்
இந்தஉல கம்புரக்கும் ஜீவமணி ஒன்றை
உந்தன்மகள் சகுந்தலா கருக்கொண்டிருக் கின்றாள்.

அந. (பிரியத்தைத் தழுவி) ஏன்டீ? எனக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது, தெரியுமா? ஆனால் இன்று அவள் நம்மைவிட்டுப் புறப்பட்டுவிடுகிறதை நினைத்தால் வருத்தமும் கூடத்தான்.

பிரி. நம் வருத்தத்தை நாம் ஆடிப் பாடி மாற்றிக் கொள்ளலாம். பாவம், சகுந்தலா எவ்வகையிலும் கவலையற்றுச் சந்தோஷமாயிருக்கட்டும்.

அந. பிரியம், அதோ பார் அந்த மாமரத்தில் ஒரு தென்னங் கூடை, அதில் ஒரு மகிழம்பூ மாலை போட்டு வைத்திருக்கிறேன். அது நாளாயினும் கெடாமல் இருக்கும். அதைப் போய் எடுத்துவா. அதற்குள் நான் குங்குமம்,

திருமண், சந்தனம், பனிநீர், அருகு எல்லாம் தயார் செய்கிறேன்.

பிரி. சரி, செய். (பூப் பறிக்கின்றனர்) (திரைக்குள்) கௌதமியும் சாருங்கவனும் மற்றவர்களும் தயாராய் இருக்கிறார்களா? அவர்கள்தானே சகுந்தலாவை இட்டுச் செல்ல வேண்டும்.

பிரி. அநசூயா, சீக்கிரம். இதோ, கூடப் போகிற சாதுக்களெல்லாம் வந்திட்டார்கள்போலும்.

அந. அடியே, வா நாம் போவோம் (சுற்றுற நடந்து)

பிரி. இன்றைக்கு சூரியோதயத்திற்கு முன்னமே சகுந்தலாவுக்கு மங்கள ஸ்நானம் எல்லாம் ஆயிற்று. அதோ அங்கே இருக்கிறாள். ரிஷி பத்தினியர் யாவரும் கூடி அக்ஷதை தூவி வாழ்த்துகிறார்கள். நாமும் அங்கே போகலாம். (அருகு சேர்தல்) (சகுந்தலா ஆசனத்திலிருத்தல்).

ரிஷி பத்தினி. குழந்தாய்! உன் நாதன் கொண்ட கண்ணியத்துக்குப் பாத்திரையாயிருந்து, 'பட்ட மஹிஷி' என்ற பேரும் பெற்று வாழ்.

2-ம் பத்தினி. குழந்தாய்! சுத்த வீரனைப் பெற்று வாழ்.

3-ம் பத்தினி. எப்போதும் புருஷனுக்குப் பிரியையாய் நடந்துவா.

(யாவரும் மறைதல், கௌதமியும் சகுந்தலாவும்மட்டும் இருத்தல்)

தோழியர் இருவரும். என்னடீ, மங்கள ஸ்நானம் எல்லாம் ஆயிற்று?

சகுந்தலா. வாருங்களடீ, இப்படி உட்காருங்கள்.

இருவரும். (மங்கள வஸ்துக்களை எடுத்து உட்கார்ந்து) அடியே, சரியாய் உட்கார். நாங்கள் உனக்குப் பூ முடித்து மங்கள அலங்காரஞ் செய்யட்டும்.

சகு. ஏடீ, இப்போ வாரிப் பூ முடிக்கிறீர்கள்! இனி எப்போதாவது இந்த பாக்கியம் கிடைக்குமா? இதுதான் எப்போதும் என் நினைப்பில் இருக்கும். (கண்ணீர் வடிகிறது)

இரு. நல்ல நாளும் பொழுதுமாய்; நீ இப்படி கண்ணீர் வடிக்கிறது நன்ருயில்லை, சும்மா இரு. (கண்ணீர் துடைத்து அலங்காரம்)

பிரி. உன் அழகுக்கு எப்பேர்ப்பட்ட ஆபரணமெல்லாமோ அணியவேண்டியது! அதிலே இப்போது காட்டிலுள்ள புல்லையும் பூண்டையும் போட்டு கன்னுபின்னு என்று வைத்திருக்கிறது.

(ரிஷி குமாரர் இருவர் அரச வெகுமதி ஏந்தி)

ரிஷி. இதோ ஆபரணங்கள் அம்மைக்கு. இவற்றை அணியுங்கள். (யாவரும் பார்த்து வியக்கின்றனர்)

கௌதமி. நாரதா, இது ஏது?

நாரதன். காசிபருடைய பெருமைதான்.

கௌ. அவருடைய மானஸ சக்தியால் வரவழைத்தாரா?

2-வது ரிஷி. அப்படியில்லை கேளுங்கள்: சகுந்தலாவுக்குச் சூட்டப் பூப்பறித்துவரும்படி மஹா ரிஷி எங்களைக் காட்டுக்கு அனுப்பினுர். ஒரு மரம் நிலா வெள்ளையாய் ஒரு புடவை கொடுத்தது. இது அவள் நல்ல யோகசாலி என்று காட்டுகிறது. மற்ருெரு மரம் செம்பஞ்சுக் குழம்பு தந்தது. மற்ற வனதேவதைகள் தம் கை நீட்டி இந்த நகைகளை எல்லாம் தந்தன. அந்தக் கைவிரல்களைப் பார்த்தால் நல்ல தளிர்த் தோற்றமாய் இருந்தன!!

பிரி. (சகுந்தலாவை நோக்கி) இதெல்லாம் நீ பின்னுல் நன்ருய் வாழப்போகிருய் என்கிறதற்கு ஒரு முன் அடையாளம். (சகுந்தலை வெட்கப்படுகிருள்)

முதல் ரிஷி. கௌதமா, மஹா ரிஷி வனதேவதை பூஜைக்குக் குளிக்கப் போயிருக்கிறார். நாம் போய் விஷயத்தைச் சொல்லுவோம் வா.

கௌ. சரி, போவோம்.

அந. இந்த நகைகளை அணிந்து ஒரு பழக்கமும் நமக்கு இல்லை. இருந்தாலும் பல சித்திரங்களையும் பார்த்த ஒரு பழக்கம் இப்போது அலங்காரத்துக்குக் கொஞ்சம் உதவியாயிருக்கிறது.

சகு. உங்கள் சமர்த்தெல்லாம் எனக்குத் தெரியுமடீ. (இருவரும் அலங்கரிக்கின்றனர். காசிபர் குளித்துத் திரும்புகிறார்)

காசிபர் :

*புக்ககம் சகுந்தலா புறப்படுதல் எண்ண*
*நெக்குருகும் நெஞ்சம், சிறுதொண்டை வறண்டொட்டும்,*
*மிக்கநீர் பொங்கிஇரு கண்விழிகள் மங்கும்,*
*எற்கிந்தப் பாடெனின்இல் லறத்தினற்கு என்னும்!*

ஆ! (உலாவுகிறார்)

தோழியர். சகுந்தலா, அலங்காரம் எல்லாம் ஆயிற்று. இந்தப் புடவை இரண்டையும் கட்டிக்கொள்.

(சகுந்தலா எழுந்து சேலை கட்டுகிறாள்)

கௌ. கண்ணே, அப்பா ஆனந்த பாஷ்பம் சொரிந்து நிற்கிறாரே. அவருக்கு நமஸ்காரம் செய்.

சகு. (வெட்கி) அப்பா, நமஸ்காரம்.

காசி. குழந்தாய்,

*யயாதியோடு சர்மிஷ்டை வாழ்ந்ததுபோல் நீயும்*
*நாயகற்குப் பிரியையாய் நடந்து வாழ்ந் ததனால்*

*புரூவைஅவள் பெற்றதுபோல் புண்ணியம்பெருகி*
*புவனம் முழுதாளும் ஒரு புத்திரனைப் பெற்றுவாழ்!*

கௌ. இது இரண்டும் வெறும் ஆசீர்வாதமா, இரண்டு வரமாகவே இருக்கும்.

காசி. குழந்தாய், வா இப்படி. இந்த ஓமாக்கினியை வலம் வா. எல்லாத் தோஷத்தையும் அது தஹித்திடும். தேவர்கள் உனக்கு சகாயம் செய்வார்கள். வா, புறப்படு. (அயல் நோக்கி) சாருங்கவன், மற்றவர்கள் எல்லாம் எங்கே?

ஒரு ரிஷி. பகவானே, இதோ இருக்கின்றோம்.

காசி. சாருங்கவா, தங்கைக்கு வழி காட்டு.

சாருங்கவன். அம்மணி, இவ்வழியாய் வா.

(சகுந்தலா நடக்கின்றாள்)

காசி. தபோவனத் தெய்வங்காள்!

*வனத்துறு தருக்காள், உமைநீர் வார்க்குமுன்*
*தான்ஒரு துளிநீர் பருகாள்,*
*மனத்தினில் தளிர்அணி பிரியமா யினும்நும்*
*மேனிநோம் என்றது பறியாள்*
*கனத்தநன் னுள்நீர் பூத்தமுன் நாளாக்*
*கருதியே திருவிழாப் புரிவாள்*
*தனக்குநா யகன்மனை எழுந்தனள் விரைந்துநீர்*
*வாழ்த்தியே வழியனுப்பு வீரே.*

(குயில் ஒலி கேட்டதாய் நடித்து) மரங்கள் எல்லாம் உத்தரவு கொடுத்துவிட்டன, இதோ, குயிலுடைய இனிய குரல்தான் வன பந்துக்களின் உபசாரமொழி! (அசரீரி) நீ செல்லும் பாதை எல்லாம் பசும்புல் தரை; ஆங்காங்கு தாமரைத் தடாகம்; மரங்கள் வழி நெடுக உனக்குக் குடை பிடிக்கும். வழிப் புழுதி எல்லாம் மகரந்தமாகும். எப்

பொழுதும் தென்றல். எங்கும் சுபம். (யாவரும் ஆச்சரிய முறல்)

கௌ. குழந்தை, உன் பந்து போல இருந்த வன தேவதைகள் எல்லாம் உன்னை அனுப்பிவைத்துவிட்டார்கள். அவர்களுக்கும் நமஸ்காரம் சொல்.

சகு. (அடி பணிந்து நடந்து) பிரியம்வதா, போய் அரசரைப் பார்க்க ஆசைதான். இருந்தாலும் ஆச்ரமத்தை விட்டுப் போகிறதென்றால் வருத்தமாய்த்தான் இருக்கின்றது. காலும் நடக்க வருந்துகிறது.

பிரி. உனக்குமட்டுந்தானா வருத்தம், சகுந்தலா, இதோ பார். புறப்படுகிற நேரம் நெருங்கியதும், இந்த வனமே வாடித்தான் நிற்கிறது. அந்த மான் புல் எடுக்கிறதில்லை. மயில் ஆடுகிறதில்லை. கொடிகள் எல்லாம் கண்ணீர் விடுவது போல் இலை உதிர்க்கின்றன.

சகு. (யோசனை வந்து) அப்பா, என் தங்கை அந்த வன ஜோதியினிடம் வழியனுப்பி வருகிறேன்.

காசி. ஆமா, நீயும் அதுவும் அக்காளும் தங்கையும்! எனக்கு நன்றாய்த் தெரியும். இதோ இப்படி, வலப்பக்கம்.

சகு. (அருகில்) ஏ வனஜோதி, நீ மாமரத்தைத் தழுவி வாழ்கின்றாய்: இருந்தாலும் உன்னைத் தழுவ வந்த என்னையும் இங்கே திரும்பிப் பார்த்துத் தழுவு. இனிமேல் நான் இங்கே இருக்கப்போவதில்லை. பர்த்தா வீட்டுக்குப் போகின்றேன்.

காசி. சகுந்தலா, நீ செய்த பூர்வ புண்ணியந்தான் நான் நினைத்தது போல நல்ல வரன் கிடைக்கப் பெற்றாய். இந்த வனஜோதியும் நன்றாய் ஒரு மாமரத்தைத் தழுவிக்கொண்டது. உங்கள் இரண்டு பேரைப்பற்றிய கவலையும் இப்போது நீங்கிற்று. சரி, புறப்படு.

சகு. அடியே, இந்த மல்லிகைச் செடி உங்கள் பொறுப்புத்தான்: நன்ருய்க் கவனியுங்களடீ.

இரு. ஆமா, எங்களை யாரடீ கவனிக்கிறது! (கண்ணில் நீர் வடிதல்):

காசி. அநசூயா, அழாதே, நீங்கள் இரண்டுபேருமல்லவா அவளுக்குத் தேறுதல் சொல்லவேண்டும். (யாவரும் சுற்றி நடத்தல்)

சகு. தந்தாய், இச் சினைமான் புல் கறிக்கவும் நடக்க முடியாது வெளியே செல்கிறதில்லை. அது ஈன்றவுடனே எனக்குத் தகவல் கொடுப்பீர்களா?

காசி. ஆஹா! மறந்திடாமல் கொடுக்கிருேம்.

சகு. (திகைத்துத் தடுமாறி) என்ன இது! துணியை ஓயாமல் பிடித்துப் பிடித்து இழுக்கிறது! (திரும்புகிருள்)

காசி. இது உன் செல்லம் இல்லையா!! அதன் வாயில் தர்ப்பை குத்திப் புண்ணுயிருந்ததே, அப்போது புங்க நெய் தடவிக் குணப்படுத்தியது யார்? நீதானே! உன் கையால் புல் ஊட்டி வளர்த்தாய்! அது இப்போது பிரிந்திருக்க முடியாமல் உன்னோடு வருகிறது.

சகு. நான்தான் உன்னை விட்டுப் போகின்றேனே, என்னை ஏனடா தொடர்கின்ருய், கண்ணே! நீ பிறந்தவுடனேயே உன் அம்மா இறந்துபோனுள். நான்தான் உன்னை வளர்த்தேன். நானும் போகின்றேன். இனி எந்தை உன்னை ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்வார். ஆமா, நீ திரும்பிப்போ. (அழுதுகொண்டு புறப்படுகிருள்)

காசி. ஏன் கண்ணைக் கண்ணைக் கசக்குகிருய்? சமர்த்தாயிரு. கண்ணீரைத் துடை. மேடு பள்ளத்தைக் கவனித்துக் கீழே பார்த்து நட.

சாருங்கவன். பகவானே, ஏரிக்கரைக்கு வந்தாயிற்று. ஜலக் கரை வரை வந்து வழியனுப்ப வேணும் என்பதுதானே சாஸ்திரம். நீங்கள் சொல்லவேண்டியதைச் சொல்லி நில்லுங்கள்.

காசி. சரி, எல்லாரும் இந்தப் பால் மரத்தடியில் கொஞ்சம் உட்காருவோம். (சுற்றி நடந்து உட்கார்தல்)

காசி. (தனக்குள்) துஷ்யந்த மஹா ராஜன் சந்நிதிக் குற்றதாய் நான் என்ன விஷயம் எடுத்துரைப்பது! (யோசிக்கிறார்)

சகு. அடி, இதோ இந்தச் சக்கரவாகப் பேடையைப் பார்த்தையா! அதன் ஆண் அந்தத் தாமரை இலை மறைவில் இருக்கிறது. இவ்வளவுகூட பிரியமுடியாமல் இது மூச்சுப் பிடித்து அழுகிறது. ஆமா, நான் எவ்வளவோ பொறுமை சாலிதான்.

அந. அது சரியில்லை. ஆணைப் பிரிந்து அதற்கு இராப் பொழுது நீளமாகத் தெரிகிறது. இருந்தாலும் ஆண் பறவையை இன்னும் பார்க்கலாம் என்கிற தைரியத்தில்தான் அது கஷ்டத்தையும் கண்டுகொள்ளாமல் காலங் கழிக்கிறது, பார்த்தையா!

காசி. சாருங்கவா, நீ சகுந்தலையைத் துஷ்யந்த மஹா ராஜனிடம் சேர்த்து, நான் இன்னின்ன வேண்டினேன் என்பதையும் சொல்.

சாரு. சரி, சொல்லுங்கள்.

காசிபர்:

“பெருநிதி படைத்த மரபினோய், யாமும்
தவநிதி உடையோம் என்பதை அறிந்தும்,
உறவினர் உற்றார் அறிமுகமின்றி

உள்ளளாவி நீர்கொண்டதை நினைந்தும்,
மருவிய மாதர் ஆங்குள பலரும்
மதிக்கும் முறையில் சிறக்க நடத்துக"

என்பாய், மற்றதெல்லாம் அமைப்புப் போல் நடக்கும். பெண் வீட்டார் இதற்குமேல் அதிகமாய்ச் சொல்கிறதற்கில்லை.

சாரு. சரி, உத்தரவு வாங்கிக்கொள்கிறேன்.

காசி. குழந்தாய், உனக்கு ஒரு வார்த்தை. நாங்கள் காட்டில் வாழ்ந்தாலும் நாட்டுப்போக்கும் கொஞ்சம் தெரியும்!

சகு. மஹான்களுக்குத் தெரியாதது என்ன இருக்கிறது!

காசி. சகுந்தலா, புருஷன் வீடு சேர்ந்ததும்,

பெரியவர்க்கேற்ற பணிவிடை செய்வாய்
பிறமனை வியருக் குறுதுணை யாவாய்
பதிகடன் தவறிப் பக்ஷ மாறினும்
எதிர்உரை யாடி மாறுகொள் ளாதே
பரிசனங் களைமிகப் பிரியமாய் நடத்து
பௌருஷத் தால்வரும் கருவம் அகற்று
இந்நெறி நிற்பவர் நற்குல மாதர்
இவற்றைத் துறந்தவர் அக்குலக் காலர்.

கௌதமி, நான் சொல்லுகிறதென்ன?

கௌ. இதுதான் கலியாணப் பெண்ணுக்குச் சொல்ல வேண்டியது! வேறென்ன? அடீ, நன்றாய் மனத்திலே வாங்கிக்கொள்.

காசி. குழந்தாய், என்னையும் உன் சிநேகிதிகளையும் அனுப்பிவை.

சகு. அப்பா, பிரியம்வதையும் அநசூயையும் இதிலிருந்து திரும்பிவிடுகிறார்களா?

காசி. அவர்களுக்கும் இனிக் கலியாணம் செய்து வைக்க வேண்டாமோ! இப்போ அவர்கள் எல்லாம் உன்னோடு வருவது முறையாமோ? கௌதமி உன்னோடு வருகிறாள்.

சகு. (தந்தையை அணைத்து) மலையிலிருக்கிற ஒரு சந்தன மரக் கன்றைப் பிடுங்கி எங்கோ நாட்டில் கொண்டு நடுவது போலத்தான்: அங்கே போய் எப்படி வாழப்போகிறேனோ!

காசி. கண்ணே, உனக்கேன் இந்தக் கவலை எல்லாமடீ?

உயர்குலத் தோன்றல், மன்னர்க்கு மன்னவன் உன்னுடைய
நாயகனானன்—அயர்வுறு தவன்புகழ் எந்நேரமுங்கேட்டு
ஆநந்தமாயிருக்க லாகும்—உதயசூரியன்போல் உலகஇருள் ஓட்டுமொரு
உத்தமபுத்திரன் கடிதே உதிப்பான்—இதனால் என்பிரிவைக் கருதாது
கவலாது வாழ்வாய் என் உயிரினுக்குயிரே.

(சகுந்தலை அடிபணிதல்)

காசி. நீ எண்ணியதெல்லாம் நிறைவேறும்!

சகு. (தோழியரை நெருங்கி) ஏடீ, என்னைச் சேர்த்து அணையுங்கள்.

இரு. (தழுவி) அரசர் இனமறியாமல் கொஞ்சம் அசதியாயிருந்தால், நீ உடனே அவர் கணையாழியைக் காட்டு.

சகு. என்னடீ, நீ இப்படிச் சொல்கிறாய்! இந்த வார்த்தை எனக்குப் பெரிய கலக்கமாய் இருக்குதடீ.

இரு. கலங்க வேண்டா, சகுந்தலா, அதிகச் சிநேகம் ஆபத்தையே கருதும்.

சாரு. சூரியன் உச்சிக்கு வந்துவிட்டது. அம்மணி, விரைந்து நடப்போம்.

சகு. (சகுந்தலா ஆச்ரமத்தைப் பார்த்து) அப்பா, ஆச்ரமத்துக்கு இனி யான் எப்போது வரவேண்டும்?

காசி. குழந்தாய், கேள்.

கோவேந்தன் துஷ்யந்த மஹாராஜ னுடன்கூடி குலக் கொடியாக வாழ்ந்து—பூதேவி தனக்குஒரு சககளத்தி எனக்கூடி மாதேவியாக இருந்து—சீரேந்து செல்வப் புதல்வன்ஒரு வன்பெற்று செம்பொன்மணி மகுடம் சூட்டி—மேலான சாந்தநிலை பெறுதற்கு ஆச்சிரமம் மன்னனுட னேசேர்ந்து வருகவே.

கௌ. குழந்தை, புறப்படவேண்டிய நேரம் கடந்து போகிறது. அப்பாவை வழி அனுப்பிவை. ஸ்வாமீ, நீங்கள் தான் திரும்பினால் என்ன, அவள் இப்படிப் பேசிக் கதை வளர்த்துக்கொண்டேயிருப்பாள்.

காசி. குழந்தாய், என் பூஜைக்கு நேரமாகிறது.

சகு. அப்பா, யோக நியமத்தில் தேகம் நிரம்ப இளைத் துப் போயிருக்கிறது. இன்னும் என்னை நினைத்து இளைத் துப்போகாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

காசி. (பெருமூச்சு)

இருக்கும் குடில்வா சலில்முன்நீ
இறைத்த நீவார நெல்கோலம்
சிறக்க முளைத்துநிற் பதைக்கண்டால்
சோகந் தீர வழியுண்டோ!

இரு. சகுந்தலா இல்லாத ஆச்ரமத்துக்குள் நாங்கள் எப்படிப் போகிறது!

காசி. இந்த மாதிரி சந்தர்ப்பங்களிலேதான் நட்பு வெளிப்பட்டுத் தெரிகிறது. (யோசித்து உலாவி) சரி சகுந் தலாவை அனுப்பிவைத்தோம். ஒருவாறு நிம்மதி அடைந் தது. நீ செல்லும் வழியெல்லாம் மங்களமுண்டாகட்டும்!

(சகுந்தலாவின் கூட்டம் மறைதல்)

இரு. (சகுந்தலாவை எட்டிப் பார்த்து) சகுந்தலாவை மரம் மறைத்துக்கொண்டது. அங்கே போய்விட்டாள்!

காசி. (நெட்டுயிர்த்து) அநசூயா, உன் துணைவி இல்லறம் நடத்தப் புறப்பட்டாள். உன் வருத்தத்தை எல்லாம் மாற்று. வா, ஆச்ரமத்துக்குப் போகலாம்.

பெண்ஜன்மமே பிறனின் உடைமையே
அடைக்கலப் பொருளைப் படைத்தவன்போல
மடக்கொடி மனைபுகல் மனம் நிம்மதியே.

(திரை விழுகிறது)

# காட்சி 5

[அரசனும் மாடவியனும் உட்கார்ந்திருக்கின்றனர்]

மாடவியன். (கவனித்து) ஐய, இசை மாடத்துக்கு நேரே செவி சாய்க்கவேண்டும். என்ன தெளிவு! என்ன இனிமை! அம்ஸபதிகா தேவி பாடுகிறூர்போலும்.

அரசன். சும்மா இரு, யானும் கேட்கட்டும்.

* தேமாம்பூ ருசிபார்த்துத்
திரும்ப அதை எண்ணுமல்
தாமரைத்தேன் நாடிவண்டே
தங்கிவிட்டால் அதுசரியோ.

(என்ற பாட்டுக் கேட்கிறது)

அர. ஆஹா, என்ன இனிமை! எத்துணை உருக்கம்!!

விதூஷகன். பாட்டு இனிமைதான். விஷயம் தங்களுக்கு விளங்கியதா?

அர. (சிரித்து) ஒரு காலத்தில் நான் வசுமதியோடு மிகப் பிரியமாயிருந்தேன். அதற்காக அம்ஸபதிகா இவ்வாறு குத்திப் பேசுகிறுள். மாடவியா, அவளிடத்திற் சென்று அவள் பாட்டு எனக்கு நல்ல புத்தி வருத்தியது என்று நான் சொன்னதாகச் சொல்.

விதூ. சித்தம் போல் செய்கிறேன். (எழுந்து) அம்ஸபதிகை இராணியுடைய பலத்தில் இருக்கிறுள். இரண்டு கையாலும் என் குடுமியைப் பிடித்து ஆட்டிப்போடுவாள். அப்ஸர ஸ்திரீகள் சாதுக்களை எடுத்துச் செல்லுகிற பாவனையில் நானும் அம்ஸபதிகை கையில் தொங்கி ஆடவேண்டியது தான்.

---

* எக்காலக் கண்ணி—மெட்டு.

அர. சரி, போய் நான் வேண்டியதை அவளிடத்தில் ரசமாகச் சொல்லி முடி.

விதூ. வேறு வழி இல்லை! (போகிறான்)

அர. என் மனத்திற்குகந்தவள் என்னோடிருக்க, இந்தப் பாட்டு வந்து என்னை இவ்வாறு கலக்கக் காரணம் என்ன?

எழிலுறு பொருளைக் கண்டும் இனிய நற்கீதம் கேட்டும்
அழிவிலா மனத்தர் தாமும் ஆகுலம் அடைவதேனோ?
வெளிவரா தாகிஉள்ளத் தடியினில் ஒதுங்கு பூர்வ
வாசனை கிளறப்பெற்று வந்தது இவற்றால் போலும்!

(பிரமித்து நிற்கிறான், கஞ்சுகி வருகிறான்)

கஞ்சுகி. (பெருமூச்சு விட்டு) ஐயோ, என் பாடு எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது! இவ்வளவு காலமாக அரண்மனை உத்தியோகம். அதற்கு ஒரு தண்டு; அது இந்தத் தள்ளாத காலத்தில் ஊன்றுகோல் போல உதவுகிறது! உன் கடமையை அப்போதைக்கப்போது செய்து முடி என்று மஹா ராஜா உத்தரவு போட்டிருக்கிறார். இருந்தாலும், இப்போ போய்ச் சொல்லுகிறது நன்றாயில்லை. இவ்வளவு நேரமும் கொலுவிலிருந்து நியாயம் வழங்கி, இப்போ, எழப்போகிறபோது நான் போய், 'கண்ணுவ ரிஷி சீடர்கள் வந்திருக்கிறார்கள்' என்று சொல்கிறது நன்றாயில்லை! (சுற்றி நடந்து யோசித்து) சூரியனுக்கும் பூமிக்கும் ஓயா உழைப்பு உண்டு, களைப்பு கிடையாது. அதுபோலத்தான் மஹா ராஜாவும்! பெற்ற பிள்ளையைத் தந்தை கவனிப்பதுபோல கவனிக்கிறார். யானையரசு தன் இனத்தை எல்லாம் புலங்களுக்கு அனுப்பிவிட்டு, வெயில் வெக்கை தணிய நல்ல குளிர்ந்த சோலை தேடிப் போகும். அது போல மனத்திலே ஏதோ கவலை கொண்டு, அதை ஒழிப்பதற்குத் தனியாக இருக்கவே பிரியப்படுகிறார். சரி, (அருகில்

வந்து) மன்னவா, கொற்றம் பெருகுக! இமய மலையடியிலிருந்து சில சாது ஜனங்கள் தங்களைக் காண வந்திருக்கின்றனர். கண்ணுவ ரிஷியிடமிருந்து வந்திருப்பதாகச் சொல்கிறார்கள்.

அர. காசிப ரிஷியிடமிருந்தா?

கஞ். ஆம், அரசே.

அர. அவ்வாறாயின் நம் புரோகிதர் சோமரதரிடம் முறைப்படி அவர்களை உபசரிக்குமாறு நான் கூறியதாகச் சொல். ஆகார நியமங்கள் முடிந்தபின் நமக்கு அறிவித்து அவர்களை இட்டு வா. நாமும் பூஜை மண்டபத்தில் அவர்களை வரவேற்போம்.

காவலன். ஆக்ஞை.

அர. (எழுந்து) யார் அங்கே?

பிரதிகாரி. (வந்து) அரசே, அடியேன்.

அர. வேத்ரவதி, பூஜை மண்டபத்துக்குப் போகலாம், முன் செல்.

பிரதி. இவ்வழி அரசே.

அர. (இராஜ்ய பாரக் கஷ்டமுணர்ந்து நடத்தல்) எண்ணிய பொருள்கள் கிடைக்கப்பெற்றால், யாவரும் இன்புற்று வாழ்கின்றனர். ஆனால் அரசர்களுக்கு அவ்வாறன்று. அவர்கள் விருப்பால் வந்த பொருளும் துன்பமே கொடுத்து நிற்கின்றது.

எண்ணிய பொருள்கள் எய்தல் அரசர்க்கு லகுவென் றாலும்
திண்ணிய காவல்செய்து காப்பது கஷ்டம் என்றும்!
செய்யபேர் ராஜ்யபாரம் சேர்ந்தகைக் குடையேபோல
வெய்யதை மறைத்தும், வைத்த கைக்கு ஓர்பாரம் ஆமே!

இரு தூதர். (திரைக்குப் பின்) மன்னவா, நின் கொற்றம் சிறக்க.

முதல்வர் :

> செங்கதிர் வெயிலைத் தன்தலை தாங்கி
> வந்தவர்க்குநிழல் தந்திடும் மரம்போல்
> தன்னய மின்றித் தன்னடி வாழ்வார்
> நன்னயம் கருதும் நரபதி இவனே.

இரண்டாமவர். செம்மை சால் வழிச்செல் செங்கோல் முறையால் அல்வழிச் செல்வோர் அடங்கப் பெற்றார். ஊறு உற்றபோது உதவுவோர் உறவினர்; தன்னடி வாழ்வாரின் இன்னல் போக்கி இரக்ஷிப்பளித்தலின், உறவினர் இவரே.

அர. இவற்றைக் கேட்டே சிறிது மனம் தேறிக்கொள்ள வேண்டியது. (உலாவுகிறான்)

காவ. பூஜை மாடம் நல்ல தீர்த்தங்கொண்டு சுத்தஞ் செய்யப்பட்டிருக்கிறது. காம தேனுவுடன் கூடி மனோரம்ய மாக விளங்குகிறது. அரசே, அங்கு வந்து அமரலாம்.

அர. (இறங்கிச் சேவகன் தோளில் கைபோட்டு) வேத்ர வதி, காசிபர் எக்காரணங்கொண்டு இந்த சாது ஜனங்களை அனுப்பியுள்ளார்?

> தவத்தினுக் கேதும் இடையூறு உளதோ!
> வனத்துறு துஷ்ட விலங்கினை அஞ்சியோ!
> பவத்தினுற் செடிகொடி பூவா தொழிந்ததோ!
> மனத்தினில் உண்மை உணர்வதற் கில்லையே!

காவ. தங்களின் தர்ம நெறியைக் கண்டு, வியந்து வாழ்த்தவே அவர்கள் வந்திருப்பதாகத் தெரிகிறது.

(சகுந்தலாவுடன் கௌதமியும், சாதுக்களும் வருதல்)

கஞ்சுகி. ஸ்வாமி, இவ்வழி நடங்கள்.

சாருங்கவன். *சாருவதத்தா,*

*அறநெறி விலகா வரசன் ஆட்சியில்*
*வருணம் நான்குள் இழிவா யவனும்*
*பழிப்பன புரியான் பண்பினனாயினும்*
*என்றும் ஏகாந்தம் விரும்பிய எனக்கு*
*மக்கள் நிறைந்தஇம் மாபெரும் மண்டபம்*
*சுற்றுறத் தீகொள் சோலையாய்த் தோன்றுதே!*

சாருவதத்தன். *நிரம்ப சரி. பார்த்த பார்வையிலேயே இப்படித் தோன்றிவிட்டது உனக்கு. எனக்கு எப்படி இருக்கிறது தெரியுமோ!*

*நெய்யின் மேனியனை ஸ்நானம்*
*முடித்தவன் பார்த்தல் எவ்வாறு,*
*துயிலுவோன் தன்னைத் தூக்கம்*
*நீத்தவன் காண்டல் எவ்வாறு,*
*நீசனை சாதுதூய*
*நெஞ்சினால் நோக்கல் எவ்வாறு,*
*அடிமையைக் கடியும்கொண்ட*
*ஆண்டைகண் விழித்தல் எவ்வாறு,*
*போகமே கருதிவாழும்*
*இப்பலரையும் அவ்வாறுள்வன்!*

சகுந்தலா. (*துர் நிமித்தங் கண்டு*) *ஏனோ எனக்கு வலது கண் துடிக்கிறது.*

கௌதமி. *குழந்தை, உனக்கு ஒரு தீங்கும் வராது. உன் பர்த்தாவின் குலதேவதை இங்கிருக்கிறது. உனக்கு எல்லா நன்மையும் தரும்.* (*நடக்கின்றனர்*)

காவ. (*அரசரைச் சுட்டி*) *சாது ஜனங்களே, நெறி வழுவாது ராஜ்ய பரிபாலனம் செய்யும் ராஜ ராஜன் தம் ஆசனத்தில் உங்களை எதிர்பார்த்திருக்கிறார். சீக்கிரம் போய்க் கண்டு கொள்ளுங்கள்.*

சாருங்கவன்:

நிறையப் பழுத்த செழுங்கொம்பு நிலத்தைநோக்கி முகந்தாழும்
நிறையநீர்கொள்கார்மேகம் நேர்மேல் எழாது கீழ்இறங்கும்
நிறைந்த பணத்தும் நல்லோர்கள் பணிந்தேநேய முறநடப்பர்
நிறைவு கொண்ட பெருமக்கள் நிலைமை இஃதே எஞ்ஞான்றும்.

பிராமணோத்தம, போகத்துக்குரிய பொருள்கள் இங்கு நிறைய இருப்பினும், நாங்கள் அவற்றில் சிந்தைகொள்ளவில்லை.

காவ. அரசே, சாது ஜனங்கள் சந்தோஷ முகத்தினராகவே இருக்கின்றனர். யாகாதிகட்கு எவ்வித இடையூறுமின்றி அவர்கள் சாந்தியாக வாழ்வதாய்த் தெரிகிறது.

அர. (சகுந்தலாவைப் பார்த்து)

உலர்ந்து தொங்கும் சருகூடே
உதிக்கும் சிறிய இளந்தளிர்போல்
துறந்தார் கூட்டத் தொடுநிற்கும்
தோகை எழிலாள் துகிலாலே
சிறந்த தனது பேரழகை,
முகத்தை மறைத்தாள் இவள்யாரோ?

காவ. ஏதோ ஆச்சரியமாக இருக்கிறது! என் புத்திக்கு இது என்ன என்று ஒன்றும் புலப்படுகிறதில்லை. எப்படியும் இருக்கட்டும். அரண்மனையில் அதைப் பார்க்கவேண்டியது நிரம்ப அவசியம்.

அர. இருக்கலாம். ஆயினும் பிறன் மனைவிமேல் கண்ணெடுத்தல் தகாத காரியம்.

சகு. (மார்பில் கை வைத்துத் தனக்குள்) நெஞ்சே, நாயகன் கொண்டிருந்த அன்பை நினையாது ஏன் அவலப்படுகிறாய்? திடமாயிரு.

காவ. (முன் வந்து) அரசே, ஆகாராதிகளை முடித்து முனிவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் தம் தலைவரிடமிருந்து திருமுகமொன்று கொண்டுவந்துளார்கள். வாசிக்க உத்தரவாகப் பிரார்த்திக்கின்றேன்.

அர. சரி, வாசி. நான் கேட்கட்டும்.

சாதுக்கள். (கை தூக்கி) மன்னவா, நின் கொற்றம் சிறக்க!

அர. சாது ஜனங்களே, நமஸ்காரம்.

சாது. மன்னவா; வாழி, வாழி, நீ எண்ணிய எல்லாம் எய்தப் பெறுவாய்.

அர. சாதுக்களுடைய தபோ நியமங்கள் இடையூறின்றி நடந்தேறி வருகின்றனவா?

சாதுக்கள் :

இரவிமே லிருப்பில் இருளிருப்பதில்லை!
தரும ஆட் சியிலெமக் கின்னல் வருவதில்லை!

அர. அவ்வாறாயின் "காவலன்" என்ற பேருக்குத் தக்கவனே ஆயினேன். நல்லது! உலகம் உய்யத் தோன்றிய காசிப மஹ ரிஷி செளக்கியமாயிருக்கிறாரா?

சாது. அவர்கள் எல்லாரும் சித்தி நிலை எய்தி, சதா செளக்கியமாகவிருக்கிறார்கள். அரசே, காசிபர் நின் க்ஷேம லாபங்களை விசாரித்து, பின்னர், சில விஷயங்கள் அறிவிக்கும்படி அருளினார்.

அர. மஹ ரிஷி யாது கூறினார்? தெரிவியுங்கள்.

சாருங்கவன் :

கந்தர்வ நெறியில் காளையும் கன்னியும்
தம்பதி யாயினீர் தக்கது, தக்கதே
இருவரும் எனக்கு உரியவர், கூடி

மருவினீர் இதனை யானும் மகிழ்ந்தேன்
ஐய நீயே ஆடவர் ஏறு,
தையல் சகுந்தலா திரு அவதாரம்,
தக்க பொருத்தமாய்த் தம்பதி சேர்த்தலின்
தெய்வமும் இனியும் பழிகொள்ளாதே.

ஆதலின், கர்ப்பிணியாயிருக்கின்ற அவளை ஏற்று, இல்லறத்தில் ஆகவேண்டிய தர்மத்தை இனிது நடத்தி வரும்படி கூறியுள்ளார்.

கௌதமி :

இவளும் இருகுரவரையும் கலந்தாளில்லை !
நீருமிவள் இனத்தாரை வினவவில்லை !
இருவருமே பிரியத்தால் சேர்ந்துகொண்டீர் !
இதனிடையில் யான்பேச ஆங்கென்னுண்டு ?

சகு. (தனக்குள்) என் நாயகன் என்ன சொல்வாரோ !

அர. இதெல்லாம் என்ன ?

சகு. (தனக்குள்) பேசுகிறதெல்லாம் எனக்கு அனல் மூட்டின மாதிரி இருக்கிறதே !

சாரு. இப்படிப் பேசுகிறதனுடைய நோக்கமென்ன ? தங்களைப் போன்ற ராஜாக்களுக்கு லௌகிக தர்மம் தெரியாததல்ல.

தாலிகட் டியதன்பின்பு தாய்மனை வாழும்பெண்ணை
சீலியே யானபோதும் பல்விதம் உலகஞ்செப்பும்
மாலுறு மனத்தனுகி மணந்தவன் வெறுத்திட்டாலும்
காலடி யிருந்துவாழக் குலத்தவர் விரும்புவாரே.

அர. என்ன இது ? நான் இவளை மணந்ததுண்டா ?

சகு. (நெட்டுயிர்த்துத் தனக்குள்) நெஞ்சே, நீ அஞ்சியதுபோல ஆய்விட்டதே !

சாருங்கவன் :

முன்னர்தான் சொன்னசொல்லை
முனிவினுல் மாற்றிப்பொய்த்து
மன்னவா முறைதிறம்பல்
அறத்தினிற்கு அழகு ஆமோ !

அர. யான் சொல் மாறிப் பொய்த்தது எப்பொழுது ?

சாருங்கவன் :

அதிகாரமென்னும் வெறிமூழ்கி நிற்பார்க்கு
அகத்தேது உண்மை உணர்வு ?

அர. என்னை ஏன் இப்படிப் பல பல சொல்லிப் பழிக்கின்றீர்கள் ?

கௌ. குழந்தாய், கொஞ்சம் வெட்கத்தை எல்லாம் ஒதுக்கிவை. அந்தத் துணியை எடு, (எடுத்துக்கொண்டே) அவர் உன் முகத்தைப் பார்க்கட்டும். அப்படியானுல்தான் அவருக்குத் தெரியவரும். (முகத் துணியை நீக்குகிறுள்)

(அர. சகுந்தலாவை உற்று நோக்கி)

மாசறு வனப்பின் மங்கையை முன்னர்யான்
மணந்தேனே அல்லனே மனந்தெளிதற் கில்லை
தேசுறுகாலைப் பனிமலர் வண்டானேன்
தள்வதோ கொள்வதோ தடுமாறுகின்றனனே !

(யோசிக்கிறுன்)

காவ. என்ன அழகு ! வலிய வருகிறது. யாராவது வேண்டாம் என்று சொல்லுவார்களா ? மஹ ராஜன் ! மஹ ராஜன் ! தர்மந்தான் ; அதைவிட்டுக் கடுகளவுகூட விலகப் படாது !

சாரு. ஏன் மௌனம் ?

அர. ஸாது, யான் எவ்வளவோ யோசனை செய்து பார்த்தேன், இம்மங்கையை மணந்ததாக ஞாபகத்து வருகிற தில்லை. நான் அவள் கணவனே அல்ல. மேலும், அவளோ கர்ப்பவதியாகத் தெரிகிறது; ஆதலின் அவளை நான் ஏற்பதும் க்ஷத்திரிய தர்மத்திற்காகாத காரியம்.

சகு. (கவலையில், திரும்பி) என் நாயகர் விவாஹத்தையே மறந்து பேசுகிறார்! இருந்த எண்ணமெலாம் கரியாயிற்று!

சாரு. அப்படி ஒன்றுமில்லை.

உல்லாச வேட்டுவக்கள்ளனாய்த் தபோவனத் துட்புகுந்து, யாரும்—இல்லாத நேரங்கவனித்து மெல்ல இவளைநீ அபகரித்தாய் —சல்லாபஞ் செய்து கெடுத்தாய், இன்னும் கைவிட்டால் கண்வர் —திருட்டுப் பொருளைத் திருடனுக்கே கொடுத்தனுப்பியது போல உனக்கே அவளைத் தந்து அனுப்பி மகிழ்ந்த கண்வர்

பொல்லாப்புக் காளாவாய் இது உறுதி, இது உறுதி புகன்றேன், புகன்றேன், உனக்கே.

சாருவ. சாருங்கா, நீ பேசியது போதும், நிறுத்து. சகுந்தலா, நாங்கள் எவ்வளவு சொல்லலாமோ அவ்வளவும் சொல்லியாயிற்று, ஒன்றும் பலன் இல்லை. நீதான் விஷயத்தைச் சொல்லி அவரைச் சமாதானப்படுத்து.

சகு. (தனக்குள்) அவர் ஆசையை எல்லாம் ஒழித்து விட்டார், நான் என்ன சொல்லி யாது பயன்? இனியும் நான் உயிர்வாழ யோக்கியதை உண்டா? (உரக்க) பிராண பதி! அப்படி ஏன் நான் அழைக்கவேண்டும்! ஏ புரூரவா, ஆச்சிரமத்தில் என்னை மணந்துகொள்வதாக வாக்குத் தந்து கலந்து இப்பொழுது இந்தப் பேதையை விட்டொழிப்பதென்றால் அது உமக்குத் தர்மம் ஆகுமா?

அர. (செவி பொத்தி) தெய்வமே! கேள்!

ஆற்று வெள்ளம் கரை உடைத்து மரம்பெயர்த்து
கலங்கலாக்கிச் செல்லல்போல்
தூற்றி நின்று எனக்கும் மரபினுக்கும் பழி
தருகின்றது ஏனோ?

சகு. உண்மையாகவே, நான் பிறன் மனைவி எனத் தங்களுக்குச் சந்தேகம் இருந்தால், அதையும் நிவர்த்தி செய்துவைக்கின்றேன். தங்கள் கணையாழி என்னிடமிருக்கின்றது.

அர. நிரம்ப நல்ல காரியம். எங்கே? பார்ப்போம்.

சகு. (விரலைத் தடவி) ஐயோ! மோதிரத்தைக் காணலையே! (திகைத்துக் கௌதமியை நோக்குகிறாள்)

கௌ. நீ நீராடினபோது சசி தீர்த்தத்தில் தவறி விழுந்திருக்கலாம்.

அர. (சிரித்து) சரிதான்! பெண்களுக்கு அததற்கு ஒரு யோசனை வந்திடும் என்கின்றார்களே, அது இதுதான்.

சகு. என் தலை எழுத்து நான் அனுபவிக்கிறேன். ஐயா, இன்னொரு விஷயம் தங்களுக்குச் சொல்கின்றேன்.

அர. சரி, அதையும் கேட்போம்!

சகு. நவமல்லிகைப் பந்தல் அடியில், ஒரு தாமரையிலைத் தொன்னையில் தாங்கள் தண்ணீர் வைத்துக்கொண்டிருந்தீர்கள்.

அர. சரி!!

சகு. அப்போது என் செல்லமான்குட்டி தங்கள் அருகில் வந்தது. 'மானே, மானே, நீர் குடி' என்று எவ்வளவோ சொல்லிப்பார்த்தீர்கள். அது கலைந்து தண்ணீர் குடிக்கவே இல்லை. பிறகு அந்தத் தண்ணீரை நான் வாங்கிக் கொடுத்தேன். அது தைரியமாய் நின்று குடித்தது. அப்போது

நீங்கள் சிரித்து, "இரண்டும் வனவாசிகள், இனம் இனத்தோடு சேரும்" என்று சொல்லவில்லையா?

அர. காரியம் சாதிப்பதற்குப் பெண்களைப் போல் யாராலும் முடியாது. நிரம்ப சாதுர்யம், இல்லாதது பொல்லாதது எல்லாம் சேர்த்துத் தேன் ஒழுகப் பேசுவார்கள். அதை நம்பிவிட்டால் பின் அகப்பட்டு விழிக்கவேண்டியதுதான்.

கௌ: பிரபூ, உன் வாயால் இப்படி எல்லாம் சொல்லக் கூடாது. எங்கள் பெண் ஆச்ரமத்தில் வளர்ந்தவள். கள்ளம் அறியாத வெள்ளை மனசு.

அரசன் :

கல்லாமல்குலவித்தை யாய்வளரும்
கபடநா டகமெல்லாம் பெண்களுக்கே !
எல்லாம் அறிந்த ஒரு பெருங்குழுவில்
வளர்ந்தவளை என்வாயால் விளம்பற்குண்டோ !
நல்லோசைக் குயிற்பேடை தந்திரமாய்
சிறுபார்ப்பின் சிரமமெலாம் தானேற்காமல்
வல்லாற்றல் பெறுவரையும் பிறகூட்டுள்ளே
வைத்து வளர்த்திடச்சொல்லி வைத்தாருண்டோ !

சகு. (கோபமாய்) சீ, அயோக்ய மனுஷர்! உம்மைப் போல எல்லாரையும் அயோக்யமாய் நினைத்துப் பேசுகிறீர்! புல் பொதிந்த பெருங்கிணறு போல, அறத்தின் போர்வை பூண்டு கெடுக்கும் பாதகர்! உம்மைத் தவிர வேறு எந்த மனுஷனும் இப்படிச் செய்யமாட்டான்!

அர. (தனக்குள்) கொஞ்சமும் நெஞ்சில் கள்ளமில்லாமலே அவள் கோபிப்பதாகத் தெரிகிறது. இப்படியும் நடந்திருக்கலாமோ என ஒரு சந்தேகமும் எனக்கு இப்போதுண்டாகிறது.

நடந்ததை மறந்தே வெகுண்டனன், மருவி
இருந்ததை மறுத்ததால் சினந்து, இரு கண்ணும்
சிவந்து,அவள் இருபுருவம் நெரியஏ றெடுத்தல்
அநங்கன்தன் வில்வளைக்க இற்றதுவே போலாம்!

அம்மணீ, என் வாழ்க்கையில் இப்படி நடந்ததே கிடையாது. இது உறுதி.

சகு. தான்தோன்றியாகி புரூ வம்ஸத்தின் வார்த்தையை நம்பி மணந்தேன். நெஞ்சில் விஷம், நாவில் தேன் அவ் வார்த்தை. அதனால் அழிந்தேன்.

சாரு. ஆய்ந்தோய்ந்து பாராதான் கேண்மை கடைமுறை தான் சாம் துயரந் தரும், நாடாது நட்டல்போல் கேடில்லை.

திருமண முதலாக் கூடுறு சேர்க்கை
ஒருவரை ஒருவர் உணர்ந்தே செய்க
ஒருவரை ஒருவர் உணராச் சேர்க்கை
வெருவரத் தக்க விரோதமாய் வளரும்.

அர. ஸாது, இம்மாது தன் ஆத்திரத்தால் கூறும் மொழிகளை நம்பி, என்னை ஏன் பலபல சொல்லிப் புண்படுத்துகிறீர்கள்?

சாரு. எல்லாம் தலைகீழாக நடக்கிற காலம் இது!

பிறந்த நாள்தொடங்கி என்றும் களவு பொய் வஞ்சம் காமம்
அறிந்திடா ஒருவர்சொல்லை அகற்றினாய் நம்பமாட்டாய்
திறம்படக் கலையாய்க் கொண்டு தெற்றலே தொழிலாய் வாழும்
மறவழி மாக்கள் சொல்லை மன்ன நீ மதிப்பாய் போலும்.

அர. ஏ மஹா யோக்கியா! நிரம்பச் சரியாய்ச் சொல்லிப் போட்டாய்! இவளை ஏமாற்றி எனக்குக் கிடைக்கிற இலாபம்?

சாரு. மீளா நரகம்.

அர. புரூ வம்ஸம் நரகம் பார்க்குமென யாரும் ஒப்ப மாட்டார்கள்.

சார்வ. திரும்பத் திரும்பப் பேசிப் பிரயோஜனம் என்ன? எம் மஹ ரிஷி சொன்னதைச் செய்து முடித்தோம். இனி யாம்போய்வருகிறோம். (அரசனைப் பார்த்து)

கொள்ளுவதும் தள்ளுவதும் உன்பிரியம்போல
கொண்டகண வன்இவட்கு நீஆதலாலே
பெண்டினை மணந்தபின்பு பேதை அவள்மேலே
பெற்றசுதந் தரம்கணவன்தன் வயத்த தாலே.

கௌதமி, வா, போவோம். (புறப்படுகிறார்கள்)

சகு. இந்தப் பாவியும் என்னை வஞ்சித்தார். நீங்களும் என்னைக் கஷ்டத்தில் கைவிட்டால் நான் என்செய்வேன்!

கௌ. (நின்று) சாருங்கவா, அவள் அழுதுகொண்டு வருகிறாளப்பா, புருஷன் அக்கிரமமாய்த் துரத்தினால் அவள் தான் என்ன செய்வாள்?

சாரு. (சீறிப் பார்த்து) ஏ தறுதலை, என்ன உன் பிரியம் போல நடக்கிறதா? (சகுந்தலா நடுங்குகிறாள்)

இறைவனும் உன்னை ஏற்றிடான் ஆயின்
முறை தவறியோய் உனை முனிவனும் சேர்ப்பனோ!
நிறையுடை யவளென நெஞ்சம் கூறின்
உறைபதி மனைப்பணி புரிவதும் நீதியே!

அர. ஏ ஸாது, ஏன் இவளிடத்தில் ஆசை வார்த்தை காட்டிப் போகிறீர்கள்?

சந்திரன் குமுத மலரையே விரிக்கும்
வெங்கதிர் தாமரைத் தனையையே அவிழ்க்கும்
தம்புலன் அடக்கிய தகைமை யாளர்கள்
பந்தமில் மனைவிகைப் பிடிப்பரோ? அந்தோ!

சாரு. எத்தனை பேர் கூட்டுறவோ உமக்கு! அதனால் முன் நடந்ததைப் பின் மறந்திடுவீர்; நீர் எவ்வாறு பாவம் பழிகட்கு அஞ்சி நடக்க முடியும்?

அரசன் :

துறவீர் எமக்கிங்கொன்று செப்பிடவேண்டும் கேளீர் :
மறந்துநான் மறுக்கின்றேனே மங்கைதான் பொய்க்கின்றாளோ,
வரித்ததன் மனையைத் தள்ளல் பிறன்மனையாளைக் கொள்ளல்,
இருதிறக் குற்றந்தம்முள் எதுபெரிது? எதையான் கொள்ள?

புரோகிதர். தாங்கள் இப்படிச் செய்யலாமே!

அர. எப்படி? அதைச் சொல்லுங்கள்.

புரோ. இந்த அம்மணி பிரசவம்வரைக்கும் என் மனையில் இருந்துவரட்டும். ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், அரசே, தாங்கள் மஹ ரிஷிகளுடைய ஆசீர்வாதம் பெற்றவர்கள். தங்களின் முதற்பேறு உலகத்தை எல்லாம் ஆளக் கூடிய உத்தம புத்திரன் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். இவள் பெறுகின்ற பிள்ளை இராஜ அம்ஸங்கள் தாங்கி நின்றால் நாம் அவளை நல்வரவு கூறி அந்தப்புரத்தில் சேர்த்துக் கொள்ளலாம். அப்படி இல்லை, தகப்பனார் வீட்டுக்கு அனுப்பி வைத்திடலாம்.

அர. அப்படியே. ஸ்வாமிகள் பிரியம் போலவே நடக்கட்டும்.

புரோ. குழந்தை, வா இப்படி.

சகு. ஹே பூமிதேவி, நானும் உன்னோடு மண்ணோடு மண்ணாய்ப் போக ஒரு வழி இல்லையா!

(அழுது புறப்படுகிறாள். புரோகிதர், சாதுக்கள் போகிறார்கள்)

(அரசன் யோசனையில் நிற்கிறான். அசரீரி பேசுகிறது)

அசரீரி. ஆச்சர்யம்! பெருத்த ஆச்சர்யம்!!

அர. (கவனித்து) என்ன இது! (புரோகிதர் வருகிறார்)

புரோ. (வியந்து) அரசே, ஒரு அபூர்வ சம்பவம் நடந்துள்ளது.

அர. அது என்ன?

புரோ. கண்வ ரிஷியின் சிஷ்யர்கள் யாவரும் போனபின், அந்தப் பெண் தன் விதியை நினைத்துத் தலைமேல் கைதூக்கிப் புலம்பி அழ ஆரம்பித்தாள்.

அர. பிறகு?

புரோ. மின்னற்கொடி போல் ஒரு பெண்மணி உருவம் தன் கரத்தில் அவளை ஏந்தி அப்ஸர தீர்த்தத் திசையில் மறைந்துவிட்டது.

(யாவரும் வியந்து நிற்றல்)

அர. அந்த வாழ்வு வேண்டாமென்று அதை அப் பொழுதே தள்ளி வைத்தாயிற்றே! அதைப்பற்றி ஏன் உங் கட்குக் கவலை? போய் நிம்மதியாய் இருங்கள்.

புரோ. மன்ன, நின் கொற்றம் பெருக! (போகிறார்)

அர. வேத்ரவதி, மனது நன்றாயில்லை, பள்ளியறைக்கு வழிநட.

காவ. அரசே, வருக வருக. (புறப்படல்)

அரசன்:

மணந்ததே இல்லை அந்த மாமுனி மகளை என்று
துணிந்தபே ரெண்ணத்தாலே தூரமே அனுப்பிவிட்டேன்
தணந்தனள். நெஞ்சம் சற்றும் சாந்தமே கொள்ளற் கில்லை
உணர்ந்திடும் நெஞ்சம் அவள் வந்துரைத்தன மெய்யே என்றே.

(திரை விழுகிறது)

# காட்சி 6

[இரு பொலீஸாரும், ஒரு எட்டும் ஒருவனைக் கட்டிக் கொணர்கின்றனர்]

இரு பொலீஸாரும்: (அடித்து) திருட்டுப் பயல்! வாடா! இது மஹா ராஜா கணையாழியாச்சுதே! நீ எங்கே இருந்தடா எடுத்தாய்?

அவன். (பயந்து) இல்லை, சாமி! நான் களவு செய்ய மாட்டேன் சாமி!

1-வது பொலீஸ். நீ பெரிய ஆச்சார்ய குரு என்று அரசர் உனக்குச் சன்மானம் பண்ணிவிட்டாரா!

அவன். நான் சொல்கிறதை வாங்கு, ஸாமி. நான் சக்ரவாக ஏரிக்கரையிலே குடியிருக்கிறேன், செம்படவன் நான்.

2-வது பொலீஸ். திருட்டு முண்டம் உன் குலங் கோத்திரத்தை யாரடா கேட்டார்?

எட்டு. சூஸகா, நீங்கள் சும்மாயிருங்கள், அவன் எல்லாம் படிப்படியாய்ச் சொல்லட்டும்.

1-வது பொலீஸ். சரி, சொல்லட்டும். (நின்று கவனித்தல்)

எட்டு. சரி, சொல்லு.

அவன். நான் தூண்டில், வலை, தூரியல் வைச்சு மீன் பிடிச்சு, என் குடும்பம் காலங் கழிச்சுவருது.

எட்டு. ஆமா, நிரம்பப் புண்ணியமான தொழில்!

அவன். ஆமா, ஸாமி, வழிவழியா வருகிற தொழில், சாமி. அதை மேலு, கீழு என்று தள்ளிடலாமா? பிராமண

ளுங்க, சாஸ்திரம் எல்லாம் படிச்சவங்க, யாகஞ் செய்வாங்க, அங்கே கொலேதான் செய்ருங்க, அது தப்பா, ஸாமி ? இல்லே !

ஏட்டு. சரி, பிறகு ?

அவன். ஒரு நாள் பெரிய கலவா மீன் ஒன்று பட்டுதுங்க, வீட்டுக்குக் கொணுந்து அரிஞ்சேன், உள்ளே இருந்தது, ஸாமி, மோதிரத்திலே கல்லு மினுமினு என்னு. அதை எடுத்து விக்கலாம் என்னு வந்தேன், எஜமான்; பிடிச்சுக் கிண்டே, இவ்வளவுதான். வேறென்ன சொல்கிறதுக்கு ! விடெணும் என்ருல் விடு, அடிக்கணும் என்ருல் அடி, அது உம் பிரியம், சாமி !

ஏட்டு. ஜானுகன், இந்தப் பயல்மேல் எல்லாம் பச்சை மீன் நாறுது. இவன் செம்படவன்தான். ஆனல் மோதிரம் எடுத்த வழிக்கு இன்னும் விசாரிக்கவேண்டும். நாம் இவனே அரண்மனேக்குக் கொண்டுபோவோம்.

இருவரும். ஏ, முடிச்சுமாறி, நட, உம் (நடத்தல்)

ஏட்டு. ஏ, சூஸகா, இவனேப் பார்த்துக்கொள். வாசலண்டையில் இருங்கள். நான் ராஜ சமுகத்தில் சொல்லி உத்தரவு என்ன ஆகிறதென்று கேட்டு வருகிறேன்.

இருவரும். நல்ல சன்மானம் தருவார், போங்கள். (ஏட்டு போகிருர்)

1-வது போலீஸ். ஏட்டையா போய் நிரம்ப நேரம் ஆச்சுதே, இன்னும் வரவில்லேயே.

2-வது போலீஸ். அங்கே சமுக செளகரியத்தைக் கவனித்துத்தானே ஆகவேண்டும்; நினேத்த படி போனும், வந்தோம் என்பதற்கு வழியில்லே !

1-வது போலீஸ். ஜானுகா, இவனுக்கு மாலே சூட்டிக் கழுவில் ஏற்ற என் கை துடிக்குது.

அவன். சும்மா இருக்கிற என்னை ஏன், ஸாமி, நீ கொல்கிறை!

2-வது போலீஸ். அதோ ஏட்டையா வந்திட்டார். கையிலே ஏதோ முத்திரைக் காயிதம் வைத்திருக்கிறர். உனக்கு எமன் நெருங்கிவிட்டாண்டா. (ஏட்டு வருகிறர்)

ஏட்டு. சூஸகா, அந்தக் கரையானை விட்டுவிடுங்கள். அவன் சொன்னது சரியாய்த்தான் இருந்திருக்கிறது.

சூஸகன். உத்தரவு.

ஜானுகன். எமன்வாயில் அகப்பட்ட பயல் தப்பி வந்திட்டான். (கட்டை அவிழ்க்கின்றனர்)

அவன். இப்போ இன்னைக்குச் சாப்பாட்டுக்கு என்ன செய்கிறது சாமீ!

ஏட்டு. அடே மஹா ராஜா உனக்கு மோதிரக் கிரயங் கொடுத்திருக்கிறர்.

அவன். (வணங்கி) மஹ ராஜன் நன்ருயிருக்கட்டும்!

சூஸகன். கழுமுனைக்கு இருந்தவனை யானை அம்பாரியில் ஏற்றி வைத்திருக்கிறது அவன் யோகம்!

ஜானுகன். ஏன், ஐயா, இராஜாவுக்கு இந்த மோதிரத்தில் அவ்வளவு பிரியமா? பணத்தை அள்ளி வீசியிருக்கிறரே!

ஏட்டு. அது நிரம்பப் பெறும் என்று விரும்பியதாகத் தெரியவில்லை. யாரோ ஞாபகார்த்தமாகக் கொடுத்தது போலும். அதைப் பார்த்ததும் அவருக்கு இஷ்டாள் ஞாபகம் வந்து உள்ளங் கரைந்து கண்ணீராய் வடித்திட்டார்.

சூஸகன். ராஜாவுக்குப் பெரிய உதவி செய்திட்டீர்கள்.

ஜானுகன். ஏன், இந்தச் செம்படவன்கூட உதவித்தான் இருக்கிறன். (அவனைக் கூர்ந்து கவனிக்கிறன்)

அவன். ஏன், ஐயா, என் பேரிலே இவ்வளவு தயவு வைச்சீர்களே. இதிலே பாதிப் பணத்தை நீங்கள் வைச்சிக் கொள்ளுங்கள், ஆ?

ஜானுகன். ஆஹா, நிரம்ப சரி.

ஏட்டு. டே, நீ நமக்கு நிரம்ப வேண்டியவன், நம்முடைய சிநேகத்தை முதல் முதல் கள்ளுக் கடையில்தான் காட்ட வேணும், வா போவோம். (போகிறார்கள். ஸானுமதி தோற்றம்)

ஸானுமதி. இன்றைய அப்ஸர தீர்த்த நம் முறை முடிந்தது.

மேனகை எனக்கு நிரம்ப வேண்டியவள். அவள் மகள் சகுந்தலா என் கண்ணுக்குக் கண். அவள் வேண்டிக்கொண்டதை நான் செய்து முடிக்கவேண்டும். ரிஷீஸ்வரர்கள் எல்லாரும் இப்போது அநுஷ்டானத்துக்கு வருவார்கள். நான் இந்த அப்ஸர தீர்த்தக் கரையில் தங்கி யிருந்து அந்த ராஜ ரிஷி எப்படியிருக்கிறார் என்று கவனிக் கிறேன் (சுற்றுறக் கவனித்து)

ஆமா! இப்போது வசந்தோற்சவம் நடைபெறவேணும். இங்கு அரண்மனையில் ஏன் ஒரு சிறப்பும் இல்லை! போய்க் கவனித்தால் தெரிகிறது! மேனகைக்கு ஒரு நல்ல பதில் நான் கூறும்படி இருக்கவேண்டும். இந்த இடத்திலே மறைந் திருந்து, இந்த இரண்டு பெண்களும் என்ன பேசுகிறார்கள் என்று கவனிக்கிறேன்.

(இரு பெண்கள் வருகின்றனர். மாந் தளிரைப் பார்த்து)

முதற் பெண்:

* மாம்பூவே, பொன்அரும்பே—மகிழும் குயிலினங்கள்.
வண்டு காலால் மிதிக்கும்—வசந்தகாலம் உதிக்கும்.

---

* நீலாம்புரி—தாலாட்டு மெட்டு.

2-வது பெண். பிரதிகா, என்னமோ உனக்குள்ளேயே பேசிக்கொள்கிறுயே! என்ன அது?

பிரதிகை. மதுரிகா-இந்த மா அரும்புகளைப் பார்த்த வுடனே பிரதிகாவிக்குச் சந்தோஷம் பொங்கிவிட்டது!

மதுரி: (ஆச்சரியத்துடன் நெருங்கி) வஸந்த காலம் பிறந்திட்டதா! என்ன?

பிர. ஆமா, மதுரிகை பாடு இனி உண்டாட்டும் கொண் டாட்டமுந்தான்!

மது. அடி, மன்மத பூஜைக்குக் கொஞ்சம் மாம்பூப் பறிக்க வேண்டும், இங்கே வா. இப்படி நில். உன்னைப் பிடித் துக்கொண்டு கொஞ்சம் உன்னிப் பறித்திடுகிறேன்.

பிர. உன் பூஜா பலனில் எனக்குப் பாதி கொடுத்திடு.

மது. பாதிதான் ஏற்பட்டதே. உருவந்தான் இரண்டு, உயிர் ஒன்ருய்த்தானே இருக்கிறது. (தொட்டு நின்று பூக் கொய்தல்) இந்த மொக்கு இன்னும் கட்டு அவிழவில்லை. இப்போதுதான் விரிந்து வாசனை ஜம் என்று வருகிறது. (கன்னத்தில் ஒத்தி)

* மாம்பூவே, வில்லை மாரன்கை யெடுத்தான்
மகிழ்ந்து உன்னைஸ மர்ப்பிக்கின்றேன்
நாயகர் துறந்த நங்கையர் மார்பையே
நாடி விரைந்து நீ பாய்ந்திடுக.

ஐந்து அம்பினும் பெரிது நீ என்
யாருமதியவே வேலை செய்வாய்.
நொந்து பிரிந்து வருந்திய மங்கையர்
நெஞ்சினில் பசலை பூக்க வைப்பாய். (மாம்பூவே)

* கும்மி

(மா அரும்பு இறைத்தல். காவலன் திடும் பிரவேசமாய் வருதல்)

காவலன். ஏ, அசடுகள், அங்கே என்ன செய்கிறீர்கள்? இராஜா ஒரு உற்சவமும் வேண்டாம் என்று கட்டளை யிட்டிருக்கிறபோது நீங்கள் ஏன் பூப்பறிக்கின்றீர்கள்?

இருவரும். இனிமேல் பறிக்கவில்லை. எங்களுக்குத் தெரியாது அது.

காவ. ஆமா. இரண்டு பேருக்குமா தெரியாமல்போய் விட்டது? இந்த மரங்கள்கூட இராஜாவுடைய கட்டளையைத் தெரிந்து தளிர்க்காமல் பூக்காமல் நிற்கின்றன. இதோ பார், இந்த மாப் பூத்து எவ்வளவோ காலம்; இன்னும் ஒரு வடு அதில் பிடிக்கவில்லை. இந்தக் குரவகத்து அரும்புகள் பூக்காமல் அப்படியே இருக்கின்றன. வஸந்த காலம் பிறந்தும் குயில் இன்னும் கலக்கமாய்த்தான் இருக்கிறது. மன்மதனுங் கூட, பூட்டிய கணையை இழுத்த நாணோடு நிறுத்தி வைத்திருக்கிறான்.

ஸானு. அதற்கென்ன சந்தேகம்! துஷ்ய மஹா ராஜன் கட்டளையிட்டால் எல்லாந்தான் வணங்கி நிற்கும்.

பிர. ஐயா, நாலைந்து நாளைக்கு முன்னர் விச்ரவசு எங்களை மஹா ராஜாவிடம் அனுப்பிவைத்தார். அரண்மனையில் தோட்டத்தைப் பார்த்துக்கொள்ளும்படி உத்தரவாயிற்று. நாங்கள் இந்த இடத்துக்குப் புதிது. இராஜா இப்படி உத்தர விட்டிருப்பது எங்களுக்குத் தெரியாது.

காவ. போனது போகட்டும். இனிமேல் அப்படிச் செய்யாதீர்கள்.

இரு. நல்லது, ஐயா, ஒரு விஷயம் தெரிந்துகொள்ள ஒரு ஆசை. மஹா ராஜா ஏன், ஐயா, இந்த வஸந்தோற்சவத்தை

நிறுத்திவிட்டார்? சொல்லலாம் என்றால், எங்களுக்கும் கொஞ்சம் தெரிவியுங்கள்.

ஸானு. இதிலே ஏதோ ஒரு பெரிய ரகசியம் இருக்கும். புருஷாளுக்கு உற்சவம் என்றால் எப்போதும் நிரம்பப் பிரியமே.

காவ. இதுதான் எல்லாருக்கும் தெரிந்த விஷயம் ஆயிற்றே! சொல்கிறதற்கென்ன? இராஜா சகுந்தலாவைத் தள்ளிவிட்டார் என்று எங்கும் ஒரு அபவாதம் இருப்பது தெரியுமில்லையோ?

இரு. அரசரே ஒரு நாள் சொன்னார். அந்த அதிஷ்டம் கெட்ட மோதிரம் மறுபடியும் கைக்கு வந்தது வரைச் சொன்னார்.

காவ. அதற்குப் பிறகு சொல்கிறதற்கு ஒன்றுமில்லை. மோதிரத்தைக் கண்டதும், அவர் சகுந்தலாவை ரகசியமாய்க் கலந்து மணந்தது எல்லாம் ஞாபகத்துக்கு வந்தது. ஐயோ, மறந்துபோய் அவளைத் துரத்திவிட்டோமே என்று மனம் உருகி நைகிறார். விருப்பாயிருந்ததெல்லாம் இப்போது அவருக்கு வெறுப்பாயிருக்கிறது. கோமுறை கிடையாது: கூட்டம் கிடையாது. கட்டிலில் உட்காருகிறார், ஒரு ஓரத்தில் படுத்து, உறக்கமின்றி உருண்டு புரண்டு காலத்தைப் போக்குகிறார். அந்தப்புரத்திலுள்ளவர்கள் ஏதும் கேட்டால் ஒரு ஒப்புக்காக ஏதோ பதில் சொல்கிறார். ஒரு பெயருக்கு இன்னொரு பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறார். எப்போதும் தலையைக் கீழேபோட்டுக்கொள்கிறதும் ஏதாவது உளறுகிறதுமாயிருக்கிறார்.

ஸானு. நமக்கு நல்ல சமாச்சாரம் கிடைத்தது!

காவ. அரசர் மிகுந்த கவலையில் இருக்கிறதால்தான் விழா ஒன்றும் வேண்டாம் என்று வைத்தாயிற்று.

இரு. அது சரிதான்!

(திரைக்குள்) இவ்வழி, அரசே.

காவ. அரசர் இவ்வழி வருகிறார். வேலைகளைக் கவனியுங்கள்.

இரு. சரி, அப்படியே. (அரசன், விதூஷகன், காவலன் மூவரும் வருகின்றனர்)

விதூஷகன். அரசே, இவ்வழி.

காவ. (அரசரைக் கவனித்து) குப்பையிலும் மாணிக்கம் தன் ஒளியில் குன்றாது. அகத்திலே நிறைந்த கவலை இருந்தாலும் முகத்திலே திருந்திய முறுவல்! தேகத்தில் ஒரு ஆபரணங் கிடையாது. இடது கையின் ஒரே வாகுவலயமும் குழலாடுகிறது. உதடு இரண்டும் உலர்ந்து வெடித்துப் போகிறது. தூங்காமல் ஏங்கி ஏங்கிக் கண் இரண்டும் இரத்தச் சிவப்பாயிருக்கிறது. உடம்பும் மெலிந்துபோகிறது. இருந்தாலும் முகத்தில் இராஜ லக்ஷ்மி தாண்டவமாடுகிறாள். சாணையில் தேயத்தேய கல் ஒளி வளரும், அதுபோல இராஜ ராஜனுடைய உடம்பும் ஒளிர்கின்றது.

ஸானு. (அரசரைப் பார்த்து) அரசர் எவ்வளவோ அவமானப்படுத்தினார், வெளியே துரத்தினார். அதையெல்லாம் பொறுத்துக்கொண்டு சகுந்தலா அவரை நினைத்திருந்தாளே, அது நிரம்ப நல்லதாய் முடிந்தது.

அரசன். (உலாவி, யோசித்து) சகுந்தலா தன் நல்ல இளமான் போன்ற மருட்டும் கண்ணழகு காட்டி நின்றதைப் பார்த்த போதெல்லாம் ஒரு கவலையும் இல்லாமல் நிம்மதியாயிருந்தது என் நெஞ்சு. இப்போது வினை பிடித்தது. எப்

போது பார்த்தாலும் அவளை நினைத்து நினைத்து ஒரே ஏக்கம் ஆயிற்று.

ஸானு. ஆஹா, சகுந்தலாவுக்கு ஒரு நல்ல காலந்தான்.

விதூ. மஹா ராஜாவுக்கு மறுபடியும் சகுந்தலாப் பைத்தியம் பிடித்துவிட்டது. இதை எப்படிக் குணப்படுத்துகிறது!

காவ. (நெருங்கி வந்து) கொற்றவா, வாழி! நந்தவனம் முழுவதும் செப்பஞ் செய்யப்பட்டிருக்கிறது. சமுகத்திற்குப் பிரியமான எந்த இடத்திலும் உட்காரலாம்.

அர. வேத்ரவதி, நம் மந்திரி ஆர்யபிசுனரிடம் யாம் இரவில் நெடுநேரம் விழித்திருந்ததால், இன்று நியாய மண்டபத்திற்கு வருவதற்கில்லை என்றும், அவசரமாக யாம் கவனித்தே ஆகவேண்டியதாக எதுவும் உளதாயின் அவற்றை எழுதியனுப்புமாறும் யாம் கூறியதாகச் சொல்.

காவ. உத்தரவு, அரசே. (போகிறுன்)

அர. காவல, நீயும் உன் காரியங்களைக் கவனிக்கச் செல்.

காவ. ஆக்ஞை, அரசே. (போகிறுன்)

விதூ. இப்பொழுது ஒரு ஈயும் இல்லாது ஓட்டிவிட்டீர். நாம் இரண்டு பேருமே இருக்கிறும். இந்த உத்யாவனத்தின் சுகங்களை எல்லாம் உம் பிரியம்போல் அநுபவிக்கலாம்.

அர. அன்பா, பட்ட காலிலே படும் என்பது என் விஷயத்திலேயே சரியாயிருக்கிறது.

**கன்னிகை மீதுகொண்ட காதல்நோய் அறவே நீத்து**
**என்னை மூடிய அந்த காரத்தை அகற்றி நின்றேன்**
**மன்மதன் கரும்பு வில்லில் மாவின்பூ எடுத்துச் சேர்த்து**
**என்னையே தன் கணைக்கு இலக்கு வைத்திருக்கின்றுனே!**

விதூ. கொஞ்சம் சற்றே பொறுங்கள், நான் அந்த மன்மதனை அடித்து வீழ்த்திவிடுகிறேன். (கொம்பை உயர்த்தி மாம் பூவை உதிர்க்க ஆரம்பிக்கிறான்)

அர. (சிரித்து) நீ பிராமணன், எல்லாம் சமர்த்தாய்ச் செய்வாய்! எனக்குத் தெரியும். எதாவது சகுந்தலா மாதிரி ஒரு செடியிருந்தால் சொல். அதனடியில் போயிருந்து களிக்கலாம்.

விதூ. "நான் மாதவிப் பந்தலடியிலிருக்கிறேன். சகுந்தலாவின் படத்தை எடுத்துக்கொண்டு அங்கே வா" என்று சதுரிகையிடம் சொன்னீர்களல்லவா?

அர. ஆம், அதுவே எனக்கு மன நிம்மதிக்கு ஏற்ற இடமாகும். அவ்விடமே செல்வோம்.

விதூ. இவ்வழி, அரசே! (இருவரும் நடத்தல், ஸானுமதி பின்னால் போகிறாள்)

விதூ. நல்ல மாதவிப் பந்தல், அதற்கேற்ற பளிங்காசனம், புஷ்பம், தென்றல், நல்ல இடம்! இராஜோபசாரமாயிருக்கிறது. ஐயா, அமர்க, அமர்க. (இருவரும் தலைகுனிந்து உட்சென்று அமர்கின்றனர்)

ஸானு. நானும் மறைந்திருந்து அந்த சகுந்தலாப் படத்தைப் பார்க்கிறேன். அதனால் அவளிடம் போய் நாயகன் எப்படி விரும்புகிறார் என்று எல்லாம் சொல்லலாம். (மறைந்து நிற்கிறாள்)

அர. மாடவியா, யானும் சகுந்தலாவும் ஆதியில் சந்தித்ததிலிருந்து, எல்லாம் இப்போது என் ஞாபகத்துக்கு வருகின்றது. உனக்கு யான் எல்லாம் சொல்லியிருக்கின்றேன். அவளை நான் துரத்தியபோது நீ இல்லையே, அந்தப்

பேச்சும் பிறகு நீ ஏன் எடுக்கவே இல்லை. என்னைப் போல நீயும் மறந்துவிட்டாயா? உம்.

விது. ஆ, நான் மறக்கவில்லை. நீர் எல்லாம் சொல்லி முடித்துக் கடைசியில் 'இதெல்லாம் வேடிக்கைக்குச் சொன்னேன், உண்மை என்று நினைத்துக்கொள்ளாதே' என்றீரே அதையும் அப்படி நம்பிவிட்டேன். இந்த மண்டையில் வெறும் களிமண், அங்கே என்ன ஏறுகிறது! கொடுத்து வைத்ததுதானே கிடைக்கும்.

ஸானு. ஆமாம், அது அப்படித்தான்.

அர. அன்பா, எனக்கு ஏதாவது ஒரு வழி சொல்.

விது. இது உம் போன்றவர் கேட்கவேண்டிய கேள்வி இல்லை. விவேகம் உள்ள இடத்தில் விகாரம் ஏது? சூறைக் காற்றுக்குப் பாறை நடுங்குமோ!

அர. மாடவியா, மதிகெட்டு நான் சகுந்தலாவை வெறுத்தேன். இப்போது அதை நினைத்தால், நான் பெரும்பாவி! பரம சண்டாளன்!

வேண்டாம் என்று நான் வெறுக்க,
உடன் வந்தவரை அவள் தொடர,
"சீ, நீ இவணே இரு" என்று
சினந்துமா முனிபோல் கடுத்துரைக்க
கவன்று கலங்கிக் கதியிழந்து
கண்ணீர் நிறைந்து வழிந்தோட
என்னை எதிர்பார்த்தெடுத்த பார்வை!—
ஐயோ! கல்போல் நான் இருந்தேன்.
நெஞ்சம் அதனை உன்ன உன்ன
நஞ்சு பூசிய அம்பு பாய்ந்துள்
அருவித் தீவைத்து எரிக்குதையே!

ஸானு. தனக்கென ஒன்றை நாடுவதன் பயன், மனக் கவலைதான். அவருக்கு வியாகூலம், எனக்கு அநுகூலம்.

விதூ. அரசே, அவளை யாரோ ஒரு சாரணர் கொண்டு போய்விட்டதாய்த் தெரியவருகிறது.

அர. கணவனே தெய்வம் என்றிருப்பவளை வேறு யார் தாம் தொடுவார்? சகுந்தலாவின் தாயார் மேனகை என்று சொல்லக் கேட்டிருக்கின்றேன். ஒருக்கால் மேனகையின் சகாக்கள் அவளை எடுத்துச் சென்றிருக்கலாம்.

ஸானு. இப்பொழுது நினைக்கிறது பெரிய காரியமல்ல; அவளை மறந்தது இருக்கிறதே, அதுதான் பெரிய ஆச்சரியம்!

விதூ. அப்படியானால் சீக்கிரத்தில் அவள் நம்மிடம் வந்து சேருவாள்.

அர. ஏன் அப்படி?

விதூ. தம் மகள் புருஷனைப் பிரிந்து கஷ்டப்படுவதைப் பார்க்க எந்தத் தாய் தகப்பனுக்கும் சகிக்காது. கொண்டு வந்து சேர்ப்பார்கள்.

அர. அன்பா,

உருவெளியோ, கனவோ, உள்ளக் கொதிப்போ
புரிந்ததவக் குறையோ, திரும்பவும் பாராவண்ணம்
மறைந்தனள் யான் எண்ணியது எல்லாம்பாழ் அடைந்ததே!

விதூ. அப்படிச் சொல்கிறதற்கில்லை. வரவேண்டிய தெல்லாம் வந்தே சேரும் என்று இந்த மோதிரமே காட்டு கிறதே!

அர. (மோதிரத்தை நோக்கி) கிடைத்தற்கரிய இடம்! சகுந்தலை கை விரலினின்றும் நழுவிய இம்மோதிரத்தை நினைத்துத்தான் வருந்த வேண்டியிருக்கிறது.

என் உயிர்க்குயிர் செங்கசச் சகுந்தலா
காந்தள் மெல்விரலை எங்ஙனம் நீத்தனை !
புண்ணியம் பெரிதும் புரிந்திலை போலும்
என்னையே நீயும் இவ்வகை ஒக்கின்றாய் !

ஸானு. ஐயோ, வேறு யார் கையிலுங் கிடைத்திருந்தால் நம் கதி என்னவாயிருக்கும்!

விதூ. அரசே, இந்தக் கணையாழியை அந்த அம்மணி கையிலிட்ட நோக்கந்தான் என்ன ?

ஸானு. எனக்கிருக்கிற ஆசைதான் அவனுக்கும்! சரி கேட்கட்டும்.

அர. கேள்: வனத்தில் நான் சகுந்தலையை விட்டுத் திரும்பும்பொழுது, அவள் கண்ணீரும் கம்பலையுமாக என்னை நோக்கி நின்று, 'தாங்கள் வந்து என்னை ஆட்கொள்ள இன்னும் எத்தனை நாட்களாகும் ?' என்று கேட்டாள்.

விதூ. சரி, பிறகு ?

அர. இந்தக் கணையாழியை நான் அவள் கை விரலில் மாட்டி,

'திகழ்ந்திடும் நாமம் தினமொரு எழுத்தாய்
எண்ணித் தீர்வதன் முன்னாலே
மகிழ்ந்துனை அழைக்கக் காவலன் வருவான்
மன்னவன் மனைநீ அணைவாயே'

என்று சொல்லித் திரும்பினேன். இக்கன்னெஞ்சு எல்லாம் மறந்து வாளாவிருந்துவிட்டதே !

ஸானு. இது நிரம்ப அருமையான ஏற்பாடு! ஆனால் ஊழ் ஒத்துவரவில்லையே !

விதூ. ஆமாம், அது எப்படி அந்த மீன் வயிற்றுள் போயிற்று ?

அர. தேவி சஸிதீர்த்தம் ஆடும்போது கங்கையில் தவறி விழுந்திட்டது.

விதூ. அது நிரம்ப சரி.

ஸானு. ஐயோ, பாவம். ராஜ ரிஷி பழி என்ருல் நடுங்குகிறவர், இந்த மோதிரத்தால்தான் அவளை மணந்ததையும் மறந்துபோனுர். ஆமா, இவ்வளவு பிரியமும் இந்த மோதிரத்தில் அடங்கியிருக்கிற காரணமென்ன ?

அர. சீ, வெறும் அதிர்ஷ்டம் கெட்ட மோதிரம்!

விதூ. (அயல் நோக்கி) ஏது, ஏது! பித்தம் பிடித்திட்டது!

அர. ஏ! மோதிரமே! சகுந்தலை என்னும்
நேரிழை விரலைவிட் டெவ்வாறு அகன்றனை!
நீருள்ளே முங்கிநீ என்ஆழ்ந்து கிடந்தனை!
ஓர்வறு பொருள்நீ, அதன்உயர் வறிகிலாய்!
தேர்வுறு யான்மயங் கியதென் பெற்றியோ!

விதூ. (அயல் நோக்கி) உம் - பசி வாட்டுகிறதே!

அர. ஏ, என் அருமைக் காதலி, என்முன் தோன்றி எனக்கு நல்வாழ்வு கொடு. அநியாயமாக உன்னை வெளித்துரத்தியதை உன்னி உன்னி என் நெஞ்சம் பற்றி எரிகின்றது.

(ஸதுரிகை படங்கொண்டு வருகிருள்)

ஸதுரிகை. தங்களுடைய சகுந்தலாப் படம். (காட்டுகிருள்)

விதூ. வேலைத்திறம் நிரம்ப அழகு. நீர் நன்ருய்ப் பார்த்து மகிழவேணும். என் கண் பார்த்துப் பார்த்துப் பூத்துப்போயிற்று.

ஸானு. இராஜ ரிஷி திறமையே திறமை! சகுந்தலாவும் இப்போதிங்கிருந்தால் நன்றாயிருக்கும்.

அரசன் :

*எத்தனையோமுறை அழித்து எழுதியும்*
*அத்துணைச் சோபிதம் அமைதற் கில்லையே!*

ஸானு. அவர் வைத்திருக்கிற ஒரு பற்றும் மனத்தி லுள்ள ஒரு உருக்கமுந்தான் இப்படி எல்லாம் பாராட்டச் சொல்கிறது.

விதூ. இதிலே இருக்கிற மூன்றுபேர் படமும் நன்றாய்த் தான் இருக்கிறது. இதில் உம்முடைய சகுந்தலாதேவியார்?

ஸானு. இதைப் பார்த்தவுடனே சொல்ல முடியுதில் லையே, உனக்கெல்லாம் கண் இருந்து என்ன பிரயோஜனம்!

அர. எதுதான் சகுந்தலை. நீயே சொல் பார்ப்போம்.

விதூ. அதோ பூச்சிதற, முடிதொங்கி முகமெல்லாம் வேர்த்து, உடம்பு களைத்து ஒரு மரத்தைத் தழுவி நிற்கிறாளே அவள் சகுந்தலாவாயிருக்கலாம். இந்த இரண் டும் தோழியாயிருக்கலாம்.

அர. அடே, நீ நிரம்ப புத்திசாலி. குறிப்பாய்க் கண்டு பிடித்துச் சொல்லிவிட்டாய். சீ! படம்

*"கை வியர்வை பட்டோரம் கறையுமாஆகிறது,*
*கண்ணீர் விழுந்து அதன் வண்ணம் கரைகிறது"!*

ஸாதுரிகா, ஏன் இந்தச் சுற்றுப்புறம் அரைகுறையாய் இருக்கவேணும்! போய் மையும் தூரிகையும் எடுத்துவா.

ஸாது. மாடவியா, சற்றே பிடியும். நான் போய்வரும் வரைக்கும்.

அர. யான் பிடித்துக்கொள்கிறேன். (ஸதுரிகை போகி றாள்)

அர. (படத்தைப் பிடித்துப் பெருமூச்சுடன்)

நடந்துவழி நெடுகால் நீர்நிலைகள் பலவே
கடந்தபின்னர் வேட்கையால் நீர்க்கலைவான் போல
மடந்தையவள் வலியமுன்னர் வந்தவளை நீக்கிப்
படந்தனைக்கொண்டு பாதபூஜை செய்கின்றேனே !

விதூ. (அயல் நோக்கி) ஆற்றில் குடியாமல் இப்போது கானலைத் தேடுகிறீரா ! சரி, இன்னும் வரைகிறதற்கு என்ன இருக்கிறது ?

ஸானு. சகுந்தலாவுக்கு எதெல்லாம் பிரியமோ அதை எல்லாம் இங்கே வரைவார்.

அரசன் :

* 1. மாலினி நதிநீர் நிறைந்திடும்
மணற்கரையினில் மகிழ்ந்திருக்குமாம்
திரண்ட-அன்னம்-இரண்டு
2. மாமலைக்குன்று இருபுறத்திலும்
மானினம்வந்து ஒதுங்கு மிடமாய்
இருக்கும்-காட்சி-சிறக்கும்
3. மாமரக்கிளை விரிந்துபடர
மரவுரிகட்டி உலரவிட்டுத்
தொங்கும்-இங்கு-மங்கும்
4. மான்பிணை தன திடது கண்ணினை
ஆண்கலைத்தலைக் கொம்பு ராய்ந்து
தேய்க்கும்-உடல்-சாய்க்கும்.

இத்தனையும் வரையவேண்டும்.

விதூ. அதெல்லாமில்லை ! நல்ல தாடிவாலாக்களாய் பத்துத் தாபதர் படம் இதிலே வரையவேண்டும்.

அர. மாடவியா, ஒன்றை மறந்துவிட்டேன். அதுவும் சகுந்தலாவுக்கு அழகு கொடுக்கும்.

---

* சிந்து மெட்டு.

விதூ. அது என்னது?

ஸானு. ஆச்ரம வாசம், சாந்தமான இளம் பருவம் இரண்டுக்கும் எது அழகு தருமோ அதுதான்.

அரசன்:

சிரீஷமலர் காதில் தொங்கவேண்டும்—அதன்
கேசரம் கன்னத்தே விளங்கவேண்டும்
சரற்கால சந்திரனின் நுண்கதிர்போல்
தாமரைநூல் மார்பிடையே இலங்கவேண்டும்.

விதூ. சரி, ஏன் உங்கள் சகுந்தலா பயந்தவள் போலவிருக்கிறாள்? காந்தள் மெல்விரல்கொண்டு முகத்தை மூடுகிறது எதற்கு? (யோசித்து) ஓ சரிதான், வண்டு அவள் மதிவதனத்தை மலர் என நினைத்து, மதுவுண்ண மேல் விழுகிறதோ!

அர. அந்த அசட்டு வண்டைத் துரத்து.

விதூ. துஷ்ட நிக்ரஹம் உமது தொழில், உம்மால்தான் இது முடியும்.

அர. விரியும் மலர்களை விரும்பும் பிரிய வண்டே, ஏன் வீணே இங்குச் சுற்றிச் சுற்றி அல்லற்படுகின்றாய்! அதோ, உன் பெண்வண்டு தாகமுறினும் உன் வரவை எதிர்பார்த்து அப்புஷ்பத்தில் காத்திருக்கின்றது. நீ போய்ச் சேர்ந்தாலன்றி அது உண்ணாது, போ.

ஸானு. என்ன! வண்டு போய்விட்டதா?

விதூ. அது முரட்டு வண்டு! துரத்தினாலும் போனபாடில்லை.

அர. ஓ! வண்டே, நீ இன்னும் என் ஆணையை அலக்ஷ்யம் செய்கின்றாயா? இளந்தளிர் மேனி என் கோமளத்தின்

செவ்வாய் இதழை, என் அதரபான அமுதை, இன்னும் நீ தொட வந்தால் நான் திட்டமாய்ச் சொல்கிறேன், உன்னைத் தாமரை மலர்ச் சிறையில் வைப்பேன்.

விதூ. ஐயோ, நிரம்பப் பயமா யிருக்கிறதே! கொடிய தண்டனை. (அயல் நோக்கிச் சிரித்து) இவருக்கும் கிறுக்கு. இவரைச் சேர்ந்து சேர்ந்து எனக்கும் கிறுக்கு (அரசரைப் பார்த்து) ஏன் இந்தப் படத்தைக் கட்டி அழுகிறது!

அர. படமா! என்ன இது!

ஸானு. எனக்கும் படமென்பது மறந்தேபோய் விட்டது! உருவத்தை அனுபவித்து எழுதுகிற அவரைக் கேட்பானேன்?!

அர. மாடவியா, நீ சுத்த முட்டாள்தனமான வேலை செய்துவிட்டாய்.

அவளேஇது எனவேஎண்ணிச் சுகமேஅனு பவித்தேன்!
அவமேவினை வித்தாய்இது படமாம் என்ற சொல்லால்!
(என்று சொல்லிக் கண்ணீர் விடுகிறான்)

ஸானு. வேட்ட பொழுதின் அவையவை போலாகிய காதல் நீத்த பொழுதும் பலபல தோற்றுவிக்கிறது.

அர. மாடவியா, எனக்கு ஓயா உபத்திரவமாயிற்று. இதை எல்லாம் எப்படி ஒழிப்பேன் என்று தெரிகிறதில்லை.

தூங்கிக் கனவில் காண்கின்றேன்!
ஏங்கியிருந்து அழுகின்றேன்!
நிறைந்த கண்ணீர் மறைப்பதனால்
வரைந்தபடமும் பார்க்கவில்லை!

ஸானு. சகுந்தலாவைத் துரத்திய பாவத்துக்கெல்லாம் இது கழுவாயாகும். (சதுரிகை வருகிறாள்)

சது. அரசே, வாழி. வண்ணமும் தூரிகையும் எடுத்து இங்கு வரப் புறப்பட்டேன். அப்போது...

அர. அப்போது என்ன ?

சதுரிகை. வசுமதி ராணியும், தரளிகையும் அதைப் பிடுங்கிக்கொண்டு, "நாங்கள் கொண்டு சேர்க்கிறோம், நீ போ" என்றுவிட்டார்கள்.

விது. உன்னை விட்டுவிட்டதே நல்ல காலந்தான் !

சது. மஹாராணி முன்தானை முள்ளில் மாட்டிக் கொண்டது. தரளிகை அதை எடுத்துக்கொண்டிருந்தாள். அந்தச் சமயம் பார்த்து நான் ஓடிவந்துவிட்டேன்.

அர. மாடவியா, மஹாராணி தன்னையே நான் நிரம்பக் கவனிப்பதாக எண்ணிச் செருக்குற்றவள். அதோ வரு கிறாள். நீ படத்தை எடுத்துப் பத்திரப்படுத்து.

விது. "என் உயிரைப் பத்திரப்படுத்து" என்று சொல்கிறதுதானே ! (படத்தைத் தூக்கிப் பிடித்து) மகா ராணியார் கையிலிருந்து நீர் முதலில் மீண்டுவாரும். மீண்டு வந்தபின் நான் மேகமாடத்திலிருக்கிறேன் ; என்னைக் கூப் பிடும்.

ஸானு. எண்ணமெல்லாம் சகுந்தலாபேரில் இருந்தா லும் பழைய சேர்க்கைகளையும் கைவிடாது தழுவுகிறார் ! ஆனாலும் மனத்தில் இப்போது ஒரே கவலைதான் !

(காவலன் ஒரு கடிதத்துடன் வருகிறான்)

காவ. அரசே, நின்கொற்றம் சிறக்க !

அர. வேத்ரவதி ! வழியில் மஹா ராணியைக் காண வில்லையா ?

காவ. கண்டேன். கையில் கடிதத்தைப் பார்த்ததும் அப்படித் திரும்பிப் போய்விட்டார்கள்.

அர. காரியத்தில் கருத்தாயிருக்கும்பொழுது தொந்தரவு செய்யக்கூடாது என்று போய்விட்டார் போலும்.

காவ. அரசே, இன்று இராஜாங்க விஷயமாக வந்த கணக்கு தணிக்கை செய்கையில் ஒன்று மிகவும் சிக்கல் முக்கலாக இருந்தது என்று அதை மந்திரி தங்கள் கவனத்துக்கு எழுதி அனுப்பிவைத்தார்.

அர. அவ்வோலையை யான் பார்க்கட்டும். (காவலன் கொடுக்க, அரசன் வாசிக்கிறான்) என்ன, தனமித்திரன் பெரிய கடல் வியாபாரியாம், பிள்ளையில்லையாம், அவன் சொத்து அரசனைச் சேரவேண்டியதாம். பிள்ளையில்லாமலிருப்பது கஷ்டமான காரியந்தான்! சரி. அவன் பெரும் பணக்காரன், ஆதலின் அவனுக்கு மனைவியர் பலர் இருக்கலாம். அவர்களில் யாராவது கர்ப்பமாயிருக்கிறார்களா என்று விசாரித்தறியவேண்டும்.

காவ. அரசே, அவன் மனைவிகளில் ஒருத்தி சகேத செட்டி மகள் கர்ப்பமாயிருக்கிறாள். சமீபத்தில்தான் சீமந்தமும் நடத்தினார்கள்.

அர. அவனுடைய சொத்தெல்லாம் அந்தக் கர்ப்பத்திலிருக்கிற குழந்தையைச் சேரும் என்று மந்திரியிடம் சென்று அறிவி.

காவ. ஆக்ஞை, அரசே.

அர. நில் இங்கே!

காவ. இதோ.

அர. குழந்தையிருக்கிறதா இல்லையா என்கிற கேள்விகள் இனி வேண்டாம்.

'சுற்றமொன்றின்றி அல்லலுற்ளுேர்க்கு
அரசனே சுற்றமாய் நின்று
குற்றமில் நெறியில் வேண்டுவ செய்து
குறைதவிர்ப்பானது கண்டீர்.'

என்று நம் குடி ஜனங்களுக்கு அறிக்கை செய்.

காவ. அப்படியே செய்து வருகிறேன், அரசே.

(வெளிச் சென்று வந்து) குடி ஜனங்கள் இந்த ஆணையைக் கேட்டதும், பருவ மழை பெற்றது போல் மகிழ்கிருர்கள்)

அர. (நெட்டுயிர்த்து) என்ன கொடுமை! பிள்ளையில்லாத பக்ஷத்தில் ஒருவனுடைய சொத்து ஆதரிப்பாரின்றி அயலார் கைப்பட்டுச் சிதைகின்றது. ஐயோ! என்னுடைய காலத்திற்குப் பிறகு இந்த ஆட்சியும், இப் புரு வம்ஸ மாட்சியும் இக்கதிதானே அடையும்!

காவ. நமக்கு ஒரு குறைவும் வராது, அரசே.

அர. ஐயோ! வாயிலில் வந்த ஸ்ரீதேவியைத் துரத்திய எனக்கு என்ன உண்டு!

ஸானு. ஐயோ, அரசா சகுந்தலாவையே நினைந்து தன்னை நொந்து வருந்துகிருர்.

அரசன்:

பருவத்தில் விதைத்த மேனிகாண் பயிர்நிலம்போல்
கருவுற்றிருந்தாள்! கால்முளை தந்திடுவாள்!
உருவத்தில் சிறந்த உத்தமி, முதல் தேவியைத்
தெருவுற்றிடத் தள்ளித் திகைக்கின்றேன்! திருவும் அற்றேன்!

ஸானு. அரசே, உன் வம்ஸத்துக்கு ஒரு அழிவும் வராது.

சது. தனமித்திரன் செட்டியார் சமாச்சாரம் கேட்டதி லிருந்து அரசர் நிரம்பக் கவலையில் ஆழ்ந்துவிட்டார். போய் விதூஷகனை இட்டு வாருங்கள். (போகிறாள்)

காவ. அது நல்ல யோசனை.

அர. ஆ, விதியே! பிள்ளையில்லாத பாவி யான், எள்ளும் நீரும் என் முன்னோர்க்கு இறைக்கும் காலத்தில், அவர் கள் துஷ்யந்தனுக்குப் பின்னால் நமக்குந் திதி கொடுப்பார் யார் என்று எண்ணி அழுது கண்ணீர் விடுகின்றனரே! எண்ணீரும் கண்ணீரும் கலந்து உண்கின்றார்களே என் முன்னோர்! இவ்வாறு அவர்கள் ஐயுற்று அழும் நிலை ஏற்பட்டதே! ஐயோ!

சது. (நடுங்கி) அரசே, கவலைப்படவேண்டாம்.

ஸானு. குடத்துள் வைக்கப்பட்டு ஒரு தீபம் இருக்கவே இருக்கிறது. இவரோ அதை அறியாமல் அந்தகாரத்தில் மூழ்கித் தவிக்கிறார். சீக்கிரத்தில் அவர் சந்தோஷமாக வாழ வழி தேடவேண்டும். ஒரு நாள் இந்திரனுடைய தாய் சகுந்தலைக்குத் தேறுதல் சொல்லும்போது, தேவர்கள் எல்லா ரும் சேர்ந்து அவளைப் புருஷனோடு சேர்த்து வைக்கத் தீர்மானித்திருப்பதாகக் கூறினாள். அதுவரை நாமும் காத் திருக்கவேண்டியதுதான்! நான் போய் எல்லாம் சொல்லிச் சகுந்தலாவைக் கொஞ்சம் தேற்றிவைக்கின்றேன். (துள்ளிக் குதித்து மறைகிறாள்)

(திரைக்குள்) ஐயோ! பிராமணன்! கொல்லாதே! பிரா மணனைக் கொல்லலாமா!

அர. (கவனித்து) இதென்ன, மாடவியன் குரல் போல் இருக்கிறதே! யார் அங்கே?

காவ. (வந்து) அரசே, மாடவியன் பெருத்த ஆபத்தில் இருக்கிறான்! தாங்கள்தான் காப்பாற்றவேண்டும்!

அர. யார் அவனைக் கஷ்டப்படுத்துகிறது?

காவ. ஒரு பூதம்! கண்ணுக்குத் தெரியுதில்லை! அவனை மேகமாடத்தின் மேலுக்குத் தூக்கிச் செல்கிறது!

அர. (எழுந்து) அதெப்படி! என் அரண்மனையுள்ளுமா பூதம் பிரவேசிக்கிறது! அரண்மனைக்குள் நடக்கின்ற காரியங்களை என்னால் கவனிக்க முடியவில்லை என்றால், உலக மக்களின் ஒழுக்க நெறியை நான் எவ்வாறு அறிந்து இராஜ்யபரிபாலனம் செய்யமுடியும்!

(திரைக்குள்) அரசே, உதவியில்லையா! உதவியில்லையா!

அர. (முன் வந்து) அஞ்சாதே! அஞ்சாதே! மாடவியா!

(திரைக்குள்) ஐயோ! நான் எப்படி அஞ்சாமல் இருப்பது! ஒரு பூதம் என் பிடரியைப் பிடித்து நசுக்கி, மூன்று துண்டாய் முறிக்கிறதே! கரும்பைச் சாறு பிழிவது போல என் கழுத்தைக் கசக்கி முறிக்கிறதே!

அர. (சுற்றுறப் பார்த்து) எங்கே எனது வில்?

யவன மாது. (தோன்றி) இதோ வில்லும் கையுறையும்.

(அரசன் அவற்றைக் கையில் வாங்குகிறான்)

திரைக்குள். இரத்த வேட்கை கொண்ட புலி மானின் கழுத்தைக் கடித்து,உதிரத்தை உறிஞ்சுவது போல நான் உன் கழுத்தை ஒடித்து வதைக்கிறேன் பார்! ஆபத் சகாயர் துஷயந்த மஹா ராஜன் இப்பொழுது வில்லேந்தி வரட்டும் பார்க்கிறேன்! உன்னைக் காப்பாற்றிவிடட்டும்!

அர. (கோபமாய்) என்னையும் பழிக்கிறான். ஓ, பிணந்தின்னிப் பேயே, நில். இப்போதே உன் உயிரை வாங்குகின்றேன் பார்! (வில்லை நாண் ஏற்றுகிறான்) காவலா, மேடைக்கு வழி காட்டு.

காவ. அரசே, வருக, வருக. (போகிறான்)

அர. (சுற்றுறப் பார்த்து) இங்கு ஒருவரையுங் காணேமே!

திரை. ஐயோ, உதவிக்கு ஒருவருமில்லையே! நான் தெரியுதில்லையா! என் கண்ணுக்கு நீர் தெரிகிறதே! பூனை வாய்ப்பட்ட எலிபோல இருக்கிறேனே! தப்ப வழி இல்லையே!

அர. ஓ, மறைந்து வேலை செய்யலாம் என்கிற தைரியமா! சரி, என் கணை இப்போதே உன்னை வெளியாக்கும்! நான் நாணேற்றிக்கொள்ளட்டும்.

*அன்னம் நீரை நீத்ததனுள்*
*அமைந்த பாலைப் பருகுதல்போல்*
*இன்னல் புரியும் உனைக்கொன்று*
*இரட்சிப் பளிப்பன் இனியோர்க்கே!*

(அம்பு தொடுக்கின்றான், மாடவியனை நீத்து மாதலி தோன்றுகின்றான்)

மாதலி. அரசே, அசுரர்கள் யாவரும் உன் அம்புக்கு இரையாக இந்திரன் ஏற்ற வழி செய்துள்ளான். ஆதலின் உன் அம்பை அங்குப் பிரயோகிக்கலாம். நல்லவர்களை சாதுக்களைத் தேடி வருகிறார்கள். தம்மை நாடிவரும் அவர்கள் மீது சாதுக்கள் பாணப் பிரயோகம் ஒருபொழுதும் செய்வதே இல்லை.

அர. (வில்லைத் தளர்த்தி) ஓ, மாதலி, இந்திர சாரதி, உன் வரவு நல்வரவாகுக!

விதூ. (முன் தோன்றி)யாக பலி மாதிரி என்னை வதைத்த இவனை நீர் வரவேற்கிறீரே, சரிதான்!

மாதலி. (சிரித்து) ராஜ ராஜேந்திரன் என்னை இவ்விடத்திற்கனுப்பிவைத்த நோக்கத்தைத் தாங்கள் கேட்க வேண்டும்.

அர. சொல், கவனிக்கின்றேன்.

மாதலி. காலநேமிக்குப் பிறந்தது துர்ஜயன் என்னும் கொடிய பூதம்.

அர. ஆம், நாரதர் சொல்ல யானும் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

வெங்கதிர் வரவிலும் வீயாப் பேரிருள்
சந்திரன் வரவினுல் சாய்ந்து ஒழிந்திடும்
பங்கம்செய் துர்ஜயன் பலத்தை நசுக்கவே
இந்திரன் நின்துணை வேண்டி யனுப்பினுன்.

மாதலி. ஆதலின் யுத்த சந்நத்தராக, இதோ இந்திரனுடைய ரதம் நிற்கிறது, ஏறிவந்து ஜயம் பெறுக.

அர. இந்திரன் என்னை வேண்டினுன் என்பதும் எனக்கோர் பெருமையே. நிற்க, மாடவியனை நீ இவ்வண்ணம் ஹிம்ஸை பண்ணிய காரணம் யாது?

மாதலி. மன்னர் ஏதோ மனக்கவலையாயிருப்பதாய் அறிந்தேன். ஆகையால் உள்ளத்தில் சிறிது கோபம் உண்டாக்குவதற்காக அப்படிச் செய்தேன். கடைந்தால தான் கட்டையில் தீப் பிறக்கும். பாம்பு அடித்தால்தான் படம் விரிக்கும். மனிதருக்குக் குட்டினுல்தான் கோபம் வரும்.

அர. மாடவியா, நான் இந்திரன் வேண்டியவற்றைச் செய்து முடிக்கவேண்டும். ஆதலின் இங்கு நடந்ததை எல்லாம் நம் மந்திரி பிசுநருக்கு அறிவித்து, அவருடைய சமர்த்தால் ராஜ்யத்தை நடத்திவரச் சொல். நம்முடைய வில் அசுரரை நோக்கித் திரும்பியுள்ளது.

விது. அப்படியே செய்கின்றேன், அரசே.

மாதலி. அரசே, ரதம் தயாராக இருக்கிறது.

(தேர் ஏறுகிறுன், யாவரும் செல்கின்றுர்)

(திரை விழுகிறது)

# காட்சி 7

[அரசனும் மாதலியும் ஆகாய மார்க்கமாக ரதத்தில் வருகின்றனர்]

அரசன். மாதலி, இந்திரன் வேண்டியதைச் செய்து முடித்தேன். ஆயினும் அவன் புரிந்த உபசாரத்திற்கு நான் செய்தது ஒரு உபகாரமாகமாட்டாது.

மாதலி. (சிரித்து)

உற்ற பெருமைக்கு நீ அரசே உதவிய தொண்டு சிறிதென்றாய்,
பெற்ற உதவிக்கு உபசாரம் போதாதென்னும் விண்வேந்தே.

மன்னவா, இவ்வாறு உங்கள் இருவருக்குமே அதிருப்திதான்.

அர. மாதலி, அப்படியல்ல அது. நான் புறப்படுந் தருணத்தில் இந்திரன் காட்டிய உபசாரம் யாருக்கும் கிடைக்கக் கூடியதன்று.

சிங்காத னத்தினில் தேவர்கள் மத்தியில் தன்னோடு என்னை வைத்து
மந்தார மாலை சூட்டிஅரிச் சந்தனம் தன்கையால் மார்பி லணிந்து
சிங்கார மாயெனைச் சிறப்பிக்க எண்ணிஅயல் நின்றதன் சுதன் ஜயந்தனை
மந்தகாசத்தோ டொருகண்ணால் நோக்கி அவன் மகிழ்ந்ததை என் மனம் மறக்குமோ!

மாதலி:

அன்றொருநாள் இந்திரர்க்கா விண்மேவி
அசுரர்களை நரசிங்கன் அழித்துக் காத்தான்!
இன்றிரண்டாம் முறையசுரர் இரிந்தோட
இரக்ஷிப்பு அளித்ததுஉன் கைவில் அம்பே!

ஆதலின் இம்மன்னவருக்கு மகபதி யாது செய்யினும் தகுதியே.

அரசன் :

சூரியன் வலவனுகி அருணன்
சூழ்ந்த பேரிருளைப் போக்கும்
ஆரியர் விருதிற்காக என்றும்
ஆற்றுவர் கருமம் மாந்தர் !

ஆதலின் இவ்விடத்தும் இந்திரனுடைய பெருமையையே நாம் பாராட்டவேண்டியிருக்கிறது.

மாதலி. நல்ல ஒப்புக் கூறியுள்ளீர்கள்! (ரதத்தைச் சிறிது ஓட்டி) அரசே, இங்கிருந்து விண்ணளாவிய தங்கள் பெருமையைப் பாருங்கள் !

விண்அர மகளிர்தாம் ஆடிப் பாடிட
மன்னவ நின்பெரும் புகழ்ச் சரிதமே
பொன்னிற உடலில் பூசும் வண்ணத்தால்
மென்றளிர்க் கற்பக ஏட்டில் வரைகிருர் !

அர. மாதலி, நேற்று யுத்தத்தில் முனைந்திருந்ததால் நான் விண் வந்த மார்க்கத்தையும் கவனித்தேனில்லை. நாம் இப்பொழுது எம்மண்டலத்தில் இருக்கின்றோம் ?

மாதலி. நாம் இருப்பது பரிவாஹ மண்டலம். இங்கு ஆகாயகங்கை மூன்று கால்களாகப் பாய்கின்றது. இதனாலேயே கிரஹங்கள் நியதி தவருது தங்கள் வட்டங்களில் ஒளி தந்து சுழல்கின்றன. மஹாவிஷ்ணுவின் இரண்டாவது காலடியால் அளக்கப்பட்டுப் புனிதமாகியதும் இவ்விடந்தான்.

அர. மாதலி, நிரம்ப சரி. அதனுல்தான் என் அகமும் புறமும் ஒருங்கே சாந்தியடைகின்றன. (தேர்ச் சக்கரத்தைப் பார்த்து) நாம் இப்போது இருப்பது மேகமண்டலமோ ?

மாதலி. ஆ! அது தங்கட்கு எவ்வாறு தெரியவந்தது ?

அரசன் :

*நீருண்ட மேகத்தில் தாமுருண்டோடவே*
*ஈரமாயினதேர் உருளைகள்! அவற்றின்*
*ஆரக்காலூடு சிறு சாதகப்புள் பறக்க*
*அந்தரமின்னுல் குதிரை மின்னுமே!*

மாதலி. *அரசே, இன்னும் சிறிது நேரத்தில் நாம் நம் ராஜ்யத்துக்கு வந்துவிடுவோம்.*

அரசன் :

*மலை முகட்டோடு சரி மட்டத்தில் தோன்றிய*
*தரையு மலையுச்சியி லிருந்துகீ ழிறங்கவும்*
*வரைகள் நிலமட்டத்தி லெழுந்து மேல்முளைக்கவும்*
*மறைந்த மரவடிகளெலாம் கட்புலனில் தோன்றவும்*
*குறைந்தநீர்ச் சிறுஓடை பெருநதியா மாறவும்*
*பரந்த உலகொருவர் உந்தஎன் அடியில் வீழவும்*
*பார்க்கிறேன் ரத மிறங்கும் பெருவேகத்தாலே!*

மாதலி. *அரசே, நன்றாய்க் கவனித்திருக்கிறீர்கள். இந்த உலகம் என்ன அழகு! என்ன கெம்பீரம்!*

அர. *மாதலி, கீழ்க்கடலிலிருந்து மேல்கடல்வரைப் பரவி, மாலைச் செக்கர் வானம்போன்று பொன்மயப் பனி நீரால் மூடப்பெற்றிருக்கின்ற இது என்ன?*

மாதலி. *மன்னவா, இதுதான் ஹேமகூடம். கிம்புருடர்கள் வாழும் இடம். இஷ்ட சித்தி பெறுதற்குரிய ஸ்தலம். பிரம்மபுத்திர மரீசி வம்ஸத்தவரும் தேவாசுரர்கட்குத் தலைவருமான பிரஜாபதி தன் மனைவியுடன் இங்குத்தான் தவம்புரிந்துகொண்டு இருக்கின்றார்.*

அர. *சரி நானும் அவரை அடிவணங்கிச் செல்லலாம். ஏன் இந்த அரிய சந்தர்ப்பத்தை இழக்கவேண்டும்.*

மாதலி. நிரம்ப நல்லது, அப்படியே செய்வோம் (இறங்கி வருகின்றனர்)

அரசன் :

உருள்தேர்க்கால் தரையினைத் தொடுவதே இல்லை !
உருளுங்கால் ஒலிசிறிதும் கேட்பதேஇல்லை !
வருபுழுதி கண்முன்பு தெரிவதே இல்லை !
இரதமுங்கீழ் செல்வதை நான் அறிவதே இல்லை !

மாதலி. இந்திரனுக்கும் மன்னருக்கும் இருக்கிற வித்தியாசம் இவ்வளவுதான் !

அர. மாதலி, மரீசி முனிவருடைய ஆச்ரமம் எம் மண்டலத்திலிருக்கின்றது ?

மாதலி. (சுட்டிக் காட்டி) அதோ மஹ ரிஷி கிழக்கு நோக்கி நிஷ்டையில் தாணு லிங்கம் போன்று இருக்கின்றார். சரீரத்தில் பாதியைக் கறையான் புற்று மூடிவிட்டது. மார்பில் சர்ப்பங்கள் பின்னிக் கிடக்கின்றன. கொடியும் தூறும் அவர் கழுத்தைச் சுற்றிப் படர்கின்றன. தோள்மேல் விரிந்து கிடக்கும் ஜடா முடியில் பறவைகள் கூடு கட்டி வாழ்கின்றன.

அர. தவசிரேஷ்ட ! நமஸ்காரம் !

மாதலி. (ரதத்தை நிறுத்தி) ராஜ ராஜ, இப்போது நாம் இருக்குமிடம் பிரஜாபதியுடைய ஆச்ரமம். இங்கு நிறைந்துள்ள மந்தாரை மரங்கள் பலவும் அவர் பத்தினி அதிதி தேவியார் வளர்ப்பவை.

அர. ஸ்வர்க்கத்தினும் ஸாந்தி அமைந்த இடம் ! இன்ப ரசத் தேனை மூழ்க மூழ்க அனுபவிக்கின்றேன் யான் !

மாத. (தேரை நிறுத்தி) அரசே, இப்போது தாங்கள் கீழிறங்கலாம். (இறங்குகிறான்) அரசே, இவ்வழி. தபோவனத்தையும், தவ ஒழுக்கத்தையும் சற்றே கவனியுங்கள்.

அர. என்ன! நிரம்ப ஆச்சரியமாயிருக்கின்றதே!

நற்றவஞ் செய்து பின்னர் நண்ணுதற் குரியஇந்த
கற்பகச் சோலை தென்றல், கமலச்செந் தாதுவீழ்ந்த
பொற்றடப் பொய்கை, தேவ மாதர்கள் கொள்ளும். ரத்னக்
கற்களில் யோகங்கூடி யிருப்பவர் கலங்கமாட்டார்.

மாதலி. பெரியோர் உன்னுவ யாவும் உயர்வே உன்னுவர்.

ஆகாயவாணி. ஹே, ஸாகல்யரே, மரீசி முனிவர் யாது செய்கிறார்? என்ன சொல்கிறார்? தாக்ஷாயணி "கற்புடைய மாதரின் கடமையாது?" என்று கேட்க, அதற்கு மரீசி முனிவர் தாக்ஷாயணிக்கும் மற்றும் ரிஷி பத்தினியர்க்கும் அதை உபதேசிக்கிறார் என்று சொல்கிறீரோ!

அர. (கவனித்து) காலம் வரும்வரைக் காத்திரு என்பது தான் இது.

மாதலி. (அரசனை நோக்கி) அரசே, இவ்வசோக மரத் தடியில் அமருங்கள். நான் சென்று இந்திரர்க்குப் பெற்றோ ராகிய இவர்களைத் தரிசிக்கச் சமயம் அறிந்து வருகிறேன்.

அர. உன் யுக்தம்போல் செய். (மரத்தடியில் இருக் கிறான்)

மாதலி. அரசே, விடை பெறுகிறேன். (போகிறான்)

அரசன்:

அன்றே நல்லுருக் காட்டி அகன்றதால்
இன்னும் மீண்டுவந் தெய்துதற் கில்லை!
இன்றேன் துடிப்பது! புஜமே, இனியெனக்
கென்னுண்டு என்னுளம் இனிக்கஇவ் விடமே!

(திரைக்குள்) சொன்னால் கேட்கிறாயில்லையே, உன் பிரியம்போல நடக்கிறதா!

அர. (கவனித்து) இந்த இடத்தில் மீறி நடக்கிறதற்கு யார் இருக்கிறார்! யாரை யார் ஏன் இப்படிக் கடிந்துகொள் கிறார்?

(குரல் வந்த திசைநோக்கி ஆச்சரியத்துடன்)

*தாய்முலையில் வாய்வைத்துப் பால்பருகும் குருளைச்*
*சாய்பிடரி மயிர்சிதறப் பற்றிஇழுத் தெடுக்கும்*
*சேயிவன்யார்? மிகத்துடுக்கன்! சிறுவரில் அசாத்யன்!*
*செய்யநற் றவப்பெண்கள் இருவர் தொடர்வார் யார்?*

(பையனும் இரு பெண்களும் வருகின்றனர்)

சிறுவன். ஏ, சிங்கமே, உன் வாயைத் திற, எத்தனை பல் லென்று நான் எண்ணட்டும்.

முதல் தவ மாது. அடே, அசடு, அதை நாம் ஒரு பிள்ளை போல பேதம் பாராட்டாமல் வளர்த்துவருகிறோமே, அதைப் பிடித்து உபத்திரவப்படுத்தலாமா. உன் துடுக்கு வர வர அதிகமாக வளர்கிறதே. சர்வ மதனன் என்று நிரம்பப் பொருத்தமாய்த்தான் பெரியவர்கள் பெயரிட்டிருக்கிறார்கள்!

அர. பெற்ற பிள்ளையைப் பார்ப்பது போல என் சிந்தை யில் ஒரு வாஞ்சை உதிக்கிறதே. என்ன காரணம்! மகப் பேறின்மைதான் இந்த வாஞ்சையின் காரணமாகும்.

2-ம் மாது. அடே, குட்டியை விட்டுவிடு, இல்லையானால் தாய்ச்சிங்கம் உன்மேல் சாடிவிடும்.

சிறு. (சிரித்து) ஆமா! எனக்கு நிரம்ப பயம்!

(உதட்டைப் பிதுக்குகிறான்)

அரசன்:

*அனல்பொறியா யிருந்தவிற*
*கண்டவே நெருப்பேறிடும்!*
*வனப்பதிகா ரவுருஇவன்*
*மேன்மக்கள்கால் முளையாகுமே?*

1-ம் மாது. குழந்தை, இந்தக் குருளையை விட்டுவிடு. நான் உனக்கு வேறு பொம்மை தருகிறேன்.

சிறு. எங்கே பொம்மை? கொடு. உம். (கைந் நீட்டுகிறான்)

அர. பொம்மை வேண்டி மலர்ந்த அங்கையில்

வைகறையாமத் திடைவெளியின்றிச்
செய்யதா மரைஇதழ் சேர்ந்து நிற்றல்போல்
தையலாள் வார்த்தையை நம்பி விரிந்தசெங்
கையமர் விரல்களின் காட்சி நின்றதே!

என்ன, இவன் அரச அம்சங்கள் பெற்றிருக்கின்றான்!

2-ம் மாது. சுவரதை, இவனை நாம் வெறும் மொழியால் சரிப்படுத்திவிட முடியாது. நீ போய், நம் விடுதியில் அந்த மார்க்கண்டேயனுடைய ஓர் வண்ண மண்மயில் இருக்கிறது, அதை எடுத்துவா.

1-ம் மாது. இதோ எடுத்து வருகிறேன். (போகிறாள்)

சிறு. அதுவரைக்கும் நான் இந்தக் குருளையோடு விளையாடுகிறேன். (மாதை நோக்கிச் சிரிக்கிறான்)

அர. இந்தப் பையன் துடுக்கைப் பார்க்கப் பார்க்க எனக்கு அதிகப் பிரியமாயிருக்கிறது.

மழலைமொழி யாடிவரும் செவ்வாயும்
மல்லிகைமொக் கெனத்தோன்றும் பல்லரும்பும்
செழுமையுறு உள்ளத்தின் இயல்பான
செஞ்சிரிப்பும் கண்முன்னே காட்டிநின்று
புழுதிபடி மேனியுடன் அருகிலோடி
மடியமரத் துடித்துநிற்கும் மக்கள்தம்மைத்
தழுவியிரு காத்தேந்தித் தோளிற்சேர்த்துத்
தரித்தஉடை கறைப்பட்டார் நிறைவேயுற்றார்!

மாது. நான் சொன்னால் இவன் கேட்கமாட்டான் (அயல் நோக்கி) எங்கே, இந்த ஆச்ரமத்துப் பையன்கள் ஒருவரும்

இல்லையா ! (அரசனை நோக்கி) ஆரிய, சற்றே இங்கு வாருங்கள். இக்குருளை இவன் கையிலிருந்து விலக முடியாமல் தவிக்கிறது. தயைசெய்து தாங்கள் அதை விடுவித்துவிடுங்கள்.

அர. (நெருங்கிச் சிரித்து) மஹா ரிஷி புத்திரா,

தாபத நெறிக்குரிய சத்துவ குணத்தை நீத்தாய்
ஜீவகா ருணியமென்னும் குலவழிச் சீலம்போக்கி
சார்வதற் காகாவண்ணம் சந்தன மரத்தைச்சேரும்
ஓர் கருநாகம்போல விளங்குவ தேனோபிள்ளாய் !

மாது. ஐயா, அவன் மஹா ரிஷி புத்திரன் அல்ல.

அர. அவன் துடுக்கும் அதை ஒத்த அவன் தோற்றமும் நீங்கள் சொல்வதைத் தெளிவாக்குகின்றன. அவன் இருக்குமிடத்தை எண்ணியே யான் அவ்வாறு புகல நேர்ந்தது. (சிங்கத்தை விடுவித்து அவனருகில் வருகிறான் ; தனக்குள்)

எந்த வம்ஸம் தந்தநற் கனியோ !
இவனைத் தொடலுமென் உடலுளம் கனியும் !
மைந்தனாய் இவனை மடிமேல் வளர்க்கும்
தந்தையின் சிந்தை எத்துணை மகிழுமோ ! ஆ-ஹா.

மாது. (இருவரையும் பார்த்து) சரிசரி, நிரம்ப சரி.

அர. அம்மணீ, அது என்ன "நிரம்ப சரி" ?

மாது. இந்தப் பையன் முன்பின் தங்களை அறியாதவன். இருந்தாலும், நிரம்பத் தாராளமாகப் பழகுகிறான். உருவமும் தங்கள் சாயலே அமைந்திருக்கிறது. இதைப் பார்த்தால் எனக்கு ஆச்சர்யமாயிருக்கிறது.

அர. (பையனை அணைத்து) சரி, இவன் மஹா ரிஷி புத்திரன் அல்ல ; பின், இவன் எந்த வம்ஸத்தினைச் சேர்ந்தவன் ?

மாது. இவன் புரு வம்ஸத்தான்.

அர. (தனக்குள்) சரி, நான் பிறந்த புரு மரபிலேயே இவனும் பிறந்திருக்கிறான்! இதனாலன்றோ அந்த அம்மணி என் சாயலாய் அவன் இருப்பதாய்க் கூறியுள்ளார்கள்! உலக பரிபாலனத்தின் பொருட்டு ரத்னமணி மண்டபங்களில் வாழ்ந்துவருவதும், பின் முதிர் வயதில் தவசிகள் வாழும் கானகத்தின் மரத்தடிகளில் வானப்ரஸ்தர்களாய் வாழ்வதும் புரு மரபினர் கையாளும் விரதமாகும். (உரக்க) சரி, இந்த இடம் மனிதவர்க்கம் வரமுடியாத இடமாயிற்றே!

மாது. ஆம், ஐயா, தாங்கள் சொல்வது சரிதான். இவனுடைய தாய் ஒரு அப்ஸரஸ்திரீயுடன் கொண்ட உறவினால் இங்கு வந்து, இந்த ஆச்ரமத்தில் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

அர. (அயல் நோக்கி) இதுவும் என் எண்ணத்துக்கு இசைந்தேயிருக்கிறது! (உரக்க) அந்த அம்மாளுடைய நாயகர் திருநாமம் யாது?

மாது. தன் வாழ்க்கைத் துணையைப் புறக்கணித்த அவர் பெயரைச் சொல்லி எதற்கு? எனக்கு அது இஷ்டமில்லை.

அர. (தனக்குள்) எல்லாக் கதையும் என்னையே குறிப்பிடுவதாயிருக்கின்றது! சரி, இப்பையன் தாயார் யார் என்று விசாரிப்போம். இல்லை, பிறர் மனைவியரைப்பற்றி விசாரிப்பது மேலோர் முறைமையல்ல. (அடுத்த மாது மயிற் பொம்மை ஏந்தி வருகிறாள்)

மாது. ஸர்வமதனா, இந்த ஸகுந்த லாவண்யத்தை பார். ("சகுந்தலா" என்ற ஒலி அவன் மனத்திற் படுகிறது)

சிறு. அம்மா எங்கே!

இருவரும். அம்மாமீதிலிருக்கிற ஆசையில் பையன் பேரைக் கேட்டு ஏமாந்துபோனான்.

2-ம் சாது. குழந்தை, உன்னை இந்தச் சகுந்தம் லாவண் யத்தையல்லவா பார்க்கச் சொன்னேன்.

அர. (தனக்குள்) சகுந்தலாதான் தாயின் பெயர். சரி. பேரும் சில சமயங்களில் ஒத்து வருவதுண்டே! நீர் வேட்கை கொண்டவனுக்குக் கானல்போல, எனக்கும் இந்தப் பெயர் ஒலி ஏமாற்றமோ, யாதோ!

சிறு. அம்மா, அந்த ஸகுந்தம் எனக்கு. (எடுக்கிறான்)

1-ம் மாது. (கவனித்துத் திகைத்து) உன் கையில் கிடந்த ரக்ஷையைக் காணோமே! அடடா!

அர. அம்மா, இதற்குக் கவலை வேண்டா. அவன் அந்தக் குருவியைப் பிடித்து இழுக்கிறபோது, அது நழுவிக் கீழே விழுந்தது. (எடுக்கப் போகிறான்)

இரு. ஐயா! ஐயா! அதைத் தொடவேண்டாம்! இதென்ன, கையில் எடுத்திட்டாரே! (மார்பில் கைபிணைத்து ஆச்சரியத்துடன் நிற்கின்றனர்)

அர. நீங்கள் எம்மைத் தடுத்ததும் ஏனோ!

1-ம் மாது. சொல்கிறேன். கேளுங்கள். இதற்குப் பெயர் அபராஜிதை. இந்தப் பையன் பிறந்தபோது மரீசி முனிவர் இதை ஒரு ரக்ஷயாகக் கொடுத்தார். அது கீழே விழுந்தால் அவன், அவன் அப்பா, அம்மா தவிர வேறு யாரும் அதை எடுக்கக்கூடாது.

அர. எடுப்பின்?

1-ம் மாது. எடுப்பின் அது ஒரு பாம்பாக மாறிக் கடிக்கும்.

அர. சரி, அது பாம்பாக மாற நீங்கள் எப்போதாவது பார்த்ததுண்டா ?

இரு. ஏன், எத்தனையோ முறை !

அர. (மகிழ்ந்து தனக்குள்) நான் நினைத்தபடி எல்லாம் அமைந்தது: இனி நான் மகிழ்வதற்கென்னை ?

(பையனைத் தழுவுகிறான்)

2-ம் மாது. சுவரதை, சகுந்தலா அங்கு நோன்பு அறையில் இருக்கிறாள். நாம் போய் இந்தச் சமாச்சாரத்தை எல்லாம் சொல்லலாம் வா. (போகிறார்கள்)

சிறு. என்னை விடும். நான் அம்மாவிடம் போகவேணும்.

அர. குழந்தை, யானும் உன்னோடு வருகின்றேன். அதுதான் அம்மாவுக்குச் சந்தோஷமாயிருக்கும்.

சிறு. எங்கள் அப்பா துஷ்யந்த மஹாராஜன் ; நீ யல்ல.

அர. இந்த விவஹாரந்தான் உண்மையை நிலைநாட்டி விட்டது !

(சகுந்தலா விரித்த தலையும் கற்றைக் குழலுமாய் வருகிறாள்)

சகு. ஸர்வமதனன் ரக்ஷை பாம்பாக மாறவில்லையாம். இருந்தாலும் என்ன ? எனக்கு நல்வாழ்வு இனி ஏது ! ஆனால் ஸானுமதி சொன்னபடி யாவும் நடைபெறலாம்.

அர. (சகுந்தலையைக் கண்டு) இதோ சகுந்தலை !

இருமலின ஆடை உடையும்,<br>
விரித்தகார்க் கூந்தற் கற்றையும்,<br>
வருந்தி ஒடுங்கு வதனமும்<br>
பிரிந்ததால் கொண்ட பெருவிரதமோ ?

ஆ ! உத்தமி ! நான் பாவி ! பெருந்துரோகி !

சகு. (மோதிரத்தை நோக்கி, வருந்தி) என் நாயகன் மாதிரி இல்லையே இவர்! என் குழந்தை ரக்ஷை தரித்து மஹ ரிஷி பாதுகாப்பிலிருக்கிறது. அதைத் தொட்டுத் தீட்டாக்கு கிறதற்கு இவர் யார்!

சிறு. (தாயண்டை நெருங்கி) அம்மா, இவர் என்னை எடுத்து, "நீ என் பையன், நீ என் பையன்" என்று சொல்கிறார்.

அர. கண்ணே, நான் உன்னை எவ்வளவோ கஷ்டப்படுத்தி விட்டேன். உன்னைக் கைவிட்ட என்னையும் நீ ஆதரவாக எண்ணியிருந்ததைக் காண என் நெஞ்சம் தெளிவடை கின்றது.

சகு. (தனக்குள்) நெஞ்சே, நிம்மதியாயிரு, பொல்லாப்பு எல்லாம் விலகி ஏதோ இரக்கம் பிறந்திருக்கிறது. நிம்மதி கொள். இவரே எனது நாயகர்!

அர. கண்ணே.

கிரகணம் விட்டபின் முழுமதி யுடனே
உரோகிணி கூடி நிற்பதே போல
கரிய பேரிருள் இரிந்ததுன் நினைவால்.
தெரிவை தோன்றினையான் செய்தவப் பயனே!

சகு. வெற்றி! என் நாயகருக்கு வெற்றி!

அரசன்:

வெற்றிஎன்ற சொல்லை விழிவழிநீர் ஏக்கம்
முற்றவுரைத் தாங்கு முடிக்கவிடா தெனினும்
கற்றைக்குழல் மாசார் வதனம், வெள் ளிதழ்கள்
பெற்ற நின்னைக் கண்டேன் வெற்றிபெரிதும் கொண்டேன்!

சிறு. அம்மா, இது யார்?

சகு. இது நீ செய்த புண்யம்! உன் புண்யப் பலனையே கேள்!

அர. (சகுந்தலாவின் அடியில் வீழ்ந்து)

வரிந்த மாலையைப் பாம்பென எண்ணி
வரைவுறும அந்தகன்போல
இருண்ட நெஞ்சினர் உளமிகு களிப்பிலும்
இயற்றுவர் தகாதன அன்பே!
சிறந்தஉன் வரவை வரைந்தனன், நெஞ்சம்
கலங்கினேன் வாடினேன் குற்றம்
மறந்திடு வாயென வேண்டினேன் விரும்பினேன்
மனங்கொள்வாய் மெல்லியல் மாதே!

சகு. எழுங்கள். நான் செய்த தீவினைப் பயன் தங்களின் நல்வாழ்வுக்கு இடையில் ஊறுசெய்து நின்றது. அதனுலல்லவா அருள் மயமாகிய தாங்கள் என்னை வெறுக்க நேர்ந்தது, ஸ்வாமி! (எழுகிருன்)

சகு. ஸ்வாமி, இந்த அபலைமீது தாங்கள் கருணை கூரும்படி என்ன நேர்ந்தது?

அரசன்:

அன்ளெருநாள் நீகண்ணீர் வடித்தழுது நாத்தழும்பி நின்றிருக்க,
மறதியினுல் நெடுமரம்போ லிருந்துவிட்டேன்!
இன்றழுந்தன் சிறுகோட்ட இமைசேர்ந்த கண்ணீரை என்கரத்தால்
மாற்றிமனக் கொதிப்பாற்றிப் பின்சொல்வேனே!

சகு. (கணையாழியைக் கண்டு) ஆமாம், இது அந்தப் பழைய கணையாழி அல்லவா?

அர. ஆமாம். இந்தக் கணையாழியைக் கண்ட பிறகுதான் எனக்கு உன் ஞாபகம் வந்தது.

சகு. இந்த மோதிரம் பண்ணினது பெரிய அக்ரமம். இதைக் காட்டிச் சமாதானம் செய்யலாம் என்று தேடுகிற சமயத்தில் அது மறைந்துவிட்டது.

அர. நல்ல காலம் வந்து சேர்ந்ததற்கு ஒரு அடையாள மாக இந்த வஞ்சி கையிலே இது மலரட்டும்.

சகு. இந்தத் திருட்டு மோதிரம் எனக்கு வேண்டாம். அது தங்கள் கையிலேயே இருக்கட்டும்.

மாதலி. மன்னவா, வாழ்க்கைத் துணையைக் கண்டடைந் தீர்கள்! புத்திரனைப் பார்த்து மகிழ்ந்தீர்கள்! தாங்கள் எடுத்த தெல்லாம் வெற்றியாகட்டும்!

அர. மாதலி, உன் சகாயத்தாலேயே என் எண்ண மெல்லாம் ஈடேறப்பெற்றேன். சரி, இது விஷயம் இந்திர னுக்குத் தெரியுமா?

மாதலி. (சிரித்து) தேவர்களால் அறிய முடியாதது எது? அரசே, மரீசி முனிவர் தங்களை எதிர்பார்த்திருக்கிறார், வருக.

அர. சகுந்தலா, குழந்தையை எடுத்துக்கொள். உன்னை முன்னிட்டே நான் பகவானைத் தரிசிக்கவேண்டும்.

சகு. பகவான் சந்நிதியில் தங்களோடு போவதற்கு எனக்கு வெட்கமாயிருக்கிறது.

அர. சரி, ஒரு சுபகாரியம் செய்யும்போது நீயும் கூடவே இருக்கவேண்டும். வா, போகலாம்.

(யாவரும் நடக்கின்றனர், மரீசியும் அதிதியும் உட்கார்ந்திருக்கின்றனர்)

மரீ. (அரசனைக் கண்டு) தாக்ஷாயணி, இவன் உன் புத்திரர்களுக்கு முன் அணியில் நின்று படை நடத்தியவன். செம்மை திறம்பாது ராஜ்ய பரிபாலனம் செய்பவன். துஷ் யந்தன் என்னும் நாமத்தான். இவன் கை வில் ஆற்றலால் இந்திரன் கை வஜ்ராயுதம் தொழிலற்று வெறும் பூஷணமாக விளங்குகிறது.

அதிதி. உருவமே அவர் பெருமையை விளக்குகிறதே!

மாதலி. மன்னவா, சகல தேவர்கட்கும் தாய் தந்தையர், இவர்கள் இருவரும் உம்மைக் காண வாஞ்சை கொண்டிருக்கிறார்கள். அருகிற் செல்லுக.

அர. மாதலி, தம்பதி இவர்கள்,

தக்ஷ மரீச முனிவழி வந்தவர்
தாமரை உதித்த பிரமனே யானவர்
உச்சிவாழ் பன்னிரு சூரியர்க் குமுதல்
இந்திர உபேஎந் திரர்களை ஈன்றவர்
யாகங் கட்கதி காரி யானவர்
எல்லாம் வல்லப்ர மத்தைத்தந் தவரே.

மாதலி. அப்படியே, நிரம்ப சரி.

அர. இந்திரனுடைய ஊழியன், அடியேன் துஷ்யந்தன் நமஸ்கரிக்கின்றேன்.

மரீ. குழந்தாய், நெடுங்காலம் இந்த ராஜ்யத்தை ஆண்டுவா.

அதிதி. குழந்தாய், இணையற்ற வீரனாக விளங்கு.

சகு. அடியாளும் குழந்தையும் நமஸ்கரிக்கின்றோம்.

மரீ. குழந்தாய், நீ புலோமை, உன் கணவன் இந்திரன், உன்மகன் ஜயந்தன். இதுதான் உனக்கு நான் தரும் ஆசீர்வாதம்.

அதி. குழந்தாய், உன் கணவன் உன்னைப் பாராட்டும்படி வாழ். உன் குழந்தையும் தீர்க்காயுளுடன் இருக்க! இரு பெருங்குடியும் செழிக்கச் சந்தோஷமாக வாழ்ந்துவாருங்கள். உட்காருங்கள். (யாவரும் உட்காருகின்றனர்)

மரீ. (ஒவ்வொருவரையும் சுட்டி) சகுந்தலா, பையன், நீ, அரசன் நீங்கள் மூவரும் சேர்ந்திருப்பது உண்மை, உயர்வு, ஒழுக்கம் மூன்றும் சேர்ந்த புண்ணியம் போல்,

அர. ஸ்வாமி, பூத் தோன்றியபின் கனி தோன்றும், மேகம் திரண்டபின் மழை பொழியும். இது உலகியல். ஆனால் எங்கள் விஷயத்திலே முதலாவது இஷ்டசித்தி, பின்பு இரண்டாவது தங்கள் தரிசனம், அப்பால் தங்கள் அநுக்ரஹம்! இதுவும் தங்கள் பெருங்கருணையே!

பூத்துக் காய்த்துக் கனி உண்டாகும்
புயலே திரண்டுபின் மழையும் பொழியும்
வாய்த்தகா ரணத்தால் காரியம் நடைபெறும்
வள்ளலே எமக்கு வாழ்வுமுன், வாக்குப்பின்

மாதலி. சொல்லாமலே செய்வர் பெரியோர்!

அர. ஸ்வாமி,

கடிய வேகத்தினுல் கட்புலன்போனது
களிறோ பிறிதோ வென்றெழு ஐயம்
அடிச்சுவ டறிந்தபோ தறவே யகலும்
அடியேன் கதையும் இதனையொத் துளதே.

ஸ்வாமி, அடியேன் தங்கள் அடியாள் இவளைக் காந்தர்வ முறையில் மணந்து, பின்னர் அவள் தன் இனஜனத்தாருடன் என்முன் வந்தபொழுது ஞாபக மறதியினுல் புறக்கணித்து; தங்கள் கோத்திரத்தைச் சேர்ந்த கண்வ மஹா ரிஷி வெறுப்புக்குப் பாத்திரனுனேன். நாளடைவில் நல் வினைப்பயன் போல் மோதிரம் கிடைத்தபோது நான் முன்பு மணந்தது மீண்டும் என் ஞாபகத்திற்கு வந்தது. ஏதேதோ விபரீதமாக என்னென்னமோ நடத்திவிட்டேன்.

மரீ. குழந்தாய், தவறு செய்தோம் என எண்ணி வருந்த வேண்டா. உன் சித்தம் எப்பொழுதும் நல்லதாவே இருந்தது. கவனிக்கிறுயா?

அர. கவனித்துக்கொண்டேயிருக்கின்றேன்.

மரீ. மேனகை சகுந்தலையை இட்டுக்கொண்டு தாக்ஷா யணியிடம் வந்தாள். அப்போது சகுந்தலா முகத்தில் தான் அப்ஸர தீர்த்தத்தில் இறங்கியதுபற்றிய துக்கக் குறிகள் காணப்பட்டன. உன் பிரிய மனைவி துருவாசரை உபசரி யாததால் அவர் சாபத்துக்குள்ளாகியதையும், கணையாழி யைக் கண்டபோது அவர் சாபவினை முடிந்ததையும் நான் தியானத்தில் அறிந்துளேன்.

அர. இதைக் கேட்டபின்பே என் மனவேதனை நீங்கியது.

சகு. (தன்னுள்) என் நாயகர் என்னைப் புறக்கணித்த தற்கும் நானே காரணம் என்பது எனக்கு நிரம்ப சந்தோஷம். துர்வாஸர் சாபம் இருந்த விஷயம் உண்மையில் எனக்குத் தெரியாது. மேலும் பிரிவாற்றாமையால் மறந்திருந்தேன் போலும். சரிதான் இதனால்தான் அநசூயாவும், பிரியம் வதாவும் இந்தக் கணையாழியை உன் புருஷனிடம் காட்டு என்று சொன்னார்கள்போலும்.

மரீ. குழந்தை, இப்போது உண்மையைத் தெரிந்து கொண்டாய். இனி உன் புருஷன்மேல் எவ்வித வருத்தமும் கொள்ள நீதியில்லை. துர்வாஸர் ஸாபத்தால் உன் நாயகன் உன்னைத் துரத்தினார், முன் நடந்ததை மறந்து கன்னெஞ்சரா னார். கண்ணாடிமேலிருக்கும் தூசியைத் துடைத்தபின், அது தன் முன் இருக்கும் உருவைத் தெளிவாகக் காட்டும். அது போல இருள் அகலப்பெற்றார். உன் பெருமையும் விளங் கியது. இனி சந்தோஷமாக வாழுங்கள்.

அர. சந்நிதான வாக்குப்போல் இருக்கட்டும்.

மரீ. உனக்கும் சகுந்தலைக்கும் தோன்றியவன் இவன். இவனுக்குப் பிறந்தநாள் சடங்குகள் நாங்கள் செய்துவைத் தோம். ஏற்றுக்கொண்டனையா?

அர. ஸ்வாமி, அவனலன்றோ என்குடி நிலைக்கவேண்டும்!

மரீ. உன் வம்ஸத் தோன்றல் இக்குழந்தை. ராஜாதி ராஜனாக வாழ்வான். ஒரே எழுச்சியில் கடல் கடந்து சப்த கண்டங்களையும் வலம்வந்து ஜயித்துநிற்பான். அவனை எதிர்ப்பார் கிடையாது. இங்குள்ள சகல உயிர்களையும் அடக்கி ஆளும் ஆற்றல் பெற்றமையின், 'சர்வமதனன்' எனப் பேர்படைத்த அவன், இனி இராஜ்ய பாரத்தைத் தாங்குதலின் 'பரதன்' என்னும் பெயரோடு விளங்கட்டும்.

அர. பையனுக்கு வேண்டிய சகல ஸம்ஸ்காரங்களையும் தேவரீரிடத்திலிருந்து பெற்றிருக்கின்றான். ஆதலின் இவனே எனக்கு எல்லாம் என்று இருக்கின்றேன்.

அதிதி. ஸ்வாமி, மேனகை தன் புத்திரிமீது கொண்ட வாஞ்சையால் தாதியுருவத்தில் என்னுடனே இருக்கிறாள். கண்வருக்கும் அவர் மகள் பெற்ற பேற்றினை அறிவியுங்கள்.

சகு. (தனக்குள்) என் ஆசையை அம்மா சொல்லி விட்டார்கள்.

மரீ. கண்வ மா ரிஷி தம்முடைய தபோ பலத்தால் யாவற்றையும் அறிந்தேயிருக்கிறார்.

அர. அதனால்தான் என்னையும் வெறுக்காதிருக்கிறார்.

மரீ. இருந்தாலும், இந்த ஒரு மங்கல காரியத்தை அவருக்கு அறிவிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். யார் அங்கே? யார்?

சிஷ்யன். (வந்து) மஹ ரிஷி, அடியேன் காலவன்.

மரீ. காலவா, உடனே ககன மார்க்கமாகக் கண்வர் ஆச்ரமத்திற்குச் சென்று, நான் சொல்லி அனுப்பியதாய், துர்வாஸரின் ஸாப நிவர்த்தியாகித் துஷ்ய மஹா ராஜன் சகுந்

தலாவையும் அவள் புத்திரனையும் சேர்த்துக்கொண்டார் என்று அறிவி.

காவ. உத்தரவு. (போகிறான்)

மரீ. துஷ்யந்தா, உன் மனைவியையும் குழந்தையையும் இட்டுக்கொண்டு இந்திர விமானத்திலேறி உன் தலை நகருக்குச் செல்.

அர. சமுக உத்தரவுப்படியே.

மரீ :

இந்திரன் மழைக் கொடையால் எழில்மிகும் உனது நாடு
அந்தமில் யாகஞ்செய்து அமரரைத் திருப்தி செய்வாய் !
சுந்தரத் தம்பதியாய்ச் சுகத்துடன் ஊழிவாழ்ந்து
இந்த நல் உலகிரண்டும் இசைவளர் தருமம் நாட்டு !

அர. மஹா ரிஷி, அவ்வாறே முயலுகின்றேன்.

மரீ. குழந்தாய், உனக்கு இன்னும் என்னால் ஆக வேண்டியதுண்டாயின், கேள்.

அர. தங்களின் அனுக்ரஹம் இருக்கும்பொழுது யான் கேட்கவேண்டியதாக வேறு என்ன உண்டு? பரதனின் நாமம் நிலைக்கத் தங்களின் மங்களவாக்காக

மன்னவர் மாநில நலங்கருதி ஆள்க !
மறைமலர் வாணியார் கலையுலகு மல்க !
செந்நிறத் தூடுநீல் சத்திசேர் சுயம்பு
சென்மமெற் கில்லெனச் செய்தருளேபுரிக !